


# தமிழரசு

1-12-1978 50காசு





தோற்றம் : 10-12-1878

மறைவு : 25-12-1972.

# மதுவிலக்கால் வரும் வாழ்வு – அதை மறந்து விட்டால் பெரும் தாழ்வு

இந்நாடு பல நூறு ஆண்டுகளாக அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டு நொந்து போய்விட்டிருந்தது. இன்று விடுதலை பெற்ற இந்நாளிலும்கூட இங்கே வாழுகின்ற மக்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமான பேர் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழுகின்றனர். முழு மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டும் என்று கூறுகின்ற வாதத்திற்கு எதிராக வலிமையான எதிர்வாதம் இதுவரையில் எடுத்துரைக்கப்படவில்லை. இந்த நாட்டில் குடிப்பழக்கம் என்கின்ற துயரக்கேடு குடிக்கின்றவனையும் அவனுடைய குடும்பத்தாரையும் எல்லா வகையிலும் நொடித்துப் போகச் செய்கிறது. எனவே, இந்த நாட்டின் இலட்சக் கணக்கான ஏழை மக்களுடைய நல்வாழ்வையும் நலத்தையும் கருதி மதுவிலக்கு முழுமையாக வெற்றி பெற வேண்டுமென்று விருப்பம் கொள்ளாத தேசியவாதி எவனும் இருக்க மாட்டான். நமக்கு மிகப்பெரிய மிக மோசமான சவாலாக இருந்து நாட்டினைக் கேட்டில் ஆழ்த்துவது வறுமையே. இந்தச் சவாலைச் சமாளிப்பதற்காக ஏழ்மையில் இருந்தும், நொடிப்பு நிலையிலிருந்தும் கோடிக் கணக்கான மக்களை மீட்டுக் காக்கின்ற மதுவிலக்கை ஆதரிக்காத இந்நாட்டுக் குடிமகன் எவனும் இருக்க மாட்டான். இவ்வாறு மதுவிலக்கு என்பது பொய்யும் புரட்டும் அல்ல. வறுமையை எதிர்த்து நாம் நடத்துகின்ற வீரப்போரில் மதுவிலக்கைச் செயற்படுத்துவது முக்கியமானதொரு அங்கமாகும்.


**மதுவிற்கு எதிராக மக்கள் கருத்தைத் திரட்டுதல்:**

இந்தப் பகுத்தறிவின்படி, இந்தியா முழுவதிலும் முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட வேண்டுமென்று நாம் எல்லோரும் மிக ஆவலுடன் முடிவு எடுத்திருக்கிறோம். நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தில் மதுவிலக்கு என்பது மிக இன்றியமையாத தேசியக் கொள்கையாக இடம் பெற்றுள்ளது. நமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் காலத்திலிருந்தே இந்த உயரிய இலட்சியத்திற்காக நாம் போராடி வந்துள்ளோம் என்பதை மறக்கவியலாது. ஏறத்தாழ 1912 ஆம் ஆண்டிலேயே, கோபால கிருஷ்ண கோகலே அவர்கள், ஆங்கிலப் பேரரசில் இந்திய ஆட்சிப் பொறுப்பு வகித்துவந்த அமைச்சரிடம் தெரிவித்த கருத்தாவது:

"இந்திய மக்களின் உளப்பாங்கினை ஒற்றித்தான் முழு மதுவிலக்கு என்னும் கொள்கையை நாங்கள் வற்புறுத்துகிறோம் என்பது உண்மை." 1925-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21-ஆம் நாளில் ஏறத்தாழ 30,000 இந்திய மகளிர் முழு மதுவிலக்கை உடனே செயற்படுத்துமாறு வைஸ்ராய் அவர்களை வேண்டிக்கொண்டு மனு ஒன்றைக் கொடுத்தார்கள். இந்தியாவில் மருந்துக் காரியங்களுக்காகவும், அறிவியல் பணிகளுக்காகவும் அல்லாமல் மற்றப்படி போதையூட்டுகின்ற மதுவகைகள் உற்பத்தி செய்வது, தயாரிப்பது, விற்பனை செய்வது, இறக்குமதி செய்வது ஆகியவற்றை ஒழிக்க வேண்டும் என்பதே அரசின் முடிவான கொள்கையாக இருக்க வேண்டுமென்பதை ஏற்குமாறு அன்றைய அரசுக்குப் பரிந்துரை செய்து, அந்நாள் மத்திய இந்தியச் சட்டமன்றம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

சுயராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக 1928-ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிகளின் மாநாடு ஒன்று கல்கத்தாவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் நாம் மேலே கூறியது போல முழு மதுவிலக்கை அரசின் முடிவான கொள்கையாக ஏற்குமாறு கேட்டுக் கொள்கின்ற ஒரு

## மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி



பகுதியை அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளைக் குறித்த அத்தியாயத்தில் சேர்க்க வேண்டுமென அம் மாநாடு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இவையெல்லாம் இந்தியநாட்டு மக்கள் விடுதலைப் போராட்டக் காலத்தின் போதே முழு மது விலக்கிற்குச் சாதகமாகத் தங்களுடைய வலுவான கருத்தை ஒருமுகமாகத் தெரிவித்துள்ளார்கள் என்பதற்குத் தெளிவான சான்றுகளாக அமைகின்றன.

**அண்ணல் காந்தியடிகளார்**

பொதுமக்கள் தெரிவித்த இந்த ஒருமித்த கருத்தினைத்தான் காந்தியடிகள் தம்முடைய பேச்சிலும், எழுத்திலும் பலமுறை எடுத்துரைத்துள்ளார். அவருடைய பேச்சுகளிலும், எழுத்துக்களிலிருந்தும் சில பகுதிகளை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தமாகும்.

> ''முதன்மைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மதுவிலக்குக் கொள்கையைச் செயற்படுத்துவதால் ஏற்படும் செலவைக் காங்கிரஸ் கட்சி கருதிப்பார்க்க முற்பட்டால் அக்கொள்கையைச் செயற்படுத்தவே முடியாது; அதுவெறுங் கூப்பாடாகவே அமைந்துவிடும்.

* * *

> ''பல காலம் இனிமையாகவும், அமைதியாகவும் வாழ்ந்த நல்ல குடும்பங்களில் குடி என்னும் கேடு எத்தகைய தீங்கினை விளைவித்துத் துயரத்தில் ஆழ்த்தும் என்பதைக் குடிப்பழக்கமுள்ள கணவன்மார்களையுடைய பெண்களே உணர்வர்.''

* * *

> ''நஞ்சுடைய பாம்பு தீண்டினாலும் உடல் மட்டுமே அழியும். ஆனால், குடி என்னும் நஞ்சு உடலையும் ஆத்மாவையும் ஒருசேர அழிக்கவல்லது.''

* * *

குடியை ஒழிப்பது என்பது, ஒருவன் தன்னைத்தானே தூய்மையாக்கிக் கொள்கின்ற உயர்ந்த நெறிமுறை என்றும், நல்லொழுக்கத்தின் உயர்ச்சி என்றும், பொருளாதாரத் தாழ்வினின்று பெறும் விடுதலை என்றும், அளவிலாத் தேவைகள்—செலவுகள் இவற்றிலிருந்து விடுபடுதல் எனவும், தூய்மையான ஆரோக்கியமான வாழ்க்கையைத் தேடிக் கொள்வது என்றும் அண்ணல் காந்தியடிகள் கருதினார். இவ்வாறு காந்தியடிகளைக் காட்டிலும் மிகச் சிறப்பாக பொதுமக்களின் கருத்தை எடுத்து உணர்த்த வல்லவர் யார்? காந்தியடிகள் அறிந்ததைப்போல இந்தியாவின் நிலைமைகளை, மிகச் சரியாக மிகத் தெளிவாகக் கற்று உணர்ந்துள்ளதாக வேறு யார் தான் கூறிக் கொள்ள முடியும்?

**அனைத்துச் சமயங்களும், மதுவின் தீமைகளைக் கண்டிக்கின்றன:**

வேதகாலம் தொட்டே நமது சமய இலக்கியங்கள் யாவும் மது அருந்துதல், சூதாடல் ஆகியவற்றின் தீய விளைவுகளை மிகக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளன.

> **''நம் நாட்டில் மதுவருந்துவோர் ஆயிரக் கணக்கில் உள்ளனர் என்கிற அவலநிலையைக் காட்டிலும் இந்நாடு வறுமையில் கெட்டழிந்து போனாலும் கவலைப்பட மாட்டேன்.**
>
> ''நம்முடைய நாட்டில் மதுவிலக்கைச் செயற்படுத்துவதன் மூலம் நாம் நமது கல்வி வளர்ச்சிக்கு எதுவும் செலவிட முடியாமற் போனால் கூட, கல்வியில்லாத இந்தியாவையே நான் மேல் என்று கருதி வரவேற்பேன்.
>
> **—அண்ணல் காந்தியடிகள்**

நம்முடைய, இதிகாசங்களும், புராணங்களும் வல்லமையும், ஆற்றலும் பெற்ற கொடுங்கோலர்கள் பலர் எவ்வாறு மதுவாலும், மங்கையராலும் கெட்டொழிந்தனர் என்பதையும், கடவுளின் கருணையால் மக்கள் காக்கப் பெற்றனர் என்பதையும் நமக்கு அழகுற எடுத்தியம்புகின்றன. பின்வரும் கருத்தில் ஒரு பழமொழி உண்டு. ''உலகத்திலுள்ள அனைத்துப் பாவங்களையும் ஒரு தராசிலும் மது என்னும் பாவத்தை இன்னொரு தராசிலும் வைத்தால் சரி நிகராயிருக்கும்'' குடியால் அறிவு கெடுகிறது; மனத்தில் அறிவு நிலை பிறழ்ந்தபொழுது குழப்பம் நிலவுகிறது. அந்த வேளையில் பாவங்கள், பழிகள் எளிதில் விளைந்து விடுகின்றன. குற்றங்களைச் செய்கிறபொழுது அறிவற்றோர் பழியால் விளையும் துயரங்களுக்குப் பலியாகின்றனர். குடிப்பழக்கத்திற்கு அடிமையானவன் எல்லாவற்றையும் கைவிடுகிறான்! எல்லாவற்றையும் அழிக்கிறான்; அவனது அறிவு நிலைகெட்டுத் தடுமாறி நிற்பதால் பொய் எது, உண்மை எது என்று அறியாமல் மயங்கி உளறுகிறான். குடிபோதையில் தள்ளாடிக் கிடக்கின்ற இழிமகன் ஒருவன், பெற்ற தாயையே விரும்பும் ஈனச் செயலில் இறங்கி விடுகிறான். குடிப்பழக்கத்தின் கேட்டினை ஏறத்தாழ உலகின் எல்லாச் சமயங்களுமே கடுமையாகக் கண்டனம் செய்கின்றன.

**மிக அண்மையில் மருத்துவ ஆராய்ச்சித்துறை கண்டறிந்த உண்மைகள்:**

நவீனகால மருத்துவ இயல் மதுவை உறுதியாகக் கண்டனம் செய்கிறது. போதையூட்டுகின்ற பானங்கள் அனைத்தும் நச்சுத் தன்மை உடையவை என்று மருத்துவ இயல் கூறுகின்றது. தனி மனிதனுடைய சுதந்திர நிலைக்கு மது அல்லது சாராயம் மற்றும் போதையூட்டுகின்ற மருந்துகள் அனைத்தும் மிகக் கடுமையான கொடிய எதிரிகள் என்று பேராசிரியர் ஷார்ஃபென்பர்க் கூறுகிறார்.

மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநராகவும், ராயல் சொசைட்டி செயலாளராகவும் இருந்த டாக்டர் எச். எச். டேல், ராயல் கமிஷன் முன்னிலையில் பின்வருமாறு தமது முடிவை எடுத்துரைத்துள்ளார்: ''திறமையாகப் பணிபுரிவதற்கு மது ஒருபோதும் உதவியாக இருந்தது இல்லை. ஊறுபயக்கின்ற ஒரு தடையாகவே இருந்து வந்துள்ளது.'' ஒவ்வொரு துளி மதுவும் விஷமே. ''மருந்துகளும், மனமும்'' என்கின்ற தனது நூலில் டாக்டர் தெராப் பின்வருமாறு கூறுகிறார்:

''மனச்சாட்சியுள்ள மருந்தாக்க வல்லுநர் எவரும் ஆல்கஹால் என்பது மிகக் கொடிய புரோட்டோபிளாஸ்மிக் நஞ்சாக விளங்கும் பொருள் என்று சொல்வதைத் தவிர, வேறு எந்த வகையிலும் அதனைக் குறிப்பிட மாட்டார்கள். மது நமக்குச் சுறுசுறுப்பையும், புத்துணர்ச்சியையும் அளிக்கின்ற பொருள் அல்ல என்றும், அதற்கு மாறாக நமது சுறுசுறுப்பையும், புத்துணர்ச்சியையும் அது சிதைத்துவிடுகிறது என்பதையும் அவர் கூறுகின்றார். நம்முடைய களைப்பையும், அயற்சியையும் அது ஒருபோதும் அகற்றியதில்லை. மாறாக, நமது களைப்பைப் பெருக்குகிறது. மது நம்முடைய உடலில் எந்தெந்த உறுப்புக்களைத் தாக்குகிறது தெரியுமா? அது மூளையைத் தாக்குகிறது, கல்லீரலைத் தாக்குகிறது. சிறுநீரகத்தை அரித்து விடுகிறது, வயிற்றைக் குடைந்து புண்ணாக்குகிறது; ஏன் நமது இதயத்தையும், உடலின் ஒவ்வொரு பாகத்தையும், அதில் ஓடுகின்ற குருதியையும் கெடுக்கிறது என்பது உண்மை. ஸ்டராஸ்போர்க்கைச் சேர்ந்த மருந்தாக்கவியல் பேராசிரியர் ஆட்டோ ஷ்மீட்பர்க் என்பவர் கூறுவதாவது:

''குளோரோபாரத்தைப் போலவும், ஈதரைப் போலவும் மதுவும் மயக்கமூட்டும் பொருளே; மேலும் மங்கச் செய்வதும், மந்தமாக்குவதும், போதையூட்டி நிலைமறக்கச் செய்வதும் இதன் குணங்கள். அன்றியும், இது ஒரு புரோட்டோபிளாஸ்மிக் நச்சுப் பொருள். இது உடலில் தொடர்பு கொள்கின்ற ஒவ்வொரு திசுவின் ஆற்றலையும் குறைத்து விடுகிறது.'' புகழ்பெற்ற மருத்துவ விஞ்ஞானிகள் பலரும் இது பற்றிக் கூறியிருப்பதாவது:

''நவீன அறிவியல் மருத்துவத் துறையில் சிகிச்சை அளிக்கின்ற ஒரு துணைப் பொருளாக ஆல்கஹால் ஒருபோதும் இடம்பெறாது. ''நிமோனியா 'கிரிப்பே' போன்ற கடுமையான சளிக்காய்ச்சல் நோய்களின் சிகிச்சைக்கு அறிவியல் மருத்துவர்கள் ஆல்கஹாலே இனி மேல் பயன்படுத்த மாட்டார்கள். இது நன்மையளிக்காது என்பது மட்டுமல்ல, அத்தகைய நோய்களின்போது இது மிகக் கடுமையான தீங்கினை விளைவிக்க வல்லதுமாகும்.'' ''எந்த நோய்க்குமே ஆல்கஹால் ஒரு மருந்துப் பொருளாக அல்லது அப்போதைக்குச் சிகிச்சையளிக்கின்ற துணைப்பொருளாக இல்லை.'' பக்கவாத நோய், முடக்குவாத நோய் ஆகியவற்றிற்கு ஆல்கஹால் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. எந்த நோய்க்கும் ஆல்கஹாலை மருந்தாகப் பயன்படுத்துவதை உலகின் தலையாய மருத்துவர்கள் பலரும் நேரடியாகக் கண்டித்து வருகிறார்கள்.

**மது அனுமதிச் சீட்டு என்பது வெறும் பித்தலாட்டம்!**

நவீன மருத்துவ ஆராய்ச்சிகள் பெரிதும் வளர்ந்துள்ளன. எல்லா நோய்களுக்கும் சிறப்பான வகையில் குணம் அளிக்கின்ற மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலையில் அறிவியல் முன்னேறிய இந்த நாளிலும்கூட பெரிய பெருமக்கள் மருத்துவக் காரணங்களுக்காக மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள் வேண்டுவதும், அவ்வாறே அவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படுவதும் பெரிதும் வியப்பாக உள்ளது.

இப்போது மதுவானது எந்த நோய்க்கும் மருந்தாகாது; அதற்கு மாறாக மிகக் கடுமையான நஞ்சாக அமைகிறது. நவீன அறிவியல் மருத்துவம் முன்னேறியுள்ள நிலையில் எல்லா நோய்களுக்கும் சிறந்த மருந்துகளும் எல்லா வகையான உடல் துன்பங்களுக்கும் சிறந்த மருந்தாக்க முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆல்கஹால் இப்போது முக்கியமான ஒன்றல்ல. இந்த நிலையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவுக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும்.

மேலும், மது அனுமதியைப் பெற்று வைத்திருப்பவர்கள் பலர் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அளவுக்கு மேல்மேலும் அதிக எண்ணிக்கையில் எவ்வாறாவது மதுப்புட்டிகளைப் பெற்று விடுகின்றனர் என்றும், அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் அளிப்பதற்காக இந்த மதுப்புட்டிகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்றும் இப்போது புகார் கூறப்படுகின்றன. அன்றியும் மது அனுமதி வைத்திருப்பவர்கள் பலர் நல்ல ஆரோக்கியமும், உடல் வலிமையும் உடைய பணக்காரர்களே என்பதும் தெரிய வந்துள்ளது.

**மதுவிலக்கால் மாநில அரசுகளுக்கு வருவாய் குறையும் என்பது ஒரு கட்டுக்கதை:**

மதுவிலக்கைச் செயற்படுத்துவதன் காரணத்தால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏதாகிலும் ஏற்படுமானால் நாம் அதுபற்றி எண்ணிப் பார்க்கும்பொழுது மதுவிலக்கால் நாம் அடைந்த சமுதாய நன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். குடிப்பழக்கத்தால் விளைகின்ற பொருளாதார இழப்புக்கள், மற்றும் ஏனைய வகை இழப்புக்களை ஈடு செய்வதற்கு மதுவினால் கிடைக்கும் வருவாய் ஒருபோதும் உதவாது.

மதுவிலக்கைச் செயற்படுத்தியதன் விளைவாக ஏற்பட்ட வருவாய் இழப்பைச் சரிக்கட்டுவதற்காகவே விற்பனை வரி, கேளிக்கை வரி ஆகியன கொண்டு வரப்பட்டன. இன்னும் மதுவிலக்கைச் செயற்படுத்தாத பல மாநிலங்கள் இந்த வகையில் பல்லாண்டுகளாக கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் பெற்று வருகின்றன; அதே சமயத்தில் அவை மதுவிலக்கைச் செயற்படுத்தவும் இல்லை. அதனால், ஏழை மக்களிடமிருந்து மதுவின் மூலம் கிடைக்கின்ற வருவாயின் வாயிலாகப் பல கோடி ரூபாயைப் பெற்று வருகின்றன. மதுவிலக்கால் ஏற்படுகின்ற வருவாய் இழப்பில் 50 சதவீதத் தொகையை அளித்து உதவ மத்திய அரசு அன்புடன் முன்வந்துள்ளது. தற்போது இந்திய மாநிலங்கள் அனைத்தும் இனிமேலும் கால தாமதம் இன்றி மதுவிலக்கை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும்.

மதுவிலக்கைச் செயற்படுத்துவதன் வாயிலாக மாநிலங்கள் அனைத்திற்கும் மது வகையில் கிடைக்கின்ற வருவாய் ரூ. 750 கோடி அளவிற்கு இழப்பு ஏற்படும் என்று வாதிக்கப்படுகிறது. மது வகையில் ஆயத்தீர்வை மூலமாக அரசுக்கு ஒரு ரூபாய் வருமானம் வந்தால், ஏழைக் குடிகாரனிடமிருந்து நான்கு ரூபாய் பறிக்கப்படுகிறது என்பது பொருள்; எவ்வாறென்றால், மது விற்பவனுக்கு இலாபம், மூலப்பொருளின் விலை, புட்டியின் விலை போன்ற வகைகளில் ஆகும் செலவுகளை அவனே கொடுக்க வேண்டும்.

எனவே, மதுவை உட்கொள்ளுகின்றவர்களுக்கு ஏற்படுகின்ற மொத்த இழப்பு ரூ. 3,000 கோடியாகும் (இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் பொருந்துவது). இப்படி விரயமாகிற தொகையைச் சேமிக்க முடிந்தால் மக்களின் வாழ்க்கை முறைகளை மேம்படுத்துவதற்கு அத்தொகையைப் பயன்படுத்தலாம். அவர்கள் வாழ்க்கை முறை மேம்படுவதால் அவர்கள் வாங்குகின்ற பொருட்களின் மூலமாகப் பெருமளவிற்கு விற்பனை வரி அரசுக்குக் கிடைக்கும்; அன்றியும் கேளிக்கை வரியாகவும் பெருந்தொகை அரசுக்குக் கிடைக்கும். இவ்வாறு அரசும் இதனால் ஆதாயம் பெறும். குடிப்பழக்கம் ஒழிவதால் முன்னர் குடித்து வந்து, பின்னர், அதனைவிட்டு விட்ட மக்களது குடும்பவாழ்வில் மகிழ்ச்சி நிலவும்.

மதுவிலக்கின் விளைவாக, தொழிலாளர்கள் மகிழ்ச்சி பெறுவது திண்ணம். தொழிலாளர்கள் வேலைக்கு வராமல் அடிக்கடி நின்று போவது என்பது குறைந்து விடும். விபத்துக்கள் குறையும். வேலை முடக்கங்களும் குறையும். எனவே, பெருந் தொழில்களும் தொழிற்சங்கங்களும், மதுவிலக்குக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இவையன்றி, குற்றங்கள் குறைந்திடுவதால் சுகாதாரக் கேடு பிரச்சினைகளும் குறைவதால், விபத்துக்களும் குறைவதால் இன்ன பிற வழிகளில் பெருமளவு செலவை அரசு மிச்சம் பிடிக்க இயலும்.

**இலஞ்ச ஊழலும், சட்டம்—ஒழுங்கும்:**

மதுவிலக்கைச் செயற்படுத்தினால் நிர்வாகத்தில் ஊழல் மலிந்து விடும் என்று சிலர் நம்பமுடியாத கற்பனை வாதங்களை முன் வைக்கிறார்கள். இந்தத் தவறான கருத்தும் கூட மதுவிலக்கைச் செயற்படுத்திய தமிழ் நாடு, குஜராத் மாநிலங்களில் நிலவுகின்ற நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் அடிபட்டுப்போகும். இவ்விரு மாநிலங்களிலும், முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டுள்ளது. நிச்சயமாக மற்ற மாநிலங்களைக் காட்டிலும் ஊழல் மிகக் குறைவு; அது மட்டுமல்லாமல், இங்கே சட்டம் ஒழுங்கு நிலைமையும்கூட மிகச் சிறப்பாக உள்ளது. இவ்விரு மாநிலங்களிலும் காவல்துறை நிர்வாகம் மிகச் சிறந்து விளங்குகிறது.

**மதுவைக் குறைந்தளவு பயன்படுத்தினால் தீங்கில்லை எனக் கூறும் கருத்து :**

மதுவை மிக அளவாக உட்கொண்டால் அதனால் தீங்கில்லை என்று பலர் வாதிடுகின்றனர். ஆனால், மேலை நாட்டாருடைய அனுபவம் என்னவென்றால், அங்கே அளவாகக் குடித்து வந்தவர்களும், சிறிது காலத்தில் அதிக அளவில் குடிக்கத் தொடங்கி, குடிப் பழக்கத்திற்கு அடிமையாகிவிடுகிறார்கள். என்பதுதான். சிலர், நான் குடிப்பதுண்டு, ஆனால் குடிக்கு அடிமையாவதில்லை; நிதானம் தவறாமல் இருப்பேன், என்று பெருமையடித்துக் கொள்வார்கள். ஆனால், அவர்களும்கூட இறுதியில் மதுப்புட்டிக்கு அடிமையாகி விடுகிறார்கள். இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கத் தொடங்கிய பலரும் பிறகு புட்டி புட்டியாகவும், பீப்பாய் பீப்பாயாகவும் குடித்துப் பெருங் குடியர்களானார்கள் என்று காட்டுவதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

**கள்ளச்சாராயம் :**

மதுவிலக்குக்குக் கள்ளத்தனமாகப் பிறந்த குழந்தை தான் கள்ளச் சாராயம்என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. மதுவிலக்கு அமலில் இல்லாத மாநிலங்களில் கூட கள்ளச் சாராய உற்பத்தியின் விற்பனையும், மிகப் பல மடங்குகள் அதிகரித்துள்ளன என்பதைக் காட்டுவதற்கான புள்ளி விவரங்கள் உள்ளன. அண்மைக் காலத்தில் குஜராத், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களும் மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்துச் செம்மையான நடவடிக்கைகைகள் எடுப்பதற்கு முனைந்துள்ளன.

**உலகப் புகழ்பெற்ற அறிஞர்களும் கவிஞர்களும் :**

உலகப் புகழ்பெற்ற அறிஞர்களும் கவிஞர்களும் குடிப் பழக்கத்தைக் கண்டனம் செய்திருக்கிறார்கள். உலகப் புகழ் வாய்ந்த கவிஞர் 'எவாஞ்சலின் பூத்' என்பவர் குடிப் பழக்கத்தின் கேடுகளை மிக உருக்கமாக, மனத்தில் ஆழப்பதியும் வண்ணம் ஒரு கவிதையில் வடித்துள்ளார். அதன் கவிதை வடிவத் தமிழாக்கம் பின்வருமாறு:—

"..... .....
குடியெனும் கொடிய பழக்கம் இங்கே
கூற்றென இழைத்த கொடுமைகள் எண்ணில;
.... .... .....
குடித்த குருதிப் புனலுக்கு அளவில்லை
குடிப் பழக்கத்தால் கோடியும் தொலைந்தன
மதுவைப் பற்றி மற்றெதும் விற்ற
மாண்பிலார் செயல்கள் மனத்தை உருக்கிடும்;
வீடு வாசல் விட்டவர் எண்ணிலார்
மாடு கன்று மக்கள் சுற்றம்
தேடும் செல்வம் யாவும் தொலைத்தோர்
கூடா வொழுக்கம் குறுகிட வீழ்ந்தோர்
'குடிலன்'களாகக் குணம்மிகத் தாழ்ந்தோர்
கொடுமை வஞ்சகத்தின் கொள்கலன் ஆனோர்
தொகையிங் கெண்ணிடத் தொலையாது
அம்மா;
குடிப்பழக்கம் வந்து கூற்றென மாய்த்த
குழந்தைகள் வெள்ளம் கொள்ளிட மில்லை;
நல்மண உறவில் நடப்பெற்ற பயிர்கள்
பொல்லாக் குடியால் பொசுங்கித் தீய்ந்தன,

பாலும் பளிங்கும் போலத் தூய
வெள்ளை உள்ளங்கள் கறைப்பட்டு வீழ்ந்தன!
உள்ளத்தைக் கொன்ற ஒவ்வாக் குடியிவன்
உடலுக்கு விளைத்த ஊனமும் எண்ணில:
கண்ணொளி பறித்துக் கையும் காலும்
பின்னிக் கொள்ளவும் பின்ன முறவும்
பேத முறவும் சேதம் புரிந்தது;
பகுத்தறிவை இங்கு பாழ்படுத் திற்று;
ஆண்மையை வீழ்த்தி அவலம் செய்தது;
பெண்மை என்னும் பெருங்கலன் தன்னை
பேணும் மகளிரின் பெருமையைச் சிதைத்து
சிறுமையில் ஆழ்த்திக் கொடுமை புரிந்தது!
குடியால் மடிந்த குடும்பம் பலப்பல
குடியால் முறிந்த மனங்கள் எண்ணில
குடியால் சிதறுண்ட உயிர்கள் கோடி!
குடிப்பழக் கத்தால் தற்கொலை முனைக்குக்
குறித்துச் சென்றோர் எண்ணிலர்; அந்தோ!
உலகைத் தழுவிய மரணப் பேரலைகளை
எழுப்பிப் பாய்ந்த பெருவெள்ள மாக
வந்த போர்கள், கொள்ளை நோய்கள்
உயிர்கொல் நஞ்சுக் கலவைகள் யாவிலும்
கூற்றத்தின் ஆற்றல் குறைவறப் பெற்ற
குடிக்கேடு நிரப்பிய இடுகா டுகளே

மிகுதியாய் இங்கு மீந்திடக் காண்பீர்;
இனியும் இந்தக் குடியெனும் பழக்கம்
படிமீ திருக்கப் பார்த்திருப் பீரோ?

**குடிப்பழக்கமும் நாட்டுப் பாதுகாப்பும்:**

நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்கு மதுவகைகள் இன்றியமையாத் தேவை என வாதிடப்படுகிறது. அது ஒரு தவறான கருத்தாகும். அதனை முடிந்த அளவிற்கு விரைந்து திருத்திக் கொள்ள வேண்டும். உலகத்தில் பல நாடுகளின் இராணுவத் தலைவர்கள் பலரும் மது ஒரு பெரிய தொல்லை என்று எடுத்துரைத்துள்ளார்கள். இரண்டாம் உலகப் பெரும்போரில் 1941-ஆம் ஆண்டில் அமெரிக்கக் கடற்படை இருந்த துறைமுகத் தளமான பெர்ல் ஹார்பரில் ஜப்பானியர்கள் குண்டு வீசித் தாக்கினர். அமெரிக்கக் கடற்படை பெருமளவிற்கு அழிவுக்கு உள்ளாயிற்று. அதற்குப் பெரிதும் காரணமாயிருந்தது அதற்கு முந்தைய இரவில் கடற்படை வீரர்களும், இராணுவ வீரர்களும் முழுக் குடி போதையில் இருந்ததேயாகும். அதுமட்டுமல்ல, அந்தப் போரின் தொடக்க ஆண்டுகளில் பிரான்சு நாடு மிக விரைந்து வீழ்ச்சியுற்றதற்குக் காரணம் என்ன என்பதை மார்ஷல் பீட்டெயின் என்பவரின் சொற்களால் அறியலாம். ''எங்களது வீழ்ச்சிக்குக் காரணம் இராணுவ வீரர்கள் அனைவரும் குடித்துத் தள்ளாடிக் கொண்டிருந்ததும், அவர்களால் போரிட முடியாததும் ஆகும்.''

**அமெரிக்க நாட்டில் மதுவிலக்கு எவ்வாறு தோல்வியுற்றது ?**

மதுவின் தொல்லை அமெரிக்க மக்களைப் பெரிதும் துன்பத்திற்கு ஆளாக்கியது. அந்த நாட்டு மக்களுக்கு மது உற்பத்தியும் விற்பனையும் தடை செய்யப்பட வேண்டும் என்று நம்பும்படியாக எடுத்துரைப்பதற்குப் பல ஆண்டுகள், பல தலைமுறைகள் பிடித்தது. 1920-ஆம் ஆண்டில் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் மதுவிலக்கின் பொருட்டு 18-வது திருத்தத்தை ஏற்றுக் கொண்டது. அதன் பிறகு இந்தச் சமூக நோய் ஒழித்துக் கட்டப்பட்டது என்று மக்கள் பெரிதும் மகிழ்ச்சியுற்றனர். ஆனால், 1924-ஆம் ஆண்டில் மதுவிலக்குக்கு எதிரான ஒரு சங்கம், செல்வாக்கு வாய்ந்த சில அதிகாரமுடைய குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் குழு, சட்டம், ஒழுங்கினைப் புறக்கணித்து குற்றங்களைப் புரிந்து ஒழுங்கின்மையைக் கைக் கொண்டு அதில் மகிழ்ச்சியும், எக்காளமும் கொண்டு, அதனால் ஆதாயம் பெற்று, பயனடைந்து வந்த சிலர் மதுவிலக்குச் சட்டத்தைக் கடுமையாக எதிர்க்கும் எண்ணத்துடன் இச்சங்கத்தை நிறுவினர். இந்தச் சங்கத்திற்குப் பின்னே ஆதரவாக அதற்குத் துணை நின்றவர்கள் மது தயாரிப்பாளர்கள். இவர்களுக்கு மதுவிலக்கின் காரணமாகப் பெருமளவு ஆதாயம் கிட்டாமல் போயிற்று. வருமான வரிக்குப் பதிலாக மக்கள் செலுத்த வேண்டிய மது வரியின் மூலம் பல இலட்சக் கணக்கான டாலரைச் சம்பாதிக்கும் பொருட்டு இவர்கள் வெளியில் யாருக்கும் தெரியாமல் இயங்கினர். இதற்காக அவர்கள் பெரும் பொருள் செலவிட்டு மதுவிலக்கு கள்ளச் சாராயம், குடி, அரசியல் ஊழல் ஆகியவற்றிற்கு ஊக்கமளித்து விட்டது என்று தவறானதொரு பொய்ப் பிரச்சாரத்தைச் செய்தார்கள். இதற்காக அவர்கள் பிறரை ஏமாற்றுதல், அச்சுறுத்துதல், உணர்ச்சி வயப்படச் செய்து ஆட்படச் செய்தல், இப்படி எந்த வழியையும் பின்பற்றத் தயங்கவில்லை. செய்தித்தாள்களுக்கு அவர்கள் லஞ்சம் கொடுத்தார்கள். சில அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் அதுபோலவே லஞ்சம் கொடுத்தார்கள். மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தார்கள். இதன் விளைவாக மதுவிலக்குத் திருத்தம் ரத்து செய்யப்பட்டது. அதன்பிறகு அமெரிக்க செனட் சபையின் பாராளுமன்றப் புலனாய்வுக்குழு 71-வது காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடரில் ஒரு பெரிய அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கை 5088 பக்கங்களைக் கொண்டது. அந்த அறிக்கையில் இந்த மதுவிலக்குத் திருத்தத்தை ரத்து செய்வதற்காகத் தவறான மோசடிப் பிரச்சாரம் செய்வதற்கு எவ்வாறு பல இலட்சம் டாலர்கள் செலவிடப்பட்டன. இதற்காகப் பத்திரிகைகளுக்கு எவ்வாறு லஞ்சம் கொடுக்கப்பட்டது; அரசியல்வாதிகளும், மற்றவர்களும் எவ்வாறு விலை பேசப் பட்டார்கள், அல்லது அச்சுறுத்தப்பட்டார்கள் என்கின்ற மயிர்க் கூச்செறியும் சம்பவங்கள் நிறைந்திருந்தன.

இன்று மது,அமெரிக்காவின் மிகப் பெரிய எதிரியாகும். அங்கு மது வகைகளால் விளைந்த கொடுமை அச்சந்தரத்தக்கது. குடிப் பழக்கத்தின் காரணத்தால் நிதி நிலைமை சீர் கெட்டது. மக்கள் வாழ்க்கை நிலைமையும் குடும்ப உறவுகளும் சீரழிந்தன. பலர் அகால மரணம் அடைந்தனர். கற்பனைக் கெட்டாத அளவுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை பெருகியது. பெருமளவு மக்கள், மனநோய்க்கும் உடல் நோய்க்கும் ஆளாயினர். இதனாலெல்லாம் அந்நாட்டு மக்கள் படுகின்ற துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இதனால் அந்நாட்டு மக்கள் இந்தப் பெரிய சவாலை எவ்வாறு ஏற்பதென்று தற்போது தீவிரமாகச் சிந்தித்து வருகின்றனர்.

**மது ஒரு பெரிய கொலை அரக்கன்!**

அமெரிக்க நாட்டில் மக்கள் குடிபோதையில் காரோட்டுவதால் ஏற்படுகின்ற சாலை விபத்துக்களில் ஏறத்தாழ ஆண்டொன்றுக்கு 24,000 பேர் இறக்கின்றனர். இந்த விபத்துக்களில் காயம் உறுவோர் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 8,50,000-க்கு அதிகமாகும். அங்கு மனநோய் மருத்துவ மனைகள் சிகிச்சை அளிக்கும் நிலையங்கள் ஆகியன குடிவெறியர்களால் நிரம்பி வழிகின்றன. அங்கே மணவிலக்குப் பெறுவோர் தொகை ஏராளம். இளங் குற்றவாளிகளின் எண்ணிக்கை மிகப் பெரியது. இவையன்றி இன்னும் பல பிரச்சினைகளும் அங்கு அரசையும் சமுதாயத்தையும் வாட்டுகின்ற பெரிய வேதனைகளாக உள்ளன. இதேபோன்ற நிலைமைதான் குடிப்பழக்கம் மிகுந்துள்ள மக்கள் வாழ்கின்ற பிற எல்லா நாடுகளிலும் நிலவுகின்றது.

**தமிழ்நாடும் குஜராத்தும் வழிகாட்டுகின்றன**

மதுவிலக்கு வெற்றி பெறுமா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் கூறவேண்டுமென்று முன்பு கருதினர். தமிழ்நாடு, குஜராத் ஆகிய மாநிலங்கள் இச் சோதனையில் வெற்றி பெற்றுள்ளன. இங்கு மதுவிலக்கு

> மதுவிலக்குச் சட்டத்தை நாம் ஜாக்கிரதையாகக் காப்பாற்றினால், தேசத்தையே காப்பாற்றும் சக்தி அதனால் உண்டாகும். கள்ளுக்கு அணை போட்டால் சமூகத்தில் உணவு பலப்படும். கள் போய்விட்டால் காசு மிஞ்சும். கடன் வாங்க வேண்டாம். தரித்திரங்கள் ஒழியும்.
>
> —மூதறிஞர் ராஜாஜி.

திறம்படச் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு மதுவிலக்கின் விளைவாகப் பொருளாதார-வேலை வாய்ப்பு வளங்கள் பெருகிப் பரந்துள்ளன. இதனால் மக்கள் தொகையில் தொழிலாளர்கள் மற்றும் நலிந்த பிரிவினர் ஆகியோர் மேம்படுவதும், வளம்பெறுவதும் உறுதியாயிற்று. இவ்வரசுகள் தங்களது நிர்வாகப் பிரிவுகளின் வாயிலாக மதுவிலக்கை மிகக் கடுமையாகச் செயல்படுத்துகின்ற பணியை மேற்கொண்டுள்ள அதே சமயத்தில் இங்குள்ள பல தொண்டு நிறுவனங்கள் அரசுகளின் துணையுடன் மதுவிலக்கின் நன்மைகளை மக்களுக்கு எடுத்துரைக்கின்ற நற்பணியையும் நல்வாழ்வுப் பணிகளையும் மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாட்டிலும் குஜராத்திலும் மகளிர் பெரும்பான்மையோர், குடிப்பழக்கம் என்கின்ற கொடுமையை இயல்பாக எதிர்க்கின்றனர். இவ்விரு மாநிலங்களிலும் வாழுகின்ற மக்களில் தோராயமாக 96 சதவீதம் பேர் மதுவிலக்கை ஆதரிக்கின்றனர். ஆனால், எஞ்சியிருக்கின்ற சதவீதத்தினர் இதற்குத் தொல்லையாயிருக்க அனுமதிக்கப்படுவதில்லை. இவ்விரு மாநில அரசுகளும் தங்கள் அதிகாரிகளையும் பணியாளர்களையும் குடிக்க அனுமதிப்பதில்லை. அன்றியும் இங்கு மது அனுமதி பெற்று வைத்திருப்பவர்கள் எவரும் அரசு நியமிக்கின்ற எந்தக் குழுவிலும் அல்லது வாரியத்திலும் நியமனம் செய்யப்படுவதில்லை.

**எதிர்காலத் திட்டம் :**

இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளமான வருங்கால வாழ்க்கைக்கும் இதன் கோடிக்கணக்கான மக்களின் நன்மையைக் கருதி, மதுவிலக்கு இங்கு ''கட்டாய''த் தேவையாக அமைய வேண்டும். ஏழை, எளிய மக்கள் மீது உண்மையான அன்பைக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் இந்த குடியினால் விளைகின்ற தீமைகளுக்கு ஒரு முடிவு கட்ட உதவ வேண்டும். இப்போது நாடு முழுவதிலும் இன்னும் நான்காண்டுகளில் முழு மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டாக வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. இதனை இன்னும் விரைவாகவே கொண்டு வருகின்ற வகையில் நாடு முழுவதிலும் ஆதரவுக் கூட்டங்கள் நடத்தப் பெற வேண்டும். படிப்படியாக மதுவிலக்கைச் செயற்படுத்துவதற்கான திட்டங்களை பல மாநிலங்களும், மத்திய அரசு நேரடி ஆட்சிப் பகுதிகளும் தொடங்கியுள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியது.

**அரசுப் பணியாளர்க்கு நடத்தை விதிக் கோவை:**

மத்திய அரசும், மாநில அரசுகளும் இப்போதிருந்தே தங்களுடைய பணியாளர்கள் அனைவரும் குடிக்க வொட்டாமல் செய்து அதற்கான நடத்தை விதிக்கோவை ஒன்றைக் கொண்டுவர வேண்டியது அவசியம். குடிப்பழக்கம் உள்ளவர்கள் அல்லது மது அனுமதி பெற்றிருப்பவர்கள் எவரையும் இந்த அரசுகள் எந்தக் குழுவிலும் அல்லது வாரியத்திலும் நியமனம் செய்யக் கூடாது. இப்படிச் செய்தால் ஒரு சில குழுவினரில், நாங்கள் குடிப்பவர்கள் என்று பெருமை அடித்துக் கொள்ளுகின்ற மனப்போக்கும் கருத்தும் பெரிதும் குறைந்து விடும். இந்திய அரசின் இந்தப் புதுக் கொள்கையைத் துணைக்கொண்டு இந்த நாட்டில் குடிப்பது மரியாதைக் குறைவானதொரு செயல் என்று கருதப்படுகின்ற நிலையில் இங்கே உள்ள உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளும் இந்த நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டுத்தூதுவர்களும் தாமாகவே குடிப்பதைக் கைவிட வேண்டும். சட்டம் ஒழுங்கைச் செயற்படுத்துவது, மக்களிடையே மதுவை எதிர்த்துப்பிரச்சாரம் செய்வது என்று இருமுனையில் நின்று போராடித்தான் மதுவிலக்கின் இலக்கைத் திறம்பட எய்த முடியும். மதுவிலக்குச் சட்டங்களை மிகக் கடுமையாகச் செயற்படுத்துவதும், அச்சட்டங்களின் தண்டனை விதித்து துறைகளை இயற்றுவதும், தவிர்க்க முடியாதன. அதே சமயத்தில் அதற்கு ஒப்பாகப் பிரச்சார சாதனங்கள் அனைத்தின் மூலமாகவும் உயர்ந்த வகையில் மதுவிலக்கைக் குறித்துத் தெளிவாகப் பிரச்சாரம் செய்வதும் இன்றியமையாததாகும். குடிப்பழக்கம் என்பது ஒரு பெருங்கேடு என்பதை உலகமனைத்தும் ஒப்புக் கொண்டுள்ளது. இந்தக் கேடு அறவே ஒழிக்கப் படவேண்டியது அவசியம். குடிப் பழக்கத்தால் பொருளாதாரத் தாழ்வு ஏற்படுகிறது. மனமும் அறிவும் பாழாகின்றன. ஒழுக்கமும் பண்பும் சிதைந்து கெடுகின்றன. அண்ணல் காந்தியடிகளார் கனவு கண்ட இந்தியாவை உருவாக்க வேண்டுமானால், இங்குள்ள இலட்சக்கணக்கான ஏழை மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால், நமது தாயக மக்கள் மகிழ்ச்சியும் வளமும் பெற்று வாழ்ந்திடச் செய்ய வேண்டுமானால், நம்முடைய இலட்சிய முழக்கம் ''எப்பாடுபட்டேனும் மதுவிலக்கைச் செயல்படுத்த வேண்டும்; அதிலும் உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்'' என்று அமையும் குறிக்கோளை, நாடு கடைப்பிடித்தாக வேண்டும்.

**முடிவுரை :**

குடிப் பழக்கத்தால் விளைந்த கேடுகள் உலகமெங்கிலும் பெரும் கவலைகளையும் துயரங்களையும் தோற்றுவித்துள்ளன. உலக நாடுகள் அனைத்தும் தங்கள் உள்ளத்துக்குள் இந்தக் கொடுமையை ஒழிக்க உடனே முயல வேண்டாமா என்று சிந்தனை கொள்ளத் தொடங்கியுள்ளன. குடிப்பழக்கத்தினால் ஏற்படும் தீங்குகளை, தீயவிளைவுகளை ஒழித்திடும் பொருட்டு, பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குடியின் கேடுகளும் தீமைகளும் மலிந்து, இருண்டு, புயல்வீசிக் கொந்தளிக்கின்ற பெருங்கடற்பரப்பின் நடுவே, இந்திய நாடு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்து, இச்சமுதாயத்தை குடிப் பழக்கம் என்னும் துயரத்திலிருந்து விடுவித்துக் கடைத்தேற்றுகின்ற ஒரு பெரும்பணியில் தலைமை தாங்கி வழி நடத்த முடியும் என்பது திண்ணம்.

*(22-10-78 அன்று பெங்களூரில் நடைபெற்ற கருநாடக மாநில மதுவிலக்கு மாநாட்டினைத் துவக்கிவைத்து ஆற்றிய உரை.)*

# டிசம்பர் 24ல் ராஜாஜி சிலை திறப்பு விழா

"மூதறிஞர் ராஜாஜியின் 101-வது பிறந்த நாளான டிசம்பர் 10ஆம் தேதியன்று தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் அரசு சார்பில் ராஜாஜி நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்.

ராஜாஜி பிறந்த ஊரான தர்மபுரி மாவட்டம் தொரப்பள்ளியில் விழா மிகச் சிறப்பாக நடக்கும்.

எட்டடி உயரமுள்ள முழு உருவச்சிலை தயாரிக்கப்பட்டு வருகிறது. வெண்கலத்தால் ஆன இந்தச் சிலைக்கு ரூ. 30 ஆயிரம் செலவாகும். பீடம் அமைக்கும் செலவு உள்பட மொத்தம் ரூ. 50 ஆயிரம் ஆகும். சிலையைச் சுற்றிப் பூங்கா அமைக்கப்படும்.

சென்னையில் பாரிமுனைக்கு ராஜாஜி முனை என்று பெயர் வைக்க அரசு முடிவு செய்துள்ளது. சிலை திறப்பு விழாவுக்கு துணை



குடியரசுத் தலைவர் ஜாட்டி அழைக்கப்பட்டுள்ளார். தென் மாநில முதல் அமைச்சர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அரசு ஏற்றுள்ள அவரது இல்லத்தைச் சீராக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

ராஜாஜி வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சி அங்கு நிரந்தரமாக அமைக்கப்படும்.


ராஜாஜியின் நூல்களும் அந்த இல்லத்தில் இடம் பெறும்.

ராஜாஜியின் சிலை டிசம்பர் 24ஆம் தேதியன்று சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அருகில் திறந்து வைக்கப்படும்.

கிண்டியில் உள்ள ராஜாஜி நினைவாலயத்தை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ராஜாஜி உபயோகப்படுத்திய பொருட்கள் அங்கு வைக்கப்படும். நூல் நிலையம் ஏற்படுத்தப்படும். ராஜாஜியின் முழு வாழ்க்கை வரலாறும் வெளியிட முயற்சி மேற்கொள்ளப்படும்.

*—[இத் தகவல்களை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் 22-11-'78 அன்று பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்தார்.]*

# ராஜாஜியின் வாழ்விலே...



அன்றாட சொந்த நடைமுறை விஷயங்களையும், பிற பொது விஷயங்களையும், தானே மற்றவர்களின் துணையை நாடாமல் செய்து கொள்வதில் கண்டிப்பான பழக்கம் உடையவர் ராஜாஜி. இதில் 'வைராக்கியம்' உடையவர் என்று சொன்னாலும் மிகையாகாது. இரண்டாவது முறையாகச் சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக அவர் இருந்தபோது, ஒரு நாள் வெளியூர் பிரயாணத்துக்காக, சென்டிரல் ஸ்டேஷன் நோக்கிச் சென்றார். அது, பல வெளியூர் ரயில்கள் வரவும், புறப்படவும் கூடிய மிக நெருக்கடியான நேரமாக இருந்ததால், போக்குவரத்துத் தேங்கிப் போய் அவரது கார் சென்டிரல் மேம்பாலத்தைக் கூட அடைய முடியவில்லை. போக்குவரத்து அடைசலாக 'பாடிகார்டு ரோடு' வரை இருந்தது. இப்பொழுதைப் போல் அப்பொழுது போக்குவரத்து முறையாக, இயல்பாக இயங்கும் வகையில் அந்நாளில் இருக்கவில்லை.

ரயில் வண்டி புறப்படுவதற்குச் சில நிமிடங்கள்தான் இன்னும் இருக்கிறது என்பதைத் தெரிந்து, நெரிசலில் விடுபட்டு இந்தக் கார் ஸ்டேஷனை அடைய இன்னும் அதிக நேரம் பிடிக்கலாம் என்பதை உணர்ந்து, முதல் அமைச்சர் வருகிறார் என்பதற்காக அதிக நேரம் வண்டி தாமதித்துப் புறப்பட நேர்ந்து, அதனால் பொதுமக்களுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடாது என்பதில் அக்கறை கொண்டு, எப்பொழுதுமே, எதிலும், என்றும் குறிப்பிட்ட நேரத்தில் கலந்து கொள்வதற்காக சற்று முன்னதாகச் செல்வதில் மிகவும் கண்டிப்புக் கொண்டவர் ஆனதால், வண்டிக் கதவைத் திறந்து, ஊன்றுகோல் உதவியுடன் நடைபாதை வழியாக அந்த 74 வயதில் இயன்றவரை விரைவாக, சென்டிரல் முன் 'ஜாம்' ஆகிப் போயிருந்த அந்தப் போக்குவரத்து நெரிசலையும், வளைந்து வளைந்து சென்று, தாண்டி, சென்டிரல் ரயில்வே நிலையத்தை அடைந்து, குறிப்பிட்ட நேரத்திற்கு முன் தனது வண்டியில்போய் ஏறிக்கொண்டு விட்டார். இந்த அவரது அரிய செயலை, வழியே காரில் அமர்ந்து இருந்தவர்களும், அங்கங்கே நின்றவர்களும், அதிசயத்துடன் பார்த்து வியந்து நின்றனர்.



ஒரு முறை திருக்குற்றாலத்தில் ரசிகமணி டி.கே.சி. அவர்கள் வீட்டில் ராஜாஜி அவர்கள் விருந்தினராகத் தங்கி இருந்தார். அப்போது ராஜாஜி அவர்கள் காங்கிரசிலிருந்து கருத்து மாறுபாடு கொண்டு சற்று ஒதுங்கி இருந்த நேரம். அவர் அங்கிருந்தாலும் அவரை நாடி இந்தியாவின் பல இடங்களிலிருந்தும், உலகின் பல பாகங்களிலிருந்தும் கூட தந்திகளும், கடிதங்களும் வந்து கொண்டே இருக்கும். அவரும் காலம் தவறாமல் அவைகளுக்குப் பதில் தந்து கொண்டே இருப்பார். அந்நாளில் குற்றாலத்தில், டெலிபோன், தந்தி வசதிகள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. ஒரு சிறிய தபாலாபீஸ் மட்டும்தான் உண்டு. நாளில் ஏதாவது ஒரே ஒரு நேரம் தபால் எடுப்பார்கள். ஒரே ஒரு தரம் மட்டும் தருவார்கள். தந்தி கொடுக்க வேண்டுமானால் குற்றாலத்திலிருந்து நான்கு மைல் தொலைவில் உள்ள தென்காசிக்குத்தான் செல்ல வேண்டும். பஸ் போக்குவரத்தும் அடிக்கடி கிடையாது. அதுவும் எல்லாக் காலங்களிலும் கிடையாது. டி. கே. சி. அவர்களின் கூட நிழலாக இருந்து பணி ஆற்றிக்கொண்டிருந்த எஸ். வி. எஸ். மணிக்குச் சின்ன வயசு. மணிக்கும் அதிக ஆரோக்கியம்கிடையாது.

ராஜாஜி பல வார்த்தைகள் கொண்ட ஒரு பெரிய தந்தியை எழுதி, மணியிடம் தந்து தென்காசி தபால் நிலையத்தில் கொடுத்து விட்டு வரச் சொன்னார். சுமார் எட்டு மணிக்குப் புறப்பட்டுச் சென்ற மணி, சைக்கிளில் சென்று திரும்பி வரப் பத்து மணிக்கு மேலாகிவிட்டது. தென்காசி, குற்றாலம் பக்கம் எப்பொழுதுமே 'சோவென' பேய்க்காற்று அடித்துக்

கொண்டிருக்கும். பலமான எதிர்க்காற்றில், சைக்கிளில் வந்ததில் மிகவும் சோர்வு ஏற்பட்டிருந்தது. வந்து இறங்கியதுமே, ராஜாஜி 'அந்தத் தந்தியைக் கொடுத்து விட்டாயா?' என்று கேட்டு விட்டு, 'சரி, சீக்கிரமாய்ப் போய் இந்தத் தந்தியையும் கொடுத்து விட்டு வா' என்று சொன்னார். அந்தத் தந்தி டெல்லியில் வைஸ்ராயாக அப்பொழுது இருந்த 'லார்டு வேவல்' சில விஷயங்களைப் பற்றிக் கேட்டிருந்ததற்குத் தந்த விரிவான விளக்கம். அந்நாளில், அதற்கு 35 ரூபாய் சார்ஜ் ஆயிற்றென்றால் அந்தத் தந்தி எவ்வளவு நீளமானது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

அக்காலத்தில் தந்திக்கட்டணம் வார்த்தைக்கு அரை அணா ஒரு அணா என்று இருந்தகாலம். ராஜாஜியிடம்''தென்காசிக்குப் போய்விட்டு வந்தது மிகக் களைப்பாக இருக்கிறது. எதிர்க்காற்று வேறு. வேகமாக போக முடியலே. கொஞ்சம் கழித்து சாப்பிட்டு விட்டு மத்தியானமாகப் போய்க் கொடுக்கிறேனே'' என்று மணி தயங்கித் தயங்கிச் சொன்னதும், அப்பொழுது (67 வயதில்) ராஜாஜி ''பணத்தையும் அந்த தந்தி மேட்டரையும் இங்கே கொடு. அந்த சைக்கிள் எங்கே?' என்று புறப்படத் தயாரானார். இப்படி அவர் சொன்னதும், மணி நடுங்கிப்போய் இந்த வயோதிகரே செல்கிறாரே, இது ரசிகமணிக்குத் தெரிந்தால் என்னாவது? என்ற பயத்தில், துணிச்சல் ஏற்பட, மணியின் சைக்கிள் தென்காசியை நோக்கிப் பறந்தது. இதுதான் ராஜாஜி.


* * * * * *

சென்னை சென்டிரல் ஸ்டேஷன் பக்கம் உள்ள மெமோரியல் ஹாலில் கம்யூனிஸ்டுக் கட்சியினர் நடத்திய ஒரு பொது நிகழ்ச்சியில் ராஜாஜியும் பங்கு கொண்டு உரையாற்றச் சென்றார். வழக்கமாகப் பேச்சாளர்கள் எல்லோரும் பேசிய பின் கடைசியாகத்தான் ராஜாஜி பேசுவது வழக்கம்.

அதனால், முன் பேச்சாளர்களின் கருத்துக்களுக்கு விளக்கம் தரவும், அதை ஒட்டித் தனது தனிப்பட்ட அபிப்பிராயங்களை வலியுறுத்தவும் அவருக்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் அன்று விபரீதமாக, அங்கே கூட்டத்தில் முன்னதாகவே பேசி விட்டு அவர் வெளியே புறப்பட்டு வந்து விட்டார். வந்தபோது, அவர் வந்த கார் கடை வீதிக்குச் சென்றிருப்பதையும், வரச் சற்று நேரமாகலாம் என்பதையும் தன்னுடன் வந்திருந்தவர் சொல்லத் தெரிந்து கொண்டார். அவரது வழக்கப்படி, அவர் பேசி முடிக்க நேரமாகும் என்று எதிர்பார்த்து, அவரிடம் சொல்லாமலே வண்டியைக் கொண்டு போயிருந்தனர். அவரும் சாதாரணமாக மிக முக்கியம் அல்லாதவைகளை, முன்னதாகவே செய்யப்பட வேண்டாத அலுவல்களைப் பற்றி, முன்னதாகச் சொல்ல மாட்டார். அவ்வப்போது தான் அடுத்த வேலைகளைத் தெரிவிப்பார். அன்று அவருக்கு, மிக அவசரமாக சென்டிரல் ரயில்வே நிலயத்திற்கு சென்று, டெல்லி வண்டியில் செல்ல இருக்கும், மத்திய அமைச்சர் கோபாலசாமி அய்யங்காரை அவசரமாகச் சந்திக்க வேண்டி இருந்தது. 'ஹாலின்' படிக்கட்டில் அவர் வந்து நின்றதும், ஒரு கூட்டம் சேர்ந்து அவரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது. அங்கே இருந்தபடியே, ரோட்டு அருகில் நின்ற ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரரை அழைத்து அதில் ஏறிக் கொண்டார். கூட வந்திருந்தவரிடம் 'பணம் இருக்கிறதா? என்று கேட்டார். அவரிடம் பணம் இல்லை. உடனே சுற்றி அங்கே கூடியவர்களைப் பார்த்து 'யாராவது அந்த ரிக்ஷாக்காரருக்கு, ஒரு ரூபாய் கொடுங்க' என்று சொன்னார். பலர் தர முன் வந்தனர், ஒரே ஒரு ரூபாயை மட்டும் வாங்கிக்கச் சொல்லி வண்டியை நேராக சென்டிரல் ஸ்டேஷன் நோக்கி விடச் சொன்னார். யாவும் கூடி நின்றவர்களுக்கு மிகவும் வியப்பாக இருந்தன.




குறிப்பிட்ட நேரத்தில் ரயிலில் அவரைச் சந்தித்துப் பேசினார். அதற்குள் ஒரு பிளாட்பாரம் டிக்கட்டும் வாங்கி வரச் செய்துவிட்டார். திரும்பி வரும்போது ஸ்டேஷனிலிருந்து ஒரு டாக்ஸியில் ஏறி நேராக வீட்டுக்கு வந்து விட்டார். சின்ன விஷயங்களில் கூட ராஜாஜி மற்றவர் தயவுகளை, எதிர்பாராதவர்; காரியங்களை ஒத்தி போடாதவர்!



## திரூரில் முதல் கூட்டுறவுச் சங்கம்

தமிழகத்தில் 74 ஆண்டுகளுக்கு முன்னே பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் திரூர் என்ற சிற்றூரில்தான் முதன்முதல் கூட்டுறவுச் சங்கம் பிறந்தது. இன்று அது ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி செழித்து நிற்கின்றது. இன்று தமிழகமெங்கும் 4,800 கிராமங்களில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை உழவர் பெருமக்களின் அனைத்துத் தேவைகளையும் கவனித்து வாழ்வை வளங்கொழிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.




# சின்ன விஷயங்கள்...

முதறிஞர் ராஜாஜி

வாழை மரம் ஒன்றைப் பாருங்கள். அதன் வடிவம் வேர் முதல் நுனி வரையில் எவ்வளவு அமைப்பாக அமைந்திருக்கிறது! அகன்ற பச்சை இலைகள். தளதளவென்று உயிரொளியோடு மின்னும் தண்டுமரம். நுனியில் பாதி மூடியும், பாதி பாதி திறந்துமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிற புதிய குருத்து. அடியில் பட்டுப்போல், அழகாய்ப் பழுப்பேறின பட்டை, 'என் வேலை முடிந்தது. வளரும் வளர்ச்சிக்குக் காப்பாகக் கீழே கிடக்கிறேன். தடையாக நிற்க மாட்டேன்' என்று வாய்திறந்து பேசுவதுபோல் இருக்கிறது. உயிர் படைத்த ஒரு ஜன சமூகத்தின் பண்பாட்டுக்கு வாழைமரம் எவ்வளவு பொருத்தமான உபமானம்!

குப்பையன் வீட்டுப் புழக்கடையில் அவன் தகப்பனார் வைத்த வாழைமரம் ஒன்று இருக்கிறது. மேலே விட்ட இலையெல்லாம் அறுபட்டு, மரம் மொட்டையாய்க் கம்பம்போல் நிற்கிறது. கீழே சாக்கடை நீர். அதில் அழுகிக் கிடக்கும் பட்டைகள். செடிக்கு ஜலம் தானாகச் சாக்கடையில் வந்தால் உண்டு. உலர்ந்து கிடந்தாலும் கேட்பார் இல்லை. இந்தப் பரிதாபமான நிலையிலும் குருத்துவிடப் பார்க்கிறது. எவ்வளவு கொடுமைக்கு இடையிலும் வளரப் பார்க்கிறது? வளராமல் போனால் செத்தல்லவோ போக வேண்டும்? இது நம் பண்பாட்டின் தற்போதைய நிலை என்று சொன்னால் குற்றமில்லை. குப்பையன் வீட்டு வாழை மரத்தில் இன்னும் உயிர் இருக்கிறது. அது காமதேனு அல்லவா? கொஞ்சம் கவலை செலுத்திக் கவனித்தால், எல்லாம் தரும். இதுவரையில் அதற்குச் செய்த கொடுமையையும் மறந்து குருத்துவிட்டு அழகாக வளரும்!

பண்பாடு என்பது முக்கியமாக மக்களின் வீட்டு விவகாரத்தில் கலந்து நிற்கும். ஆயினும் வீட்டுக்கு வெளியேகூடப் பண்பாட்டின் ராஜ்யம் உண்டு. வெளியூர்க்காரர்கள் ரயிலில் சென்னப்பட்டணத்துக்கு வந்தால், சென்ட்ரல் ஸ்டேஷனை அணுக அணுக, முதல் முதலில் காலையில் அவர்கள் காணும் காட்சி என்ன? ரயில் வேகமாய்ச் செல்லும்போது, வெளியே பாதையிலும் வயல் வெளிகளிலும் இருக்கும் ஜனங்களுக்கு, வண்டிக்குள் இருப்பவர்களின் முகங்கள் தெரிகிறதில்லை. ரயில் வண்டியின் வேகம் மறைத்துவிடுகிறது. ஆனால் அதேமாதிரி



வண்டிக்குள் இருப்பவர்களுக்கு, வெளியே உள்ள பொருள்களும் நிகழ்ச்சிகளும் மறைந்து போவதில்லை. வியக்தமாகத் தெரிகின்றன. இந்த வித்தியாசம், பாவம், ரயிலோரம் காலைக் கடன் கழிப்பவர்களுக்குத் தெரியாது. வெளிநாட்டுப் பிரயாணிகள் சென்னை வந்து சேரும் தறுவாயில் ஜன்னல் வழியாக ஊரைப் பார்ப்பார்கள். 'இதென்ன, மதராஸ் ஜனங்கள் இப்படிச் செய்கின்றார்கள்! இவர்கள் ஊரில் மறைவான இடமே கிடையாதா? ரயிலோரம் திறந்த வெளியில் நாணமே இல்லாமல் வெளிக்கு உட்காருகிறார்களே!' என்று வியப்பும் அருவருப்பும் கொள்வார்கள்.

இது ஒரு சிறிய விஷயம். சொல்லுவதற்கும் படிப்பதற்கும் அவலட்சணமாகத்தான் இருக்கிறது. சின்ன விஷயமாயினும் பெரிய வெட்கக்கேடு. நம்முடைய தென்னாட்டின் பண்பாட்டு அழகையும் பெருமையையும் பற்றி வேறு ஊர்களில் பேசினால், அவர்கள் இதை எடுத்துக் காட்டுகிறார்கள். யாருமே இதைக் கவனிப்பார் இல்லையே என்று இதைப்பற்றி எழுதுகிறேன்.

ரயிலோரம் மண்ணெடுத்த குழிகளில் அழுக்கு ஜலம் தேங்கி நிற்பது சவுகரியமே. ஆயினும், அந்தச் சவுகரியத்திற்காக இந்த அநாகரிகக் காட்சியா நம்முடைய நாட்டுக்குப் புதிதாக வருகிறவர்களுக்கு நாம் முதலில் அளிக்க வேண்டும்? எங்கேயாவது மறைவாக உட்காரலாம். ரயிலோரம் வேண்டாம். தண்ணீருக்காகக் கையில் ஒரு செம்பு எடுத்துப் போனால் தீர்ந்தது. மண்ணில் ஒரு சிறு குழி பறித்து அதில் கழித்துவிட்டு மறுபடி அதன் மேல் மண்ணைப் போட்டு மூடிவிட்டால், எவ்வளவு நாகரிகமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்? ரயில் அல்லது ஜனங்கள் நடக்கும் பாதையோரம் தவிர்த்து வேறு இடம் இல்லவேயில்லையானால், யாராவது இதற்காக முயன்று ஒரு சுவர் போட வேண்டும். செடியோ, மரமோ, கொடியோ போட்டு வளர்த்துக் கொஞ்சம் மறைவு உண்டாக்க வேண்டும்; இது நம்முடைய ஊரின் பெயரைக் காப்பாற்றுவதாகும்.

போலீஸ்காரர்களுக்குப் பயந்து ஒருவேலை செய்யாமலிருப்பது போதாது. தெருவிலும், வாய்க்கால் ஓரத்திலும், ஜனங்கள் நடமாடும் வேறு பொது இடங்களிலும் மலசலங் கழிப்பது அநாகரிகம். ஊரைக் கெடுக்கிறது;

நமக்கும் நல்லதல்ல. யார் இருந்தாலும் இல்லாதிருந்தாலும், செய்யாமலிருக்க வேண்டும். வீட்டில் குழந்தைகள் கண்ட விடத்தில் அசுத்தம் செய்தால் சும்மா இருப்போமா? ஊரெல்லாம் ஒரு வீடு; நாம் அதில் குழ்ந்தைகள் அல்லவா? 'வீடுதான் நம்முடையது, ஊர் யாருடையதோ தெரியாது' என்றிருப்பது அநாகரிகம்.

சிறு வயதில் ஏற்படும் பழக்கமே என்றைக்கும் ஸ்திரமாக நிற்கும். பிறகு மாற்றுவது மிகக் கடினம். குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்தே எதையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். அடக்கம், பொறுமை, நயமொழி, மரியாதை பிறர் மனம் நோவாமல் கவனித்துப் பேசுவது, இவையெல்லாம் பெரியோர் எப்படி நடத்திக் காட்டுகிறார்களோ அதைத்தான் குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள். இதனால் பெரியோர் மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்பது ஏற்படுகிறது. பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும். நம்முடைய குழந்தைகள் பிற்காலத்தில் பண்பட்டவர்களாக வாழ்க்கை நடத்த வேண்டுமானால், வயது முதிர்ந்தவர்களாகிய நாம் சிரமப்பட்டுக் கவனம் செலுத்தி ஒவ்வொரு காரியத்திலும் பெருந்தன்மையும் பொறுமையும் வினயமும் காட்ட வேண்டும்.

மனைவி கணவனிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையைப் பற்றி நம்முடைய புராண இதிகாசங்களில் விரிவான உபதேசம் இருக்கிறது. வேண்டிய அளவும் அதற்கு மேலேயும்கூட இருக்கிறது. ஆனால் அதைத் திருப்பிப் போட்டுக் காட்டவில்லை. பண்பட்ட கணவன் மனைவியிடம் நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றி நமக்குப் படிப்புப் போதவே போதாது. இதைப்பற்றி எழுதப் புகுந்தால் அது தனிப் புத்தமாக முடியும். பொதுவாக ஒரு சூத்திரம் சொல்லுகிறேன்.

கலியாணம் ஆகிவிட்டது. இனி இந்தப் பெண் என்னுடைய சொத்து. அவளுடைய பணிவிடையைக் கட்டாய வரி வசூலைப்போல நான் பெறலாம் என்று எண்ணுதல் கூடாது. இரு நண்பர்கள் ஒருவரை ஒருவர் மதித்து, ஒவ்வொரு நிமிஷமும் கவனத்துடன் நடந்து கொண்டு அன்பைச் சுயேச்சைப் பொருளாக எப்படி வளர்த்து வருகிறார்களோ, அப்படியே கணவன் மனைவியிடம் மரியாதையாகவும் அன்பாகவும் கவனமாகவும்



நடந்து கொள்ள வேண்டும். 'அவள் எப்படியும் மனைவிதான் எப்போதுமே மனைவி. என்னை விட்டுப் போய்விட முடியுமா? வீட்டிலுமா கவனமும் கவலையும்?' இவ்வாறு எண்ணி மனைவியை அலட்சியமாகவோ அகவுரவமாகவோ நடத்தக் கூடாது. கவலையும் கவனமும் செலுத்துவது வழக்கப்பட்டு, அதுவே வாழ்க்கைச் சுகமாகத் தோன்றும். அமிஞ்சி முறையில் வெற்றியுமிராது. சுகமுமிராது. இருவர் உடலும் பக்கமாகவே இருக்கலாம்; ஆனால் உள்ளம் வெகுதூரம் போய்விட முடியும்.

கணவனும் மனைவியும் அன்புடன் வளர விசேஷ சவுகரியம் இயற்கை அமைப்பில் இருக்கிறது. அதை வீண் விரயப்படுத்தாமல் பொன்னைக் காப்பது போல் காத்து மிக்க பக்குவமாய்ப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பண்பட்ட தம்பதிகளும் குழந்தைகளும் ஒரு குடும்பத்தில் கூடி வாழ்வதைப் பார்த்தால் வீட்டுக்குள்ளேயே வெளியே போகாமல் எல்லாச் சுகமும் சந்தோஷமும் அவர்கள் பெற்று வருவதைப் பார்க்கலாம். பெற்றோரும் குழந்தைகளும் ஒருவரோடு ஒருவர் தைரியமாகப் பேசி விளையாடி, பயம் என்பதே இல்லாமலும், ஆனால் அடக்கம், பொறுமை, மரியாதை முதலிய குணங்களை விட்டு விடாமலும் நடந்துகொள்ள முடியும் என்பதைப் பார்க்கலாம்.



வீட்டில் பணிவிடைக்கு வேலைக்காரர்கள் இருந்தால், அவர்களை நெருங்கிய பந்துக்களைப்போல் நடத்த வேண்டும். அவரவர் வயதுக்குத் தகுந்தாற்போல் மாமனாகவும் அத்தையாகவும் தம்பியாகவும் தங்கையாகவும் எண்ணி நடந்து கொள்ள வேண்டும். இதுவே பூர்விக முறை. இக்காலத்தில் வீட்டுப் பணியாட்களிடம் செலுத்தும் அன்பு, குறைந்து வருகிறது; தொழிற்சாலை முறையாக மாறிவிட்டது. வேலை செய்யும் திறமையும் தேக பலமும் நமக்கு இல்லாததால் வேலையாட்களை வைத்துக் கொள்ளுகிறோம். அவர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்று வீட்டுக்காரனாவது, வீட்டுக்காரியாவது எண்ணி, பேச்சிலும் காரியத்திலும் அதைக் காட்டுவது அநாகரிகம். வீட்டில் வேலைக்கு அமரும் ஏழைகள், ஆணாயிருக்கட்டும் பெண்ணாயிருக்கட்டும், அவர்களும் நம்மைப்போல் உணர்ச்சி படைத்தவர்கள், குடும்பஸ்தர்கள். அவர்கள் தங்களுடைய குழந்தைகள், மனைவி, புருஷன் தாய், தந்தை இவர்களை வீட்டில் விட்டு விட்டு, நாம் செய்ய முடியாத வேலைகளைக் கொஞ்ச நேரம் நம் வீட்டில் நமக்காகச் செய்து கொடுத்து வருகிறார்கள். பணிவிடை செய்வதில் அவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படியாக, வேலை வாங்கும் எஜமானர்கள் அவர்களிடம் பெற வேண்டிய பணியைப் பெற்றுக் கொண்டு அவர்களைச் சந்தோஷமாய் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும்.



இதுவெல்லாம் மிக்க சிரமம் என்று எண்ண வேண்டாம். பண்பாடு பெறாதவர்களுக்கு மிக்க சிரமமாக இருப்பதெல்லாம் பண்பட்டவர்களுக்குச் சிரமமாயிராது. சுகமாகவே இருக்கும். பண்பாட்டின் இரகசியம் இதுவே. ஒரு வீட்டில் புகுந்தால், அந்த வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரர் முகத்தையும் வேலையையும் பார்த்தே, குடும்பம் பண்பாடு பெற்ற குடும்பமா அல்லது அநாகரிகர்களாலாய குடும்பமா என்று தீர்மானித்துவிட முடியும். பண்பட்ட மேலோர் வீட்டில் வேலைக்காரர்கள் யார், பந்துக்கள் யார் என்று சொல்வதே கஷ்டமாயிருக்கும். பணிவிடையாட்கள் சுறுசுறுப்பாகவும்

மலர்ந்த முகத்தோடு மற்றவர்களுடன் அன்போடு கலந்தும் வேலை செய்து வருவார்கள். வீடு தங்களுடையதாகவே பாவித்துச் சந்தோஷமாகவும் தைரியமாகவும் நடந்து கொள்வார்கள். பண்பட்டவர்களுக்கே வேலைக்காரர்களை வைத்துக் கொள்ள உரிமையுண்டு. அநாகரிகர்களுக்கு அந்த உரிமை இல்லை.

மனித வர்க்கத்தை அண்டி வாழும் பிராணிகளான நாய், பூனை, காக்கை, குருவி முதலிய வற்றினிடம் பண்பட்டவர்கள் நடந்துகொள்ளும் முறை வேறு; பண்படாதவர்களின் போக்கு வேறு. இந்தப் பிராணிகளின் உடலுக்குள் கிடக்கும் சூட்சும உணர்ச்சிகளையும் அவற்றின் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் அன்பையும், பண்பட்டவன் எளிதில் காண்பான். அந்தப் பிராணிகளைப் பார்க்கும்போது அவைகளின் உடலில் சிறைப் பட்டுக் கிடக்கும் அந்தராத்மாவைப் பார்ப்பான். இதை இன்னும் விரித்தால் வேதாந்தமாகப் போகும். நம்மை அண்டிப் பிழைக்கும் பிராணிகளிடம் அன்பு காட்டுவதுதான் பண்பாடு. 'மாமிச வகை உண்பதில்லை, சைவ உணவுதான் கொள்வேன்' என்று விரதம் காப்பது மட்டும் போதாது.

வீட்டில் வந்து தயிர், பால், காய், கறி முதலிய பண்டங்களை விற்றுப்போகும் ஏழை ஜனங்களிடம் நடந்து கொள்ளுவதிலும் பண்பாடு உண்டு. அவர்களை வேலைக்காரர்களாக எண்ணுவது தவறு. ஒரு கிழவி தன் ஜீவனத்தை நடத்துவதற்காக, அப்பளம் அல்லது அவல், சிரமப் பட்டுச் செய்து கொண்டு வந்து தருகிறாள். 'பாட்டி, வேண்டாம்' அல்லது 'வாருங்கள் பாட்டி, உட்காருங்கள்' என்று சொல்ல வேண்டும். இவ்வாறே எல்லோரிடமும் நடந்து கொள்ளவேண்டும் தங்கள் ஜீவனம் நடத்தத் தான் பண்டங்களை விற்பவர்கள் வீடு வீடாய்ச் சென்று பொறுமையுடன் நடந்து கொள்கிறார்கள். ஆனால் தருமத்துக்குப் பயந்து



சமுதாயத் தொண்டும் செய்கிறார்கள். எந்தச் சாதியாராயினும், தலையில் விறகுச் சுமை எடுத்து வருபவர்கள் வரையில், சமுதாயத் தொண்டர்கள்; அவர்களுக்கும் நம்மைப்போல் குடும்பங்கள் உண்டு, எல்லா உணர்ச்சிகளும் உண்டு என்பதை அவர்களைக் காணும்போது நாம் மனத்தில் மறவாமல் வைத்துக் கொண்டு, அவர்களிடம் வியாபாரம் செய்ய வேண்டும். தயிர்க்காரி தன் பானையில் கொண்டு வந்திருக்கும் தயிரை விற்றுத் தீர்த்தபின், தன் கிராமத்துக்குத் திரும்பிப்போய்த் தன் குழந்தைகளைக் கவனிக்க வேண்டியவள். அவ்வாறு அவள் தன் வீட்டுக்குள் நுழையும் போது சிரித்துக் கொண்டு, சந்தோஷமாக நுழைய வேண்டும். அவள் அங்கே போனதும், அவளுடைய குழந்தைகளெல்லாம் அவளைச் சுற்றிக் கொள்ளும் அல்லவா?






உலகம் கொடுமையானது என்கிற உணர்ச்சியோடு அவள் தன் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தால், அந்தச் சாபம் நம்மை எரிக்கும். பண்பாடடைந்த குடும்பங்களில் பால், தயிர், காய்கறி, விறகு முதலிய பண்டங்களைத் தலையில் தூக்கி வந்து விற்பவர்களை அன்புடன் வரவேற்றுக் காலதாமதம் செய்யாமல் வேலையை முடித்து அனுப்புவார்கள். சந்தர்ப்பம் நேரிட்ட போது, அவர்களுடைய சுக துக்கங்களை விசாரிப்பார்கள். பண்பாடு பெறாதவர்களுக்கு அவர்களுடைய பெயர் கூடத் தெரியமாட்டாது. பால்காரன், தயிர்க்காரி, காய்கறிக்காரன் என்றுதான் பெயரில்லாமல் பேசுவார்கள்.



வண்டியில் பிரயாணம் செய்யும்போதும், குளக்கரை முதலிய பொது இடங்களிலும், சாத்தியமான அளவு ஒருவருக்கொருவர் முக்கியமாய்க் குழந்தைகள், பெண்கள், வயோதிகர் முதலியவர்களுக்கு இடம் கொடுத்துதவி ஒருவரை ஒருவர் தடுத்து வீண் போட்டி போடாமல் நடந்து கொள்ள வேண்டும். இதுவும் பண்பாட்டுக்கு அடையாளம். பொது இடங்களில் பிறர் சவுகரியத்தைக் கவனியாமல் இருப்பது இழிவான குணம். பலர் கூடும் இடங்களிலும் பிரயாணம் செய்யும்போது பண்பட்டவர்களின் நடவடிக்கையில் அடக்கமும் பொறுமையும் உதார குணமும் பார்க்கலாம். பண்படாத மனிதன் தன்னுடைய கவுரவம் எங்கேயாவது குறைந்து போகுமோ என்று பயந்து எப்போதும் கர்வமாகவே நடந்து கொள்வான். பண்பாட்டுக்கே சமஸ்கிருதத்தில் 'வினயம்' என்று பெயர். அடக்கம்தான் பண்பாட்டில் முக்கிய அம்சம். இந்த அடக்கம் கூழைக் கும்பிடாக இராது. அடக்கத்துடன் தைரியமும் அன்பும் கலந்[illegible]. பயம் அடக்கமல்ல, ப[illegible]ல்ல. பரம்பரையாகப் [illegible]பாடு வாய்ந்த குடும்பங்க[illegible] [illegible]யான அடக்கத்தைப் பார்[illegible]. அதில் பயம் காணமாட்டா[illegible].

இப்படியே [illegible]ம் அநேக சின்ன விஷய[illegible]ப் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம். பண்பாடு [illegible]பது ஒவ்வொரு விஷயத்திலும் வேலை செய்யும். ஆணுக்கும் பெண்ணுக்கும் முகத்தில் களை வீசச் செய்யும். அதுவே அழகும் ஆபரணமுமாகும்.






# ராஜாஜி

## பல நிலைகளில்....





# 'ஆனந்த்' மாதிரி சங்கங்கள்

மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர்
திரு கே. இராசாமுகமது

ஆனந்த் அல்லது ''அமுல்'' மாதிரி சங்கம் என்பது கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் ஒன்று சேர்ந்து தங்களின் மேம்பாட்டிற்காக நடத்தப்படும் சங்கமாகும். இம்மாதிரி சங்கம் இந்தியாவைப் பொறுத்த மட்டில் குஜராத் மாநிலத்தில் கெய்ரா மாவட்டத்திலுள்ள 'ஆனந்த்'' என்ற இடத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டதால் இம்முறையில் இயங்கும் சங்கங்கள் ,ஆனந்த் மாதிரி சங்கங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக ஐரோப்பிய நாடுகள் அனைத்திலுமே, முன்னேறியுள்ள நாடுகளில் இதே மாதிரியான அமைப்புகளே பால் வளத்தைப் பொறுத்த மட்டில் அமைந்திருக்கின்றன. இவைகள் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.



இச் சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருக்க முடியும். இச்சங்கங்களில் பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே இருப்பதால், பால் உற்பத்தியாளர்களின் நலனே முதன்மையாகக் கருதப்படுகிறது. தினசரிப் பணிக்கு செயலர், பால் சேகரிப்பவர், பரிசோதகர், செயற்கை முறை கருவூட்டுபவர் ஆகியவர்கள் இருப்பினும் சங்கம் சம்பந்தப்பட்ட திட்டங்கள், கொள்கைகள், எதிர்ப்படும் இடையூறுகளை நீக்கும் வழி முறைகள் ஆகியவற்றை வகுக்கும் பொறுப்பு அங்கத்தினர்களால் நிர்வகிக்கப்படும் சங்கக் குழுவையே (இயக்குநர்கள்) சார்ந்திருக்கும். இச் சங்கங்களின் தினப்படி வேலைகளில் தலைவரது அல்லது இயக்குனர்களது தலையீடு இல்லாமல் சம்பளம் பெறும் அலுவலர்களே செம்மையாகச் செய்வார்கள். இச்சங்கங்கள் பால் உற்பத்தியாளர்களுக்குக் கடன் வசதிக்கு ஏற்பாடு செய்து கொடுப்பதோ, கொடுத்த கடனுக்காகப் பால் பணத்தில் பிடித்தம் செய்து கடனை அடைக்க ஏற்பாடு செய்வதோ கிடையாது. இச் சங்கங்கள் கடனை மையமாகக்கொண்டவை அல்ல. ஒவ்வொரு சங்கத்தின் வரையறைக்குள்ளும் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் மட்டுமே இருக்கும். ஒவ்வொரு சங்கத்தின் வரையறைக்குள்ளும் ஒன்று அல்லது இரண்டு கிராமங்கள் மட்டுமே இருப்பதால் இக் கிராமங்களிலுள்ள 'கால்நடைகளின் தரம் மேம்பாடு அடையத் தீவிரக் கவனம் செலுத்த இயலுவதோடு, அங்கத்தினர்களின் தேவைகளுக்கும் உடனடி பரிகாரம் காண இயலுகிறது. மேலும் அப்பகுதியில் உற்பத்தியாகும் பாலை முழு அளவில் கொள்முதல் செய்யக் கவனம் செலுத்த இயலுகிறது. இச்சங்கங்களில் காலையிலும் மாலையிலும் ஒவ்வொரு அங்கத்தினரது பாலும் தனித் தனியே பரிசோதிக்கப்பட்டு தரத்திற்குத் தகுந்த விலை தரப்படும். இதனால் தரமான பாலை உற்பத்தி செய்வோர் அதிக விலை பெற வாய்ப்பு உள்ளது. பால் உற்பத்தியாளர்களுக்கு வருடம் முழுவதும் பாலுக்கு நியாயமான விலை கிடைப்பதால், பால் உற்பத்தியாளர்கள் கால்நடைகளை அறிவியல் முறைப்படி சத்துணவு கொடுத்துப் பேணிப் பாதுகாக்க இயலுகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை தவறாமல் பால் பணம் பட்டுவாடா செய்யப்படும். இச்சங்கங்களில் கிடைக்கும் இலாபத்தில் பெரும் பகுதி அங்கத்தினர்களுக்கே போனஸாக வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் செயலர்கள் முதலுதவியிலும், செயற்கை முறை கருவூட்டல் செய்வதிலும் பயிற்சி பெற்று அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு உரிய சிகிச்சையும், செயற்கை முறைக் கருவூட்டலும் செய்து சீரான கால்நடை மேம்பாட்டிற்கு உதவுகிறார்கள். இச்சங்கங்கள் காலையிலும் மாலையிலும் பால் உறபத்தியாளர்களிடமிருந்து பாலை பெற்று மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

இம்மாதிரி 30 முதல் 40 வரை சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் இவை மாவட்ட அளவில் ஒன்று சேர்ந்து மாவட்டப் பால்

உற்பத்தியாளர் ஒன்றியத்தை ஏற்படுத்து கின்றன. இம்மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் தமது அங்கத்தினர்களின் பாலை வருடம் முழுவதிலும் சீரான விலையில் விற்ப தற்கு வசதி செய்து தருகின்றன. இம்மாவட்ட ஒன்றியங்கள் கிராமப் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் வளர்ச்சி அடைவதற்கும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான கட்டுக்கோப்பு, தொழில் நுட்ப வசதிகளான இலவச கால்நடை மருத்துவ வசதி, செயற்கை முறைக் கருவூட்டல், சமனீட்டுத் தீவனம், வீரிய புல் நாற்றுகள்-விதைகள் வழங்குதல், இரவு பகல் எந்நேரமும் அவசர கால மருத்துவ வசதி ஆகியவைகளை உற்பத்தியாளர்களுக்கு அவர்களது இருப்பிடத்திலேயே கிடைக்க ஏற் பாடு செய்கிறது. இந்த ஒன்றியங்கள் கிராம பால் உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதி களால் நிர்வகிக்கப்படுகின்றன. இவ்வொன்றி யங்களும் பால் உற்பத்தியாளர்களின் பிரதி நிதிகளாலேயே நிர்வகிக்கப்படுவதால் பால் உற்பத்தியாளர்களின் நலன் பேணிப் பாது காக்கப்படுகிறது. இவ்வொன்றியங்கள் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்களை நியமித்து அவர்களின் மூலம் தொழில் நுட்பப் பணிகளைச் சிறப்பாக செயல்படுத்துகின்றன. தொழில் நுட்ப மேலாளர்கள் இவ்வொன்றி யங்களில் பால் உற்பத்தியாளர்களின் பிரதி நிதிகளின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரிவதால் பால் உற்பத்தியாளர்களின் தேவைகளை அறிந்து அவைகளைப் பூர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கின்றனர். இந்த மாவட்ட ஒன்றியங்கள் கலப்புக் கால்நடை தீவன தொழிற்சாலையையும் பால் பவுடர் தொழிற் சாலையையும் பெற்றிருக்கும். கால்நடை தீவன தொழிற்சாலையிலிருந்து நியாயமான விலையில் பால் உற்பத்தியாளர்களுக்குக் கால் நடை தீவனம் வழங்கப்படும். தேவைக்கு அதிகமான பாலை, பால் பவுடர் தொழிற்சாலை மூலமாக பவுடராக மாற்ற இயலுவதால், இம் மாவட்ட ஒன்றியங்கள் வருடம் முழுவதும் உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்தியாகும் மொத்தப் பாலையும் கொள்முதல் செய்து சீரான விலைக்கு விற்க வாய்ப்பு உள்ளது.

**வழக்கமான சங்கங்கள்: பால் வழங்கும் சங்கங்கள்:**

பால் உற்பத்தியாளர் சங்கங்கள் வழக்க மான சங்கங்களிலிருந்து மாறுபட்டவை. பால் வழங்கும் சங்கங்களில் பால் உற்பத்தி யாளர்கள் மட்டுமின்றி எவர் வேண்டுமானு லும் அங்கத்தினராகலாம். இச்சங்கங்களில் தரத்தின் அடிப்படையில் இல்லாமல், கொள் முதல் செய்யப்பட்ட பாலின் அளவிற்குத் தகுந்தபடி விலை வழங்கப்படுகிறது. இதனுல் தரமான பால் உற்பத்தி செய்வதற்குப் போதிய ஊக்கம் ஏற்பட வாய்ப்பு இல்லை. இச் சங்கங்கள் கடனை மையமாகக் கொண் டவை. பால் உற்பத்திக்கு மிகத் தேவையான தொழில் நுட்ப வசதிகள் பால் உற்பத்தி யாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இச்சங்கங் களின் வரையறைக்குள் நான்கு அல்லது ஐந்து கிராமங்கள் இருப்பதால் இப்பகுதியில் உற் பத்தியாகும் பாலை முழு அளவில் கொள்முதல் செய்ய கவனம் செலுத்த இயலுவதில்லை. இச் சங்கங்களில் மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரு வாரத்திற்கு ஒரு முறையோ பால் பணம் பட்டுவாடா செய்யப்படும். இச் சங்கங்களில் தினப்படி அலுவல்களில் தலை வரது தலையீடு அதிகமாக இருக்கும். இச்சங் கங்களில் மிகக் குறைந்த அளவிலேயே போனஸ் வழங்கப்படுகிறது.

**தமிழகத்திலுள்ள கூட்டுறவு பால் சங்கங்கள்:**

தமிழகத்தில் கீழே, குறிப்பிடப்பட்ட திருத்தச் சங்கங்களும் வழக்கமான சங்கங் களும் உள்ளன: *(31-3-1978).*

| மாவட்டம் | திருத்தப் பட்ட சங்கம் | வழக்க மான சங்கம் |
|---|---|---|
| சென்னை | ... | 4 |
| செங்கற்பட்டு | 100 | 107 |
| வட ஆர்க்காடு | 102 | 143 |
| தர்மபுரி | 91 | 15 |
| தென் ஆர்க்காடு | 16 | 56 |
| கோயம்புத்தூர் | 349 | 50 |
| சேலம் | 164 | 28 |
| நீலகிரி | 63 | 20 |
| திருச்சி | 19 | 91 |
| தஞ்சாவூர் | ... | 58 |
| புதுக்கோட்டை | ... | 21 |
| மதுரை | 243 | 220 |
| இராமநாதபுரம் | 1 | 112 |
| திருநெல்வேலி | 70 | 85 |
| கன்னியாகுமரி | ... | 45 |
| மொத்தம் | 1218 | 1055 |

**ஆனந்த் மாதிரி சங்கங்கள் ஏற்படுத்திய சமூக பொருளாதார மாற்றங்கள்:**

கிராமங்களில் அதிக பால் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு நியாயமான விலை கிடைப்பதால், கிராம மக்களின் பொருளா தார நிலை மேம்பாடு அடைவதுடன் கிராம மக்கள் சத்துணவை அதிக அளவில் உட் கொள்ள வழி வகை செய்கிறது. இம்மாதிரி, சங்கங்கள் சுத்தமான பால், நியாயமான விலை யில் நகர மக்களுக்குக் கிடைக்க வழி வகை செய்துள்ளன.

*1972-73*ல் *20,000* மெட்ரிக் டன் பால் பவுடரை இறக்குமதி செய்து வந்த நாம், *1975*க்குப் பிறகு பால் பவுடரை இறக்குமதி செய்யவில்லையெனில், அதற்கு ஆனந்த் மாதிரி சங்கங்களை அமைத்ததே காரணம். இம்மாதிரிச் சங்க அமைப்பால் கால்நடைகளைப் பெற்ற ஏழை விவசாயிகளிடையேயும், பால் பண்ணை சம்பந்தப்பட்ட இயந்திரங்கள் தயாரிப்பாளர் களிடையேயும், கால்நடை தீவன உற்பத்தி சம்பந்தப்பட்ட இயந்திரங்களைத் தயாரிப்பவர்

களிடையேயும் பாலை, சங்கத்திலிருந்து குளிரூட்டும் நிலையங்களுக்கோ பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கோ கொண்டு செல்லும் வாகனங்களையும், நகரங்களில் பால் விநியோகம் செய்யும் வகையில் வாகனங்களைத் தயாரிப்பவர்களிடையேயும் உற்பத்தி சமீப காலங்களில் வரவேற்கத் தக்க அளவில் பெருகியுள்ளது.

கிராமங்களில் கிராம மக்களால் கிராம மக்களின் நன்மைக்காக ஆனந்த் மாதிரி சங்கங்கள் திறமையாக நடத்தப்பெறும் முறையானது, உயர்ந்த தரமான முறைகளை கிராம மக்களும் கடைப்பிடித்து வெற்றி அடைய இயலும் என்பதை நிரூபிக்கிறது. ஆனந்த் மாதிரி சங்க அமைப்பு உள்ள இடங்களில் நிலமற்ற விவசாயிகள் தங்கள் வருமானத்தில் 65-70 விழுக்காடு வரையும், சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறு விவசாயிகள் தங்கள் வருமானத்தில் 25-30 விழுக்காடு வரையும் பால் விற்பனையிலிருந்து பெற இயலுகிறது. ஆனந்த் மாதிரி சங்கங்களால் வேலை வாய்ப்பு அதிகரிப்பதுடன், சீரான வேலை வாய்ப்பை வருடம் முழுவதும் வழங்குவதுடன், பால் உற்பத்தி பெருகவும், பால் விற்பனையை அதிகரிக்கவும், சீரான வருமானம் கிடைக்கவும், உற்பத்தி, விற்பனை, வருமானம் ஆகியவற்றில் நிரந்தரத் தன்மையையும் அடைய உதவுகிறது. இம்மாதிரி சங்கங்களால் கிராம மக்களின் வாழ்வில் விரும்பத்தக்க பல மாறுதல்கள் தோன்றியுள்ளன. இம்மாதிரி சங்கங்கள் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் நிர்வகிக்கப்படுவதால் ஜாதி, தீண்டாமை, மதம் முதலிய வேறுபாடுகளைக் களைய உதவுகிறது.

அங்கத்தினர்களின் பொது வாழ்விலுள்ள நிலை கருதப்படாமல் சங்கத்தில் அனைவரும் சமமாக நடத்தப்படுவதால் சமதர்ம சமுதாயம் மலர வழி ஏற்படுத்துகிறது.

இம்மாதிரி சங்கங்கள் கிராமங்களின் நிலைமையை மேம்பாடு அடையச் செய்வதுடன் கிராமப் பெண்களுடைய நிலைமையையும், மேம்பாடு அடையச் செய்கிறது. கிராமப் பெண்களுக்குப் புதிய வருமானத்திற்கு வழி வகை செய்து தருகிறது. கிராமப் பெண்களுக்கு அறிவியல் முறைப்படி கால்நடைகள் பராமரிப்பது பற்றி செயல் முறை விளக்கங்கள், கலந்துரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் விளக்கப்படுவதால், தங்கள் குடும்பத்தை ஆரோக்கியமாகவும், சுகாதாரமான சூழ்நிலையிலும் வைத்திருக்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்து செயல்படுகிறார்கள்.



# HYMN

## — Rajaji

May the Lord forgive our sins
And gather all the nations
Here under this Uniting Roof.

To give up hate and fear
And learn to understand
Here under this Uniting Roof.

They took the risks of war
And dying, wished us take
The better risks of peace
Here under this Uniting Roof.


The good in every man
Is an atom too
Of measureless potential
Let us learn to find it
And explode it into lasting peace
Here under this Uniting Roof.

May the Lord forgive our sins
Inspiring us to peace on Earth
Here under this Uniting Roof.

(ராஜாஜி அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு 23-10-1966 அன்று திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களால் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் பாடப்பெற்ற பாடல் இது.)



வண்ணமயம்
வண்ணமயமான பருத்திப்
பட்டாடைகள் குவிந்துள்ளன
உங்கள் குடும்பத் தேவை
யனைத்திற்கும் கோ-ஆப்டெக்ஸ்
துணிகளையே தேர்ந்தெடுங்கள்.
புடவைகள் ● ஷர்ட்டிங்குகள் ●
● வேட்டிகள் ● ரெடிமேடுகள்
லுங்கிகள் ● ஜனதா புடவைகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# நாடகக்கலை வளர்த்த நாயகர்

## பேரறிஞர் அண்ணா

மூன்று மணி நேரம் வேறு பல வேலைகளிலே ஈடுபடவிருக்கின்ற மக்களை நாம் அழைக்கின்றோம்; ''இன்றையதினம் நாங்கள், இந்த நாடகத்தை நடத்துகின்றோம். காண வாருங்கள்,'' என்று அழைக்கின்றோம். மூன்று மணி நேரம் அவர்கள் தங்களுடைய சொந்தத் தொல்லைகளையெல்லாம் மறந்து, ஒரு புதிய உலகத்தில்-ஒரு தனி உலகத்தில்-மூன்று மணிநேரமே நிலைத்திருக்கும் உலகத்தில்-அமர்ந்திருக்கின்ற அந்த மூன்று மணி நேரத்தில், மக்கள், தங்களையும் தங்கள் பிரச்சினைகளையும் மறந்து, நாடக மேடையில் எந்தக் காட்சி காட்டப்படுகிறதோ அந்தக் காட்சியோடு தங்களை இணைத்துக் கொண்டு, நாடக மேடையில் எந்தக் கருத்து எடுத்துச் சொல்லப்படுகிறதோ, அந்தக் கருத்துக்குத் தங்களை உடையவர்களாக்கிக் கொண்டு, மெய்ம் மறந்த நிலையில்-ஆனால், புதியதோர் உலகில்-ஆனால், இன்பகரமான உலகில்-ஈடுபட்டிருக்கின்றார்கள். திரும்பிச் செல்கின்ற நேரத்தில் அவர்கள் உள்ளே நுழைகின்ற பொழுது கொண்டுவந்த கருத்தோடுகூட, இரண்டொரு கருத்துகளையாகிலும் வெளியே எடுத்துச் செல்கின்றார்கள். கருத்துக்களை எடுத்துச் செல்வதைவிட, நடை உடை பாவனைகளையே அதிகமாக எடுத்துச் செல்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஒரு நாடகத்தைப் பார்த்ததும், அதிலே கண்ட நடை, அதிலே பேசிய பேச்சு, அதிலே காணப்பட்ட உடைகள், அதிலே காணப்பட்ட காட்சி, அதிலே தெரிந்த புன்னகை ஆகியவைகளையெல்லாம் அதிகமான அளவுக்கு வெளியே கொண்டுசெல்வதில் நம்முடைய ரசிகர்கள் மிக்க சமர்த்தர்கள். ஆனால், நாடகம் மூலமாகத் தரப்பட்டிருக்கின்ற கருத்துக்களில் இரண்டொரு கருத்துக்ளையாகிலும் அவர்களுடைய உள்ளத்திலே தாங்கிச் செல்வார்களேயானால், அந்த மூன்று மணி நேரம் நாடகம் பார்த்ததன் பலனை அவர்களும் பெற்றவர்களாவார்கள். அவர்கள் மூலம் நாமும் பெற்றிருக்க இயலும் என்பதனாலே, நாடகம் எந்தக் கருத்தோடு நடத்தப்பட்டாலும், சில கருத்துக்களை மக்களுக்குத் தந்து அனுப்புகின்ற ஒரு கருவியாக—ஒரு வாய்ப்பாக—ஒரு பிரச்சாரமாகவே அது அமைந்திருக்கின்றது. அதிலும், தமிழகத்தில் மிக நேர்த்தியான முறையில் அந்தக் கருவி நல்ல விதத்திலே இயங்கிக் கொண்டு வருகின்றது.

அதற்கு ஒரு உறுதுணையாய் இருந்தவர்களுள் நம் சங்கரதாஸ் சுவாமிகள் முதல்வராவார்கள். பல நாடகங்களை நாடகக் குழுவினருக்கு அவர்கள் ஆக்கித் தந்திருக்கிறார்கள். அவர்கள் பல நாடகங்களைக் கோத்துக் கொடாமல் இருந்திருப்பார்களானால், பல்வேறு காப்பியங்களிலேயும் புராணங்களிலேயும் இணைந்து போய்த் தொக்கிப்போயிருந்த பல கருத்துக்கள் நாடக வடிவத்தைப் பெற்றிருத்தல் இயலாது.

அப்படிப்பட்ட புதிய நாடகங்களை அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஆக்கிக்கொடுத்து, அவை மூலமாக நடிகர்களுக்கு நடிப்பதற்கேற்ற தன்மையையும் ஆக்கிக் கொடுத்திருக்கின்றார்கள். அதைத் தொடர்ந்து பல நாடகாசிரியர்கள் தமிழகத்திலே தோன்றியிருக்கின்றார்கள்.''

[தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நூற்றாண்டு விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து..10-9-1967.]

## சங்கரதாஸ் சுவாமிகளின் புலமை!

ஸ்ரீசங்கரதாஸ் சுவாமிகளின் புலமைக்கு எடுத்துக்காட்டாக எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றில் அதிசயிக்கத் தக்க ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் கூறு கிறேன்.

நான் நடிக்கத் தொடங்கிய காலத்தில் அநேகமாக எல்லா நாடகங்களிலும் எனக்கு நாரதர் வேடமே கொடுக்கப்பட்டு வந்தது. ஒருநாள் நாடக சபையின் உரிமையாளர்களில் ஒருவரான திரு. பழனியா பிள்ளை அவர்கள் சுவாமிகளிடம், ''சுவாமி! சண்முகம் கதாநாயகனாக நடிப்பதற்கு ஏற்றபடி ஒரு நாடகம் எழுதுங்கள்'' என்று கூறினார். அப்போது எனக்கு வயது ஏழு; என்றாலும் நன்றாக நினைவிருக்கிறது.

அன்று மாலை, சுவாமிகள் புத்தகக் கடைக்குச் சென்று அபிமன்யுசுந்தரி அம்மானைப் பாடல் பிரதியொன்று வாங்கி வந்தார். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு 'அரிக்கன்' விளக்கை அருகில் வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினார். மறுநாள் பொழுது விடிந்து நாங்கள் எழுந்தபோது சுவாமிகள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அவரது படுக்கையருகே 'அபிமன்யு' நாடகம் மங்களப் பாட்டுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தது.

இது வெறும் கட்டுக் கதையன்று, உயர்வு நவிற்சியுமன்று. கண்கண்ட உண்மை. இச் சம்பவத்தை உடனிருந்து பார்த்த எங்கள் சக நடிகர்கள் சிலர் இன்றும் இருக்கின்றனர். திரு. பழனியா பிள்ளை அவர்கள் எல்லோரையும் அழைத்து, 'அபிமன்யு' நாடகத்தைக் காண்பித்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள்!.. அதற்கேற்ற உரையாடல்கள்! ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அடித்தல் திருத்தல் கிடையாது! ஒரு புத்தகத்தைப் பார்த்து நகல் எடுக்கும் வேலையைக்கூட இவ்வளவு விரைவாகச் செய்யமுடியாது. கற்பனையாக நான்கு மணி நேரம் நடைபெறக் கூடிய ஒரு நாடகத்தையே எழுதி முடித்து விட்டார் சுவாமிகள். அவருடைய புலமைத் திறனை என்னென்று கூறுவது?

''அடே சின்னப் பயலே! இந்த 'அபிமன்யு' நாடகம் உனக்காக எழுதப்பட்டது'' என்று கூறிச் சுவாமிகள் அன்று என் முதுகிலே தட்டியபோது எனக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை. இன்று அதை நினைத்துப் பூரிப்படைகிறேன்; பெருமிதங் கொள்கிறேன்.

—திரு டி. கே. சண்முகம்,
('தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்' என்னும் நூலில்).

## சங்கரதாஸ் சுவாமிகள் எழுதியுள்ள நாடகங்கள்

1. அபிமன்யு சுந்தரி
2. பார்வதி கல்யாணம்
3. பிரபுலிங்க லீலை
4. வள்ளி திருமணம்
5. பாதுகாபட்டாபிஷேகம்
6. இலங்கா தகனம்
7. அல்லி அர்ஜுனா
8. சிறுத்தொண்டர்
9. சதி அனுசூயா
10. பவளக்கொடி
11. சுலோசனா சதி
12. மணிமேகலை
13. மிருச்சகடி
14. சீமந்தனி
15. சாவித்திரி
16. கோவலன்
17. பிரகலாதா
18. ரோமியோவும் ஜூலியத்தும்




# வல்லநாட்டு அணை வலிமை பெற்றது!

'ஹோர்ஸ்வொர்த்' அணைக் கட்டு, புதுக்கோட்டை மாவட் டத்தின் மிகப் பழம் பெரும் அணைக்கட்டு ஆகும். மிகப் பழங்காலத்தில் கல் அணையாக உருவாக்கப்பட்ட இது, ஆதியில் வல்லநாட்டு அணை என்றே வழங்கப்பட்டு வந்தது. முன்பு வல்லநாடு கண்மாய் ஒன்றுக்கு மட்டுமே இது பயன் கொடுத்து வந்ததால் இவ்வாறு வல்லநாட்டு அணை என்று சொல்லப்பட்டு வந்தது.

மாறிவரும் காலங்களுக் கேற்ப, இக்கல்லணையில் அவ் வப்போது சிற்சில வளர்ச்சிப் பணிகள் மற்றும் சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டு வந்தன. குறிப்பாக இந்திய விடுதலைக்கு முன்னர், அப்போது புதுக் கோட்டை மன்னராக இருந்து வந்த மா மன்னர் திரு இராஜ கோபால் தொண்டமான் அவர்கள் ஆட்சியில் 1931 முதல் 1934 முடிய புதுக்கோட்டை அரசின் நிர்வாகியாக இருந்த திரு. ஹோர்ஸ்வொர்த், ஐ. சி. எஸ் அவர்கள் இப் பின்தங்கிய பகுதி களில் மிகுந்த அக்கறை காட்டி, வல்லநாட்டு அணைக்குச் சீர மைப்பு வேலைகள் செய்து, மேலும் பல பகுதிகளுக்குப் பாசன வசதி கிட்டும் வண்ணம் உதவி புரிந்தார்.

அன்னாரது ஆர்வத்தால் வல்ல நாட்டு அணை, புதிய மெருகோடு அதிக அளவில் பயன்தரத்தக்க வகையில் மாற்றியமைக்கப்பட்டு, அவரது நினைவாக 'ஹோர்ஸ் வொர்த் அணைக்கட்டு' என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்தது.

1959-60-ஆம் ஆண்டு வரை இந்த அணைக்கட்டின் இடது புறக் கால்வாயினால் வல்ல நாட்டுக் கண்மாய் உட்பட 12 கண்மாய்கள் இந்த அணையின் மூலம் பயன் அடைந்து வந்தன. இவற்றின் பாசனப் பரப்பு 26.40 ஏக்கர். வெள்ளாற்றின் நீரியல் கணக்குப்படி, மேலும் பல கண்மாய்களுக்கும் பாசன வசதி அளிக்க இயலுமா என்று ஆரா யப்பட்டு, ரூ. 4.16 இலட்சம் செலவில் இந்த அணைக்கட்டில் சில வளர்ச்சிப் பணிகள் 1959-60 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்டன.

இத்திட்டத்தில், வலதுபுறம் ஒரு புதிய தலை மதகும், அதி லிருந்து ஓர் உயர்மட்டக் கால் வாயும் அமைக்கப்பட்டு, அணைக் கட்டின் வலதுபுறம் மிரட்ட நிலைக் கண்மாய் உட்பட மொத் தம் 20 கண்மாய்கள் பாசன நீர் பெற வழி செய்யப்பட்டது. இவற்றின் பாசனப் பரப்பு 2755 ஏக்கர். இரண்டு கால்வாய் களின் மூலம் இவ்வணைக்கட்டி னால் பயன் பெறும் மொத்த பாசனப் பரப்பு 5395 ஏக்கர் ஆகும்.

1977-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப் பெருக்கால், வெள் ளாற்றில் வரலாறு கண்டிராத அளவில் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு இப்பழமையான அணைக்கட்டின் இடதுபுறம் கரை சுமார் 200 மீட்டர் அளவுக்கு உடைப்பெடுத் தது. ஆற்றின் போக்குக் கூட, சிறிது மாறிவிட்டது. இடது கரைப் பகுதியில் சில காலத்துக்கு முன்னரும் 2 அல்லது 3 முறை உடைப்பு ஏற்பட்டது. இதனை நிரந்தரமாகத் தவிர்க்கும் பொருட்டு இடதுபுறம் அணையை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட் டது.

மக்களின் நல்வாழ்வில் அக் கறை காட்டி வரும் நம் தமிழ் நாடு அரசு வெள்ளப்பாதிப்பு வேலைகளுக்காக நிதி ஒதுக்கி, இந்த அணைக்கட்டைச் செப்ப னிட 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வேலைகள் துவங்கப்பட் டன. விரிவுபடுத்தப்பட்ட இந்தப் புதிய அணையின் உபரி நீளம் 100 மீட்டர். பழைய வழிந்தோடும் அணை, வினாடிக்கு 385 க. மீ. வெள்ளப் பெருக் கினை வெளியேற்றும் திறனுள் ளது. இப்புதிய அணையும், பழைய கட்டட அணையும் மொத்தமாக வினாடிக்கு 655 கன மீட்டர் வெள்ளப் பெருக்கை வெளியேற்றும் திறன் உடையது.

இப்புதிய ஏற்பாட்டால் இனி வரும் காலங்களில் இடதுபுறக் கரைக்கு ஆபத்து இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தம் ரூ. 6.25 இலட்சத் துக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைகள் அனைத்தும் ரூ. 6 இலட்சம் செலவில் முடிவு பெற் றுள்ளன.

சீரமைக்கப்பட்ட இந்த அணை, மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமையில், மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்களால் 21-10-78 அன்று திறந்து வைக்கப்பட்டது.




# செந்தமிழில் சிற்பச் செந்நூல்

செந்தமிழில் முதன் முதலாகச் சிற்பக் கலையை விளக்கிடும் இலக்கண நூலாகச் சிற்பச் செந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்வித் துறையினரால் பதிப்பிக்கப்பட்ட இந் நூல், அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தில் அச்சிடப்பட்டதாகும்.

சமஸ்கிருதத்தில்தான் சிற்ப நூல்கள் உள்ளன. தமிழில் இருந்த சிற்பக் கலையைப் பற்றிய பண்டைய நூல்கள், காலத்தால் அழிந்து பட்டன என்று சொல்லப்படுகிறது. அக்குறையை இந்நூல் நீக்குகிறது.

தமிழ்நாடு அரசு 1965-ஆம் ஆண்டிலும், 1970ஆம் ஆண்டிலும் பிறப்பித்த ஆணைகளைத் தொடர்ந்து சிற்பச் செந்நூல் எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு நடத்தி வரும் கட்டடச் சிற்பக் கலைப் பயிலகத்தில் பயின்று வரும் மாணாக்கர்களுக்கும், பிற பயிற்சி நிலைய மாணாக்கர்களுக்கும் பாட நூலாக இயற்றப்பட்ட நூல், சிற்பச் செந்நூல்.

தமிழகச் சிற்பக் கலை வரலாற்றில் முதன் முதலில் தமிழில் ஒரு ஸ்தபதியினால் எழுதப்படும் நூல் இதுவேயாகும்.

பண்டை நூலாசிரியர்கள் இத்துறைக்கு அளித்த சிற்ப நூல்களையும், ஆகம நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு, மரபு வழுவாமல் மாணாக்கர் சிரமமின்றிப் படித்தறியத் தக்க எளிய தமிழில் எழுதப்பட்ட நூல். சிற்ப இலக்கணங்களுக்கேற்ப, தமிழகச் சிற்ப மரபு வழுவாமல் படங்களோடு முதன் முதலில் வெளிவரும் நூலாகும்.

இந்நூல், சிற்ப மாணாக்கர்களுக்கு மட்டுமல்லாமல்,


பணியாற்றும் ஸ்தபதிகள்;

சிற்பத் துறை கைவினைஞர்கள்;

சிற்பக் கலை ஆய்வாளர்கள்;

ஆகம விற்பன்னர்கள்;

கோயில் அர்ச்சகர்கள்;





கோயில் திருப்பணியாளர்கள்;

கலைக் காவலர்கள்

ஆகியோர்க்கும் பயன்படத் தக்கதாக எழுதப் பட்டிருக்கிறது. இஃது ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இருக்க வேண்டிய நூலாகும்.

காரைக்குடி திரு சா. கணேசன் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாமல்லபுர கட்டடச் சிற்பக் கலைப் பயிலகக் கண்காணிப்பாளர் திரு வை. கணபதி ஸ்தபதியால் எழுதப் பட்டது.

திட்டமிடப்பட்ட நான்கு நூல்களில் சிற்பச் செந்நூல் முதல் வெளியீடாகும். வெளிவர இருக்கும் பிற நூல்கள்:

தெய்வத் திருவுருவங்கள் (Iconography)

தமிழகக் கட்டடக் கலை நூல் (Architecture)

திருக்கோயில்களையும், சிற்பங்களையும் புதுப்பிக்கும் முறை (Renovation of Temple Buildings)

சிற்பச் செந்நூல் பற்றிய சுருக்கமான விவரங்கள் வருமாறு:

நூல்கள் :

1. பிரதிமா லக்ஷணம் (படிமக் கலை இலக்கணம்).

2. ரூபத்யான லக்ஷணம் (உருவ அமைதி இலக்கணம்)

3. பிராசாத லக்ஷணம் (கட்டடக் கலை இலக்கணம்)

4. ஜீர்ணோத்தார லக்ஷணம் (பழுது நீக்கிப் பாதுகாக்கும் நெறி)

1. பிரதிமா லக்ஷணம் என்பது, படிமக் கலை அளவு இலக்கண நூலாகும். படிமங்களை இயற்றுவதற்குரிய இலக்கணங்களையும், விதிகளையும், முறைகளையும் பேசும் நூல். இந்த நூல் முதல் சிற்பச் செந்நூலாக வெளிவருகிறது.

2. ரூபத்யான லக்ஷணம் என்பது, மேற்கண்ட சிற்ப இலக்கணங்களுக்கு ஏற்ப இயற்றப்பட்ட சிற்ப வடிவங்களின் அமைதிகளாகும். முதல் நூல் இலக்கணம் என்றால் இரண்டாவது நூல் அதன் இலக்கியமாகும். எண்ணற்ற வழிபடு படிமங்களின் உருவ வர்ணனைகளுக்கு ஏற்ப பண்டைச் சிற்பக் கலைஞர்களாலும், ஞானியர்களாலும் இயற்றப்பட்ட திருவுருவ விளக்கங்களின் தொகுப்பு நூல் இஃதாம்.

3. பிராசாத லக்ஷணம் என்பது, கட்டடக் கலை நூலாகும். கிராமம், நகரம், பட்டணம், இராஜஸ்தானி ஆகியவற்றின் அமைப்பிலக்கணமும், வீட்டுக் கட்டட இலக்கணங்களும், திருக்கோயில் கட்டட இலக்கணங்களும் அடங்கிய பெரு நூலாகும்.

4. ஜீர்ணோத்தார லக்ஷணம் என்பது, சிற்பங்களையும், கட்டடங்களையும் பழுது பார்த்துச் செப்பனிடும் முறையினை விளக்குவதாகும். கடந்த 7 ஆண்டுகளாகச் சிற்பக் கலை நூல் உருவாக்கும் இப்பணி நடைபெற்று வருகிறது.

ஆதார நூல்கள் :

மேற்கண்ட நூல்களை எழுதுவதற்கு ஆதாரமாகத் தமிழ்நாட்டிலும் வாழையடி வாழையாகத் தமிழகச் சிற்பக் கலை மரபிலே

பணி செய்து வரும் பல சிற்பக் கலைஞர்களிடமிருந்து அரிய சுவடிகள் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் மாமல்ல புரச் சிற்பக் கலைப் பயிற்சி நிலையத்தின் முன்னாள் முதல்வர், சிற்பக் கலாசாகரம் ம. வைத்திய நாத ஸ்தபதி அவர்களுடைய சுவடிகளே பெரும்பாலானவையாகும்.

மற்றும், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலிருந்து சிற்பக் கலை பற்றிய பழைய சுவடிகளின் கையெழுத்துப் படிகள் பெறப்பட்டன. அங்ஙனமே பாண்டிச்சேரியில் இயங்கி வரும் (French Institute of Indology) பிரெஞ்சுக் கலைக் கழகத்தாரிடமிருந்து அரிய பல சுவடிகளும் கிடைக்கப் பெற்றன.

அத்துடன், அச்சு ஏறிய சிறந்த சிற்ப, ஆகம நூல்களையும் சேகரித்தோம். அங்ஙனமே ஆகம நூல்களும் வழக்காற்றில் இன்றுமுள்ளவைகளாகும்.

**தமிழில் இயற்றியது ஏன்?**

பண்டைய சிற்பக் கலை நூல்கள் அனைத்தும் ஓலைச் சுவடியில் கிரந்த லிபியில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவை. சிற்பக் கலைச் செய்திகள் இலக்கணங்கள் அனைத்தும் செய்யுள் வடிவமாகவே இயற்றப்பட்டவை. இரத்தினச் சுருக்கமான அளவு முறைகள் நிரம்பியவை. கலைச் சொற்கள் மிகுதியாகக் கொண்டவை. கலைச் செய்திகளைச் சொல்லும் மொழி நடையே தனித் தன்மையது. சொற்களைக் கையாளும் முறையும், எண்களைக் குறிப்பிடும் பரிபாஷைச் சொற்களும் இலக்கிய மொழியிலிருந்து வேறுபட்டவை. சிற்பக் கலையில் பயிற்சியும், கலை நூல்களில் ஆராய்ச்சியும், உடையோரே படித்துப் புரிந்து கொள்ளக் கூடியவை. சிற்பக் கலையைப் போதிப்பதற்குரிய பயிற்று மொழியாகத் தொன்று தொட்டு தமிழே இருந்து வருகிறது. அங்ஙனமே மாமல்ல புரச் சிற்பக் கலைப் பயிலகத்திலும் கடந்த 21 ஆண்டுகளாகத் தமிழே பயிற்று மொழியாகவும் இருந்து வருகிறது. அங்ஙனமே சுவாமிமலை உலோகச் சிற்பப் பயிற்சி நிலையத்திலும், நாகர்கோயில் ரதப் பயிற்சி நிலையத்திலும் தமிழே போதனா மொழியாகும். எனவே, எல்லோரும் படித்துப் புரிந்து, கலை பற்றிய செய்திகளை அறியவும், அனுபவிக்கவும் தமிழில் இந்நூல் எழுதப் பெற்றிருக்கிறது.

**விளக்கப் படங்கள்....**

எல்லாவற்றுக்கும் மேலாக, சிற்ப இலக்கணங்களுக்கேற்ற விளக்கமோ உதவிப் படங்களோ ஏதும் அச்சுவடிகளில் இல்லை. எனவே, விளக்கவுரைகளும், விளக்கப் படங்களும், இலக்கணங்களோடு வெளிவருதல் இன்றியமையாதது என்று கருதி இயன்ற வரை இந்நூலைச் செம்மையாக ஆக்க முயன்றிருப்பதால் இந்நூல் செந்நூலெனப் பெயர் சூடி வருகிறது.

**மொழி பெயர்ப்பு நூல் அல்ல......**

சிற்பச் செந்நூல் ஒரு மொழி பெயர்ப்பு நூல் அல்ல. கை வசமுள்ள பண்டைச் சிற்பக் கலை நூல்களையும், சைவ-வைணவ ஆகம நூல்களையும் மீண்டும் மீண்டும் துருவி ஆராய்ந்து, பல்வேறு இலக்கணங்களையும், கருத்துக்களையும் செய்திகளையும் ஒரு சேரத் திரட்டி, ஒப்பு நோக்கி, பண்டைச் சிற்பக் கலை மேதைகள் படைத்தளித்த சிற்பச் செல்வங்களை நேரில் கண்டு சரி பார்த்து, தமிழகத்துச் சிற்பக் கலை மரபிற்கேயுரிய சிறப்பியல்புகளையும் கருத்திற் கொண்டு அவற்றையெல்லாம் இலக்கண விதி முறைகளோடு இணைந்து பல்வேறு விளக்கப் படங்களை அளவிட்டு வரைந்து அவற்றையும் இணைத்து, நடைமுறைக்கு ஏற்றவாறு எளிய தமிழில் வெளியிடப் பெறும் நூலே இச்சிற்பச் செந்நூல் ஆகும்.

**இஃதொரு வழி நூல்....**

சிற்பச் செந்நூல் இது, முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என்ற மூவகை நூல்களில் இரண்டாவதாகிய வழி நூல் ஆகும். முன்னோர் நூல்களின் முடிவுகளை ஒத்துச் சென்று தமிழகச் சிற்பக் கலை மரபுகளையும் தொழில் மரபுகளையும் போற்றி, அவற்றை முற்றிலும் தழுவி, முன்னோர் நூல்களில் இடம் பெறாதவையும், சிற்பிகளுக்கு இன்றியமையாதவையும் ஆன நூல்களில் இடம் பெறாதவையும், சிற்பிகளுக்கு இன்றியமையாதவையும் ஆன நூல்களில் கலைச் செய்திகளையும் மரபின் நுட்பங்களையும் தொகுத்து இலக்கணம் வகுத்து, அத்தியாவசியங்களையும் அதில் அடங்கிய செய்திகளையும் தக்க தலைப்புகளில் அமைத்து, இடையிடையே விளக்கவுரைகளையும் விளக்கப் படங்களையும் தந்து, நூலுக்குரிய பல உத்திகளையும் கொண்டு குறைகளின்றி, அழகுபட, தெளி



வாகவும், செம்மையாகவும் இயற்றப்பட்ட —ஒரு நூலுக்குரிய இலக்கணங்கள் அமைந்த —வெளியீடு ஆகும் இது.

இந்நூல் சிற்பக் கலையில் பயிற்சி பெறும் மாணாக்கர்களையே மனத்திற் கொண்டு எழுதப்பட்டிருப்பினும், இக்கலையில் ஆர்வமுள்ளோர்க்கும், ஆராய்ச்சி செய்வோர்க்கும் பயன் சுரக்கும்.

சிற்பிகள் எனப்படுவோர் கல், மண், மரம், செம்பு, சுதை, கடுசர்க்கரை, செங்கல், தந்தம், மெழுகு, வண்ணம் ஆகிய பத்து வகைப் பொருள்களில் ஏதேனுமொன்றில் உருவங்கள் இயற்றும் கைவினைஞர் ஆவர். பொருள்களின் தன்மையினால் செய்முறை வேறுபடும். ஆனால் இலக்கணங்கள், கலை நுட்பங்கள் யாவும் சிற்பிகள் அனைவர்க்கும் பொதுவே. எனவே, இச்சிற்பச் செந்நூல் மேற்கண்ட பத்து வகையான சிற்பிகளுக்கும் பயன் தரும் பொது நூலாகும்.

சிற்பக் கலை பயில்வோருக்குத் தெரிந்திருக்க வேண்டிய அடிப்படைச் செய்திகளும், மரபுகளும், செய்முறைகளும், இலக்கணங்களும், முதல் இருபத்தோரு அத்தியாயங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த பதினைந்து அத்தியாயங்களில் இலக்கணத்திற்கேற்ற சிற்பங்களையும், வழிபடு படிமங்களையும், நடைமுறையில் சிற்பிகள் இயற்றிட உதவும் அளவு முறைகளையும், கலைச் செய்திகளோடு சொல்லியிருப்பதைக் காணலாம்.

## அணுகு முறை :

பண்டைச் சிற்ப நூல்களைப் பார்க்கின் அவற்றின் தொடக்கம் முதல் இறுதி வரை சிற்ப உருவங்களின் அளவுகளும், அளவுகொள் முறைகளுமே நிரம்பி வழிவதைக் காணலாம். கலை பற்றிய அடிப்படைச் செய்திகளையோ தத்துவக் குறிப்புகளையோ அவற்றில் மிகக் குறைவாகவே காண முடியும். ஏனெனில் அவற்றைப் பயிற்றுவிக்கும் ஆசிரியனே தன் கலை உணர்விற்கும், அனுபவத்திற்கும் ஏற்றவாறு மாணாக்களுக்கு விரிவாக எடுத்து உரைக்கும் வழக்கு கலைத் துறையில் தொன்றுதொட்டு இருந்து வந்தமையாகும். ஆனால், இந்நூலில் ஆசிரியர் மாணாக்கனுக்குச் சொல்ல விரும்பிய கலைச் செய்திகள் எல்லாம் இடையிடையே தெரிந்த அளவு விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

படிம அளவுகளிலும், அளவு, கொள் முறைகளிலும், அவற்றைத் தொழிற்படுத்திப் படிமங்களை இயற்றும் முறைகளிலும், பண்டை நூலாசிரியர்கள் தத்தம் கொள்கைக் கேற்றவாறு இலக்கணம் வகுத்தளித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஒப்புநோக்கி சிறப்பு வாய்ந்த ஆலயங்களுக்குச் சென்று அங்குள்ள படிமங்களையும் கண்டு, அவ்வளவுகளை ஆராய்ந்து பார்த்து, வகுப்புகளில் கையாண்டு அழகுணர்ச்சிக்கும் நடைமுறைக்கும் ஒத்து வரக் கூடிய அளவுகளையும், இலக்கணங்களையும் அமைதிகளையும் இங்கு வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். அதே நேரத்தில் பிற நூலாசிரியர்களின் கருத்தையும் அவர்கள் கொண்ட அளவுகளையும் அடிக்குறிப்பில் காட்டியிருப்பதால் பிற நூலாசிரியர் கருத்தையும் சிற்பிகள் அறிந்து கொண்டு, விரும்பினால் பின்பற்றவும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

## புதிய அத்தியாயங்கள்.....

சிற்பக் கலை பயில்வோரும், பயிற்றுவிப்போரும், இத்துறையில் பணி செய்வோரும், தாங்கள் ஆக்கும் படிமங்களின் அமைப்பு இலக்கணங்களைத் தெரிந்து, புரிந்து தங்களுடைய கற்பனைகளையும் கலந்து, துணிந்து செயலாற்றுவதற்கு அவ்வமைப்புகளுக்கு ஆதாரமாய் விளங்கும் தத்துவக் கருத்துக்களைச் சிற்ப நூல்களில் நேரடியாகக் காணக் கிடைப்பதில்லை. ஏனெனில், போதிக்கும் ஆசிரியரே தத்துவ நூல்களையும், ஆகம நூல்களையும் கற்றுத் தெளிந்து, கலை பயிலும் மாணாக்கர்க்கு இடையிடையே சொல்வித் தருவது நடைமுறை வழக்கமாகும். எனவே, குரு வழியே தெரிந்து கொள்ள வேண்டிய ஆகம, தத்துவக் கருத்துக்கள் ''ஆகமக் கொள்கை விளக்கம்'' என்ற தலைப்பில் இந்நூலில் தனி அத்தியாயமாக இடம் பெற்றுள்ளது. இவ்வத்தியாயத்தில் கூறப்பட்ட கருத்



துக்கள் குறைவேயாயினும், அக்கருத்துக்கள் தெளிவுடன் அமைய, அத்துறையில் முறை யோடு கற்றுத் தேறிய பெரியோர்களின் ஆலோசனை பெற்றே அவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தொட்டுக் காட்டிய அச் செய்திகளை மேலும் ஆழ்ந்து ஆய்வதற்கு ஏற்ற ஆர்வத்தை அவை ஊட்டுமானால் இந் நூலின் பயன் மேலும் மிகுவதாகும்.

பண்டைச் சிற்ப நூல்களில் அங்குமிங்கும் சுட்டிக் காண்பிக்கப்படுவனவும் அடிப்படைச் செய்திகளுமான கை அமைதிகள், உடல் பங்க அமைதிகள், படிமத் திருக்கோலங்கள், ஆடை அணிகள், தலைக் கோலங்கள், கருக்கணிகள் தனித்தனி அத்தியாயங்களாக இந்நூலில் சிறப்பிடம் பெறுகின்றன. மரபுக்கேற்ற இலக்கணங்களும் வகுக்கப் பெற்று அம் மரபை விளக்கும் படங்களும் இடம் பெற்றுள்ளன.

பண்டைச் சிற்ப நூல்கள் ஆயுதங்களில் வடிவ அமைதி பற்றியும் அவை உணர்த்தும் பொருள் பற்றியும் அரிதாகவே பேசுகின்றன. ஆனால் பண்டைச் சிற்ப வடிவங்களில் குறிப் பாக தெய்விகப் படிமங்களில் சுமார் 120 ஆயுதங்களும், கருவிகளும், பிறபொருள்களும் இடம் பெற்றுள்ளதை நாம் காண்கிறோம். சிற்பிகளும், வழி வழியாக அவற்றைச் செய்து வருகின்றனர். அவ் ஆயுதங்களும், கருவி களும், ஆழ்ந்த கருத்துக்களை உணர்த்தி நிற் கின்றன. இந்த நோக்கிலேயே அவைகள் சிற்பத்தில் அமைக்கப்படுகின்றன. இந்தக் கோணத்தில் ஆராயும்போது ஆயுதங்களை யும், கருவிகளையும் பற்றி விளக்கிய சிற்ப நூலொன்று இருந்திருக்கக் கூடும் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஆகம நூல்களும், புராண நூல்களும், காவிய நூல்களும் ஆயுதங் களைப் பற்றியும், கருவிகளைப் பற்றியும், ஆங்காங்குக் கூறுகின்றன. நடைமுறையில் சிற்பிகளிடையே செவி வழிச் செய்திகளாகப் புழக்கத்தில் ஒரு சில உள்ளன. இவை அனைத் தையும் உற்று நோக்கித் தொகுத்தும், பகுத் தும், விரித்தும் இந்நூலில் தனித் தலைப்பில் முதல் முதலாக இயன்ற வரை விளக்கப்பட் டுள்ளது. ஒரு சில சிறப்பான கருவிகள் படங் களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நமது நாட்டு அருங்கலைகள் —காவியம், இசை, நாட்டியம், ஓவியம், சிற்பம்—அனைத் தும் ஒரே இலட்சியமும், ஒரே தன்மையும் கொண்டு விளங்குபவை. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினைப் பெறச் செய்தலே அவற்றின் இலட்சியம். கலைத் துறையில் உள்ளதை உள்ளபடி சொல்வதும் செய்வதும் இல்லை. தாங்கள் கண்ட காட்சி யினையும் அதனால் அகத்தில் எழுந்த ரசத் தையும் அனுபவித்து அந்த ரசானுபவத்தின் வெளிப்பாடாக —உள்ளதை உணர்ந்தபடி— செய்வது அல்லது சொல்வது மரபு. எனவே தான் காவிய இலக்கணத்தைச் சிற்பியும் தெரிந்து இருக்க வேண்டும் என்று கலை நூலா சிரியர் வற்புறுத்தி ''காவிய இலக்கணம் தெரி யான் ஓவிய இலக்கணம் அறியான்'' என்று ரத்தினச் சுருக்கமாகப் பேசுவர்.

எனவே, பண்டைக் காலத்தில் மொழி இலக்கண நூலறிவு பெற்ற சிற்பக் கலைஞ ஒனுக்கு நவரசங்களைப் பற்றித் தெரிந்திருக்கு மாதலால், அவற்றுக்குச் சிற்ப நூல்களில் தனி இடம் அளிக்கவில்லை. என்றாலும் இஃதொரு குறையாகவே தோன்றியதால் கலையும் 'சுவையும் என்ற தலைப்பில் மிகச் சுருக்கமாகச் சுவை பற்றிய செய்திகள் இங்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றன. உடலுக்கு உயிர் போல கலைக்கு உயிராக அமைவது சுவையான தால் சுவை பற்றி ஒரு குறிப்பாவது இருத்தல் இன்றியமையாததன்றோ?

தெய்வத் திருமேனிகளைச் செப்புத் திரு மேனிகளாக வடிப்பதில் தமிழகம் தனிப் பெருமை பெற்று விளங்குகிறது. செப்புத் திருமேனிகள் வார்ப்படப் படிமங்களாம். சிற்ப நூல்களில் வார்ப்படப் படிமச் செய் முறை பற்றித் தெளிவாகக் கூறவில்லை. இது தொழில் அம்சம் நிரம்பிய முறையாதலால் செய்முறை பற்றி விளக்கமாகப் பேசவில்லை. என்றாலும் இந்நூலில் செய்முறைகள் மிகச் செம்மையாகவும், விரிவாகவும், விளக்கப்படு கின்றன. தனி அத்தியாயமே எழுதப்பட்டுச் சிறப்படைகிறது.

**சாஸ்திர உலகமும் அனுபவ உலகமும்**

கலைத் துறையில் கலை நூல்களைக் கற்றறிந்தோர் சொல்லும் சொற்கள் தொழில் துறையில் பணி செய்வோர்க்குச் சரிவரப் புரிவ தில்லை. அங்ஙனமே தொழில் துறையில் கையாளும் கலைச் சொற்கள் நூலறிந்த புல வோர்க்குப் புரிவதில்லை. இந்நூலில் இவ்விரு துறைகளும் ஒன்றி உறவாடுகின்றன.

**மரபு காக்கும் படங்கள்...**

சிற்ப இலக்கணங்களையும், அளவுகளை யும் நேரடியாகக் கையாண்டு படங்கள் வரையும்போது பண்டைச் சிற்பிகள், உடல் அமைதிகளையும், ஆடை அணிகளையும், தலைக் கோலங்களையும் எங்ஙனம் இயற்றி அமைத்தார்களோ அச்சிறப்பான மரபிலேயே படங்கள் இந்நூலில் வரையப்பட்டிருக்கின் றன. தலை சிறந்த கலைப் படைப்புகளை நேரில் சென்று கண்டு அங்ஙனமே படங்கள் வரையப்பட்டிருக்கின்றன. இம்மரபைக் காப்பது இந்நூலின் அடிப்படை இலட்சியம் ஆகும்.

**சிற்பச் செந்நூல் வெளியீட்டு விழா :**

இவ்வரிய நூலை மாண்புமிகு கல்வியமைச் சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் 1-11-78 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் வெளி யிட்டார்கள். 'சிற்பச் செந்நூல்' முதல் பிரதி யைப் பேரறிஞர் அண்ணா தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு சிவ லிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார். விழாவில் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வா. செ. குழந்தை சாமி, தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்கு நர் டாக்டர் இரா. நாகசாமி, ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தொடக்கத்தில், சிற்பச் செந்நூலின் பெருமையை விளக்கிக் காரைக்குடி கம்பன் அறநிலைய அமைப்பைச் சேர்ந்த திரு சா. கணேசன் அரிய உரை நிகழ்த்தினர்.

விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் திரு சு. வையாபுரி அவர்கள், மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைப் பயிலகத்தை மேம்படுத்த தொழில் நுட்பக் கல்வித்துறை பரிசீலித்து வரும் திட்டங்களை விளக்கினர். விழா முடி வில் நூலாசிரியர் திரு வை. கணபதி ஸ்தபதி நன்றி கூறினர்.



# ஓங்கிடும் ஊர் நலம்

கோவை மாவட்டத்திலுள்ள ஆனைமலை வட்டாரம் 136.26 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. மேற்கே கேரள மாநிலம் எல்லையாகவும், கிழக்கே வடக்கேயும் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம் எல்லையாகவும், தெற்கே ஆனைமலைக் குன்றுகள் எல்லையாகவும் உள்ளன. ஆனைமலை, பொள்ளாச்சியிலிருந்து 14 கிலோ மீட்டர் தூரத்தில் தென் மேற்கில் உள்ளது. இவ்வொன்றியத்தில் 19 ஊராட்சிகளும், 4 பேரூராட்சிகளும் அடங்கி உள்ளன.

நீர்ப்பாசனம், விதை விநியோகம், இயற்கை உர உற்பத்தி, இரசாயன உர விநியோகம், காய்கறிகள் வளர்ச்சித் திட்டம், மண், விதைப் பரிசோதனை, தென்னங்கன்று விநியோகம், மரம் நடும் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுவதோடு, பழச்செடிகள் விநியோகம் விவசாயக் கருவிகள், உழவு மாடுகள், கறவை மாடுகள்—பால் தரும் பசுக்கள் ஆகியவையும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறு நீர்ப் பாசனத் திட்டங்களுக்கும், கால்நடை வளர்ப்பிலும் அவர்களுக்குக் கடனும் மான்யமும் வழங்கப்படுகின்றன.



**கால்நடைப் பராமரிப்பு :**

ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் கேந்திரக் கால்நடைத் திட்டம் செயல்படுத்தும் ஒன்றியமாகும். இவ்வொன்றியத்திலுள்ள மலையாண்டிப் பட்டினம் கிராமத்தில் செயற்கை முறை இனவிருத்திக்கான நிலையம் நிறுவப்பட்டுள்ளது. பொள்ளாச்சி கால்நடை மருத்துவமனையிலிருந்து விந்து சேகரிக்கப்பட்டு, இவ்வொன்றியத்தில் உள்ள கால்நடைப் பராமரிப்புக் கிளை நிலையங்களான அம்பராம் பாளையம், காளியப்ப கவுண்டன் புதூர், பெரியபோது மற்றும் கம்பாலபட்டிக்கு அனுப்பப் பட்டு செயற்கை முறை இன விருத்தி மூலம் உயர் ரகக் கால் நடை உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்காக விவசாயிகளிடம் குறைந்த கட்டணமாக ரூ. 2 மட்டும் ஒவ்வொரு கால்நடைக்கும் வசூலிக்கப்படுகிறது.

இவ்வொன்றியத்திலுள்ள கால்நடைகளுக்கு ஏற்படும் சப்பை நோய், தொண்டை அடைப்பான் நோய், வெக்கை நோய், கால் நோய், வாய் நோய் போன்ற நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல்நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது.

இவ்வொன்றியத்தில் கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலம் வேண்டிய அளவு உள்ளது. இங்கு குதிரை மசால் என்.பி. 21 புல் ரகம் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.



**கூட்டுறவுச் சங்கங்கள் :**

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் பரவலாக அனைத்து முக்கிய கிராமங்களிலும் இடம் பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாயிகளுக்கு வேண்டிய பயிர்க் கடன், உரம், மத்திய காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்களில் 10 கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குத் தேவையான கட்டுப்பாட்டுப் பொருள்களான அரிசி, கோதுமை ஆகியவை விநியோகம் செய்து வருகின்றது. மேலும், 8 கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் கட்டுப்பாட்டுப் பொருள்களுடன் நுகர்வோர் பொருட்களையும் பாலிதீன் பைகளில் அடைத்து விற்பனை செய்து வருகிறது.



**பணிகள் விவரம் :**

இவ்வொன்றியத்திலுள்ள கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்கள் மூலம் 1977-78ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூபாய் 56,18,528.84 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மத்திய காலக் கடனாக ரூ. 69,990 பட்டுவாடா செய்யப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூபாய் 7,65,572.56 மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்களும், நுகர்வோர் பொருட்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ. 23,14,609.28 மதிப்புள்ள உரம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இவ்வொன்றியத்தில் 1977-78ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு ஆரம்பமாகிச் செயல்பட்டு வருகின்றன.

சுப்பேகவுண்டன்புதூர், அங்கலக்குறிச்சி, ஆத்துப்பொள்ளாச்சி மற்றும் கீழ்க்கண்ட இடங்களில் கூட்டுறவுப் பால் விநியோகச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன:

1. சோமந்துரைசித்தூர், 2 கோட்டூர் மற்றும் கம்பாலபட்டி.

இவ்வொன்றியத்திலுள்ள வேட்டைக்காரன்புதூரில் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது.



**குழந்தைகள் காப்பகம் :**

இவ்வொன்றியத்தில் 7 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. அவை ஆனைமலை, சுப்பேகவுண்டன்புதூர், பெத்தநாயக்கனூர், தென்சித்தூர், தாத்தூர், வேட்டைக்காரன்புதூர், அர்த்தநாரி பாளையம் ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. இவை 1967 முதல் நடைபெற்று வருகின்றன. இந்த மையங்கள் இலவசமாக மக்களால் வழங்கப்பட்ட கட்டடங்களில் நடைபெறுகிறது. இந்த 7 குழந்தைகள் காப்பகங்களாலும் 279 குழந்தைகள் பயன்பெறுகின்றன. அவர்களில் 37 பேர் அரிசனக் குழந்தைகள் ஆகும்.



இவ்வொன்றியத்தில் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. இங்கு மொத்தம் 745 உறுப்பினர்கள் உள்ளனர். கோழி வளர்ப்பு, பின்னல் வேலை, வீட்டுத் தோட்டம் முதலிய வேலைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். சிறு சேமிப்பு, குடும்பநலத் திட்டப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டு உள்ளார்கள்.

**போக்குவரத்து :**

இவ்வொன்றியத்தில் 19 வருவாய்த் துறை கிராமங்களும், 23 ஊராட்சிகளும், 55 குடியிருப்புகளும் உள்ளன. எல்லாக் குடியிருப்புகளுக்கும் போக்குவரத்து வசதியுள்ளன.



**குடிதண்ணீர் :**

இவ்வொன்றியத்திலுள்ள 55 குடியிருப்புகளில் 10 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாரால் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. மீதியுள்ள குடியிருப்புகளில் 30 குடியிருப்புகள், 16 மேல்நிலை நீர்த் தொட்டிகள் கட்டப்படும், 22 தரை மட்டத் தொட்டிகள் கட்டப்படும் கிராமங்களிலுள்ள கிராமக் கிணறுகள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

மீதியுள்ள 15 குடியிருப்புகள் கிராமங்களிலுள்ள கிணறுகள் மூலம் குடிதண்ணீர் வசதி பெறுகின்றன.

இவ்வொன்றியத்தில் அங்கலக்குறிச்சி, ஜல்லிங்பட்டி, கம்பாலப்பட்டி போன்ற கிராமங்களிலுள்ள கிணற்றுத் தண்ணீரில் புளோரைடு என்ற நச்சுப் பொருள் இருப்பதால், அதற்கு ஒரு மாற்றுத் திட்டமாக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டுச் செயல்படவிருக்கிறது.



**கல்வி :**

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், ஐந்து உயர்நிலைப் பள்ளிகளும், 13 நடுநிலைப் பள்ளிகளும், 42 துவக்கப்பள்ளிகளும் உள்ளன.

இப்பள்ளிகளில் 13 நடுநிலைப் பள்ளிகளும், 38 துவக்கப் பள்ளிகளும் இவ்வூராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தின்கீழ் நடத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 4 துவக்கப் பள்ளி நிதி உதவி பெறும் பள்ளியாகும். இந்த 55 பள்ளிகளிலும் மதிய உணவு வழங்கப்படுகிறது.

இப்பள்ளிகளில் மொத்தம் 15,924 மாணவ, மாணவியர்கள் பயிலுகின்றனர். இவர்களில் 1,243 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். மொத்த மாணவ, மாணவியர்களில் 8 சதவிகிதம் ஆகும். 3,625 மாணவ, மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.



**சமூகக் கல்வி :**

இவ்வொன்றியத்தில் 17 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன.

தகவல் நிலையம் ஒன்றும் ஆனைமலையில் உள்ளது.

'இளைஞர் மன்றம்' ஆனைமலை, பெரியபோது, சோமந்துரை சித்தூர் முதலிய ஊராட்சிகளில் உள்ளன. பெத்தநாயக்கனூர், சின்னப்பம்பாளையம் ஆகிய ஊர்களில் வானொலி மன்றங்கள் உள்ளன.



**முறை சாராக் கல்வி நிலையம் :**

இவ்வொன்றியத்தில் தற்போது ஆனைமலை, பெரியபோது, ரமண முதலிபுதூர் ஆகிய மூன்று ஊர்களிலும் இடையில் பல்வேறு காரணங்களால் கல்வியைத் தொடர இயலாதவர்களுக்காக முறைசாராக கல்வி நடைபெற்று வருகிறது. இங்கு மொத்தம் 120 பேர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும், பொங்காளியூர், ஒடையகுளம் ஆகிய இரண்டு இடங்களிலும் விரைவில் துவங்க உள்ளது. மேலும் 7 இடங்களில் புதிதாக நிலையங்கள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



**சிறு சேமிப்பு :**

'மகிளப் பிரதான் ஷத்திரிய பச்சாத்து யோஜன்' சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் இங்கு 20 பெண் முகவர்கள் உள்ளனர். இவர்கள் 1,500க்கு மேல் மொத்தக் கணக்குகள் சேர்த்துள்ளனர்.



**கிராமத் தன்னிறைவுத் திட்டம் :**

கோவை மாவட்டத்தில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், கிராம தன்னிறைவுத் திட்டத்தைச் செயற்படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசின் ஒப்புதலுடன் கீழ்க்கண்ட கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் பல்வேறு வகையான முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றத் தேர்வு செய்யப்பட்டு உள்ளன :

1. பெரியபோது
2. ஒடையகுளம்
3. ஆனைமலை
4. சோமந்துரை
5. பெத்தநாயக்கனூர்
6. தென்சங்கம்பாளையம்
7. காரியாஞ்செட்டிபாளையம்
8. பில்சின்னம்பாளையம்
9. கம்பாலபட்டி
10. தென்சித்தூர்

இந்தப் பத்து கிராமங்களிலும் மக்களது வாழ்க்கைத் தரம், தொழில், வருமானம் ஆகியன பற்றி விரிவான புள்ளி விவரங்கள் சேகரித்து மேற்கண்ட கிராமங்களில் ரூ. 2,400க்குக் கீழ் ஆண்டு வருமானம் உள்ள வறுமைக் கோட்டில் உள்ளவர்களை மேம்படுத்தும் வகையிலும், இந்தப் பத்துக் கிராமங்களின் பொருளாதார வளத்தைப் பெருக்கும் வகையிலும் பல்வேறு அரசுத் துறைகள், பொது நிறுவனங்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மக்கள் பணி மன்றங்கள் ஆகியவற்றின் உதவியோடு கிராமங்களது சுய முயற்சியை ஊக்குவித்துச் செயல்படுத்தும் வகையில் ஒரு விரிவான திட்டம் தயார் செய்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

இவ்வாறு ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் அடுக்கடுக்கான பல பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி, ஊர் நலம் ஓங்கிட உழைத்து வருகின்றது என்றால் அது மிகையல்ல!

பசுமைப் புரட்சி நம் நாட்டில் ஏற்பட முக்கிய காரணம் நமது சாகுபடி முறைகளில் அமோக விளைச்சல் ரகங்களைப் புகுத்திய தாகும். இந்த ரகங்களைப் பயி ரிட்டு உயர் விளைச்சல் பெற வேண்டுமானால் சீரிய சாகுபடி முறைகளைச் சிறந்த முறையில் கையாள வேண்டியது அவசியம். இவ்வாறு அமோக விளைச்சல் ரகங்களைச் சாகுபடி செய்வதில் அனுசரிக்க வேண்டிய உழவியல் சம்பந்தமாக நுணுக்கங்கள் உழவர் அறிந்து செயல்பட அவர் களுக்குப் பயிற்சி அளித்தல் இன் றியமையாததாகும்.

உழவர் பயிற்சித் திட்டம் வடார்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் செய் யார் ஆகிய நான்கு வேளாண் மைக் கோட்டங்களிலுள்ள 36 ஊராட்சி ஒன்றிய வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்காகப் பணி யாற்றி வருகிறது.

**உழவர் பயிற்சி நிலையப் பணிகள்**

உழவர்களுக்கு நவீன விவசாய நுணுக்கள் பற்றித் தீவிர செயல் முறைகளை விளக்கப் பல்வேறு விதங்களின் பயிற்சிகள் அளிக்கப்

**பயிற்சியாளர்களுக்குரிய தகுதிகள்:**

(1) பயிற்சியாளர்கள் விவசாயத் தில் ஈடுபடும் முற்போக்கு விவ சாயிகளாக இருக்க வேண்டும். (2) வயது வரம்பு 18 முதல் 45 உள்ளவர்களாக இருக்க வேண் டும். (3) எழுதப் படிக்கத் தெரிந் தவர்களாக இருக்க வேண்டும். (4) குறைந்தபட்சம் சுமார் 3 ஏக்கர் சாகுபடிக்கேற்ற நில மிருக்கவேண்டும். (5) பயிற்சி யாளர்கள் தொடர்ந்து 4 நாட்கள் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்.

# ராணிப்பேட்டையில் உழவர் பயிற்சி நிலையம்



எச். பாலசுப்பிரமணியன்

துணை வேளாண்மை இயக்குநர், நல்லாக், இராணிப்பேட்டை.

**உழவர் பயிற்சி:**

உழவியல் ஓர் வளர்கின்ற விஞ் ஞானம், வேளாண் விஞ்ஞான ஆராய்ச்சி வளர்கிறது. தீவிர மடைந்து வருகிறது. இதனால் புதுப்புது கண்டுபிடிப்புகள் உழ வர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கிட அவ்வப்போது வெளி வந்த வண்ணம் உள்ளன. இந்த புதிய ஆராய்ச்சி முடிவுகளை உழவர் பெருமக்கள் உடனுக் குடன் தெரிந்து அவ்வழி முறை களைப் பயன்படுத்தி உற்பத்தி யைப் பெருக்க வேண்டும். இந்தக் குறிக்கோளையுடைய உழவர்க் குப் பயிற்சி அவசியமாகிறது. ஆகவே, தற்போது கடைப்பிடிக் கும் உழவு முறைகளில் புதிய உழவியல் நுணுக்கங்களைப் புகுத்தி நவீன சாகுபடி செய்து விளைச்சலை அதிகரிக்க உழவர் பயிற்சி இன்றியமையாதது. இப் பணியை உழவர் பயிற்சி நிலை யங்கள் சிறப்பாகச் செய்து வரு கின்றன.

தமிழகத்தில் இராமனாதபுரம் மாவட்டம் நீங்கலாக ஏனைய எல்லா மாவட்டங்களிலும் உழ வர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. வடார்க்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை உழவர் பயிற்சி நிலையம் 1-3-68 அன்று துவக்கப்பட்டது. உழவர் பயிற்சி நிலையம் 'நவ்லாக்' என்ற இடத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் 1-2-71 முதல் செயல்பட்டு வரு கிறது.

படுகின்றன. மற்றும் கால்நடை கோழி வளர்ப்பு குறித்து விளக் கங்கள் அளிக்கப்படுகிறது. இப் பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கும் மற்றும் விவ சாய மகளிர்களுக்கும் அளிக்கப் படுகிறது. இப்பயிற்சி உழவர் கட்கு மட்டுமல்லாமல், உழவர் மகளிர்க்கும் அளிக்கப்படுவதால் அவர்களைச் சீர்மிகு சாகுபடி முறைகளில் நல்ல ஈடுபாடும், ஆர்வமும் உள்ளவர்களாக மாற்ற உதவுகிறது.

இதில் குறிப்பாக உயர்விளைச் சல் ரகங்கள், வீரிய ஒட்டுத்தானி யங்கள் போன்றவைகளைக் கொண்டு எளிய சத்துள்ள பண் டங்களைத் தயாரிப்பது பற்றி யும் செயல்முறைகள் செய்யப்படு கின்றன.

**நிலையப் பயிற்சி:**

இந்நிலையத்தினரால் ஒவ் வொரு ஆண்டும் 10 ஆண்கள் பயிற்சி முகாம்களும், 10 பெண்கள் பயிற்சி முகாம்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் அளிக்கப்படு கிறது. ஒவ்வொரு பயிற்சியிலும் 25 பயிற்சியாளர்களைத் தேர்ந் தெடுத்துப் பயிற்சிக்கு அனுப்பு வது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் மற்றும் ஆணையாளர் வானொலி விவாதக் குழு அமைப்பாளர்கள் உதவுகின்ற னர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர் பெண் பயிற்சியாளர்கட்கும் தனித்தனியாய்ப் பயிற்சி அளிக் கப்படுகிறது.

நான்கு நாட்கள் பயிற்சியில் ஒருநாள் அண்மையிலுள்ள அரசி னர் விதைப்பண்ணை மற்றும் விவசாயப் பரிசோதனை நிலை யங்கள் ஆய்வுக் கூடங்களுக்கு அழைத்துச் சென்று நேரடிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர விவசாய சம்பந்தமாகப் படக்காட்சியும், கண்ணாடிப் படக்காட்சியும் காண்பித்து எல் லாப் பயிற்சி முகாமிலும் விளக் கப்படுகிறது.

பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி யில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு வருக்கும் உணவுத் தொகைக்காக ரூ. 5 வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 10 ஆண்கள் பயிற்சியும், 10 பெண்கள் பயிற்சியும் நடத்த திட்டமிடப்பட்டு, 20 முகாம்கள் 20 ஒன்றியங்களில் முடிக்கப் பட்டு, 500 பயிற்சியாளர்களுக் குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இது தவிர முதியோர் கல்வி துணை வேளாண்மை அலுவலர் களுக்குப் பயிற்சி முகாம்களும், பயிர்ப் பாதுகாப்பு போன்ற தனிப் பயிற்சிகளும் நடத்தப்படு கின்றன.

**அமைப்பாளர்களுக்கு நிலையப் பயிற்சி:**

வானொலி ஆய்வு மன்ற அமைப்பாளர்கட்கான தனி

பயிற்சி 2 நாட்கள் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது உழவர் ஆய்வு மன்றம் செயல்பட வேண்டிய வழிமுறைகள், அமைப்பாளர்களது கடமைகள், உறுப்பினர்களது கடமைகள் முதலியவை குறித்தும் விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின்போது ஒவ்வொரு நபருக்கும் நாளொன்றுக்கு ரூ. 5 உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

**சுழற் பயிற்சி முகாம் :**

இப்பயிற்சி ஒருநாள் அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் வயலில் நேரடி செயல் விளக்கங்கள் (நடவு, மேலுரமிடல், பயிர்ப் பாதுகாப்பு, களைக் கொல்லிகள் உபயோகித்தல்) முதலியவைகளைச் செய்து காட்டப்படுகின்றன.

பயிற்சியாளர்கள் செயல்விளக்கத்தைக் காண்பது மட்டுமல்லாமல், நல்ல செயல்திறனைப் பெற உதவுகிறது. இவ்வாண்டு 12 செயல்விளக்க வயல்கள் அமைக்கப்பட்டு 100 பயிற்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

**சத்துணவுச் செயல்விளக்கம் :**

சத்துணவுச் செயல்விளக்கம் இவ்வாண்டு 10 நடத்த திட்டமிடப்பட்டு பெண்கள் நிலையப் பயிற்சியின்போது கிராமத்தில் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய விரிவு அலுவலர் (சமூகநலம்) உழவர் பயிற்சி நிலையப் பெண் விளக்குனர் மூலம் பெண்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

**உழவர் ஆய்வு மன்றங்கள் :**

உழவர் பயிற்சி நிலையத்தின் மற்றொரு முக்கிய பணி, உழவர் ஆய்வு மன்றங்கள் அமைத்து அவை திறம்படச் செயல்பட உறுதுணையாக இருந்து ஊக்குவிப்பதாகும்.

உழவர் ஆய்வு மன்றம் என்பது ஒரு சிறிய விவசாய அமைப்பு அல்லது குழு போன்ற சிறிய அமைப்பாகும். இதன் தலைவர் பயிற்சி பெற்ற நபராக இருக்க வேண்டும். குறைந்தது 20 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது அமைப்பாளர் பொறுப்பு. உழவர் ஆய்வு மன்றங்களின் முக்கிய பணி, கருத்து மற்றும் அனுபவ பரிமாற்றமும், கூட்டமாகச் செயல்திட்டம் வகுத்து நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி மற்ற சிறிய விவசாயிகளுக்கு முன்மாதிரியாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்குவதாகும்.

இக்குழு இரவு 7.25 மணி முதல் 8.00 மணி வரை செவ்வாய், வெள்ளி, ஞாற்றிறுக்கிழமைகளில் "உழவர் உலகம்" நிகழ்ச்சியைத் தவறாமல் கேட்டு எந்தெந்த பொருள் பற்றி பேசப்படுகிறதோ அதைப்பற்றி விவாதித்து, சந்தேகங்களை மறு நாளே வானொலி நிலையத்திற்கும், சம்பந்தப்பட்ட உழவர் பயிற்சி நிலையத்திற்கும் அனுப்ப வேண்டும்.

அடுத்த செவ்வாய், வெள்ளி, ஞாயிறு அன்று வானொலியில் பதில்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இது தவிர கேள்விகட்கு உழவர் பயிற்சி நிலையத்திலிருந்தும் பதில் அளிக்கப்படுகிறது. தற்போது 200 ஆண்கள் விவாதக் குழுவும், 100 பெண்கள் விவாதக் குழுவும் செயல்படுகின்றன.

இவர்களுக்கு வானொலிப் பெட்டிகள் மானிய விலையில் மத்திய அரசு உதவியுடன் வழங்கப்பட்டுள்ளன.

கடிதப் போக்குவரத்திற்குக் கவர்கள், அஞ்சல் கார்டுகள், பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன அவ்வப்போது நிலைய அலுவலர்கள் விவாதக் குழுக்களைப் பார்வையிட்டு மன்றம் திறம்படச் செயல்பட அறிவுரை வழங்கப்படுகிறது.

**தானியச் சேமிப்பு இயக்கம் :**

உழவர் பயிற்சி நிலையத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கிராமத்தில் தானியச் சேமிப்பின் அவசியம் பற்றி எடுத்துக்கூறி விவசாயிகளின் தானியங்களை நன்றாகச் சேமித்துவைக்கவும், எலிகளிலிருந்து காக்கவும் ஆலோசனைகளும், உதவிகளும் செய்யப்படுகிறது.

**விவசாய சம்பந்தமான வெளியீடுகள் :**

இந்நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் "உழவர் செல்வம்" என்ற இதழ் விவசாயச் சம்பந்தமான குறிப்புகளுடன் வெளிவருகிறது. இந்த வெளியீடுகள் உழவு ஆய்வு மன்ற அமைப்பாளர்கள் மற்றும் விவசாயத்துறை அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இவை தவிர 10 ஆண்டு வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் நன்கு செயல்படும் உழவர் ஆய்வு மன்றங்களை ஊக்குவிக்க ரூ. 1000 மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**அமைப்பாளர் கல்விச் சுற்றுலா :**

ஒவ்வொரு ஆண்டும் ஆர்வமுள்ள அமைப்பாளர்களையும் குழுக்களின் அங்கத்தினர்களையும் விவசாயக் கல்விச் சுற்றுலா தமிழ்நாட்டிலுள்ள விவசாயச் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிலையங்களுக்கும் மற்றும் ஆய்வுக்கூடம் போன்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1000 இதற்காகச் செலவிடப்படுகிறது.

**மற்ற பயிற்சிகள் :**

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறுவிவசாயிகள் 25 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஆறுநாட்கள் விவசாயப் பயிற்சி அந்தந்த வட்டாரத் தலைமையிடத்தில் உழவர் பயிற்சி நிலையத்தினரால் நடத்தப்படுகிறது. ஆண்டுக்கு 15 பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

முறைசாரா கல்வித் திட்டத்தின்கீழ் ஆசிரிய பெரியோர்களுக்கு வேளாண்மை பற்றி ஒரு வாரம் பயிற்சி அளிக்கப்படுகிறது

**விவசாயிகளுக்கான வானொலி அறிவிப்பு :**

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட பகுதிகளின் பருவநிலை மற்றும் செய்ய வேண்டிய விதைநேர்த்தி, நாற்றங்கால் அமைத்தல், நாற்றங்காலுக்கு உரமிடுதல் நடவு செய்தல், அடிஉரம் இடுதல், இடைவெளி மற்றும் மேலுரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு போன்ற பயிர்கட்கேற்ற கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள் குறித்து அவ்வப்போது வானொலி மூலம் அறிவிக்கப்படுகிறது. இது தவிர பண்ணைச் செய்தி, மற்றும் முன்னேற்ற விவசாயிகள் அனுபவம் குறித்துப் பேட்டிக் கண்டு வானொலியில் ஒலிபரப்புதல் போன்ற பணிகளும், செயல் விளக்கப் பண்ணைகள் குறித்தும் அறிவுரை வழங்கப்படுகிறது.

**உழவர் நாள் விழா :**

ஒவ்வொரு ஆண்டும் உழவர் நாள் விழா நடத்தப்படுகிறது. அதுசமயம் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. விவசாயப் பெருங்குடி மக்களும், உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் பங்கு கொள்வார்கள். உழவர் நாள் விழாவில் சிறு கருத்துக்காட்சியும் அமைக்கப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நிலையத்தில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த விவசாயச் சிறுவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியளிக்கும் விவசாயப் பள்ளி ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

# ஜெயராமன்

ராஜாஜி



"உன் பெயரென்ன?" என்றார் வாத்தியார்.

"ஜெயராமன்" என்றான் பையன்.

சிறுவனுடைய முகம் வாடி, உடல் மெலிந்து, கண்கள் குழி விழுந்து, பார்க்கப் பரிதாபமாயிருந்தது. மேலே போட்டிருந்த சட்டை யாரோ பெரிய பையனுடையது. இவனுக்காகத் தைத்ததல்ல வென்று பார்க்கையிலேயே தெரிந்தது. இடுப்பில் கட்டியிருந்த துணியில் அங்கங்கே பொத்தல்கள். தலைக்குப் போட்டிருந்த குல்லாய் பல தினுசுத் துணியால் அங்கங்கே ஒட்டுப் போடப்பட்டிருந்தது. ஓரமெல்லாம் இற்றுப்போய் நூல் தொங்கிற்று. தலை மயிர் முழுதும் மொட்டையடித்துப் பல இடங்களில் புண் வந்த சொட்டை தெரிந்தது.

"உன் வயதென்ன, பையா!" என்று கேட்டார் வாத்தியார்.

"ஒன்பது அய்யா" என்றான் சிறுவன்.

எல்லாப் பையன்களும் சிரித்தார்கள். முதல் வகுப்புக்கு ஒன்பது வயதுப் பையன் வந்தானே யென்று அவர்களுக்கு வேடிக்கை. வாத்தியாரும் நகைத்துக்கொண்டே 'சத்தம்'! என்று கத்தினார். பையன்கள் வாய் மேல் கைகள் வைத்து மூடிக் கொண்டு, ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு கண்களால் சிரித்தார்கள்.

"ஏன் இத்தனை நாள் பள்ளிக்கூடத்தில் சேரவில்லை?" என்றார் வாத்தியார்.

பையன் பதில் சொல்லாமல் தரையைப் பார்த்தான்.

"ஏன்?" என்றார் வாத்தியார் மறுபடியும்.

"அம்மாவுக்கு வீட்டில் துணை யாருமில்லை. குழந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்றான்.

"மறுபடியும் வகுப்பிலுள்ள பையன்கள் சிரித்தார்கள்.

"உன் தகப்பனார் பெயரென்ன?" என்றார்.

சிறுவன் பதில்சொல்லுவதற்கு முன் ஒரு பையன் எழுந்து, 'இவன் சாராய சுப்பன் மகன், சார்" என்றான். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். பையன் தலை குனிந்தான், இதற்குள் மத்தியான விடுதி மணியடித்தது. பிள்ளைகளெல்லாம் வெளியே போய் ஓடிக் குதித்து விளையாடினார்கள்.

ஜெயராமனைச் சுற்றிப்பார்த்து சிறுவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். "உன் தொப்பியைக் கொடு, பார்க்கலாம்" என்றான் ஒருவன். "அட அதையேன் தொடுகிறாய்? புண் ஒட்டிக் கொள்ளும்' என்றான் ஒருவன். "குப்பையில் கிடந்ததை, பாவம்! அவன் அம்மா எடுத்துத் தைத்துச் சரிப்படுத்திக் கொடுத்திருக்கிறாள்" என்றான் ஒருவன்.

"குழந்தை எடுத்துக் கொள்ள வீட்டுக்குப் போ" என்றான் மற்றொருவன். சொக்காய் யாருடையதடா?" என்றான் இன்னொருவன். "உங்கொப்பன் நேற்று எவ்வளவு குடித்தான்?" என்றான் வேறொருவன்.

"அடே இவனண்டை சாராய நாற்றமடா. இவனும் குடிப்பான் போலிருக்கிறது" என்று ஒரு சிறுவன் இவனை முகர்ந்து மூக்கைப் பிடித்துக்கொண்டு, சுற்றிச் சுற்றி ஓடினான்.

"அடே நேற்று சாக்கடை 'டிச்'சில் கிடந்தானே அவனா உன் அப்பன்?" என்றான் ஒருவன்.

"சாராய சுப்பன் மகன்!" என்றான் ஒரு பையன். உடனே எல்லாப் பையன்களும் 'சாராய சுப்பன் மகன்', 'சாராய சுப்பன் மகன்' என்று சொல்லிக்கொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி ஓடினார்கள். "அடே இவன்கூட நாம் எப்படியடா உட்காருகிறது?" என்றனர் சிலர்.

இப்படிப் பலவாறு கேலி செய்வதைப் பொறுக்க முடியாமல், பையன் கண்களில் ததும்பின கண்ணீரை அடக்கியடக்கிப் பார்த்தான். கடைசியில் தாங்க முடியாமல் போய், திடீரென்று ஒன்றும் சொல்லாமல் வெளியே ஓடினான். எல்லோரும் கூட்டமாய் அவன் பின் ஓடினார்கள். தெருவை அடைந்ததும் ஒரே ஓட்டம் பிடித்தான். குழந்தைகள் எல்லாரும் இரைச்சல் போட்டுக் கொண்டு, கொஞ்ச தூரம் பின்னால் ஓடினார்கள். ஜெயராமன் ஒரு சந்துக்குள் திரும்பி மறைந்து போனான்.

* * * *

"அம்மா!" என்று வீட்டில் தன் தாயார் மடியில் தலை வைத்து விம்மி விம்மி அழுதான்.

"என் அப்பனே! என் கண் மணியே! ஏன் அழுகிறாய்? பள்ளிக்கூடத்தில் சேர்க்கமாட்

டேன் என்கிறார்களா?'' என்று அவன் தாயார் அவனைக் கட்டி முத்தமிட்டாள். கேட்கக் கேட்க பையன் பதில் சொல்ல முடியாமல் அழுது கொண்டேயிருந்தான்....

மறுபடி பள்ளிக்கூடத்தில் மணியடித்துக் குழந்தைகள் சேர்ந்ததும் வாத்தியார் ''எங்கே புதுப் பையன்?'' என்று விசாரித்தார்.

''அய்யா, அவன் ஓடிப்போய் விட்டான். இனி வரமாட்டான்' என்று ஒரு பையன் சொன்னான்.

''ஏன்?'' என்று கேட்டார் வாத்தியார்.

''எல்லோரும் கேலி செய்தார்கள். அவன் பாவம் அழுது கொண்டு ஓடிப் போய்விட்டான்' என்று எல்லோரையும் விடச் சிறிய பையன் சொன்னான்.

''குழந்தைகள்! நீங்கள் செய்தது தவறு'' என்று வாத்தியார் சொன்னார். எல்லோரும் தலை குனிந்து கொண்டார்கள்.

''உங்களுக்குள் யாருக்கு அவன் வீடு தெரியும்?'' என்று வாத்தியார் கேட்டார். 'எனக்குத் தெரியும்'' என்று பல பிள்ளைகள் எழுந்தார்கள். 'போய் அவனை சமாதானப்படுத்திக் கூட்டிவர வேண்டும்., யார் போவீர்கள்,'' என்றார் வாத்தியார்.

''அய்யோ! அவன் அப்பன் அடித்துப் போடுவான்' என்றான் ஒருவன். மற்றவர்களும் ஒருவரை யொருவர் பார்க்க ஆரம்பித்தார்கள். பிறகு ஒரு பையன், ''நான் போய் அழைத்து வருகிறேன், அய்யா!' என்றான்.

''பேஷ், சுந்தரம்!'' என்றார் வாத்தியார். ''போய் அவன் தாயாரிடம் சொல்லிக் கூட்டிக் கொண்டு வா,'' என்று சொல்லி அனுப்பினார் ''உதை தின்று வருவான்'' என்று பையன்கள் ஒருவர்க்கொருவர் மெள்ளச் சொல்லிக் கொண்டார்கள்.

## 2

சுப்பா நாயுடு பெரிய குடிகாரன். இதனால் இவனுக்கு ஊரில் 'சாராய சுப்பன்' என்றும் 'டிராம் சுப்பா நாயுடு' என்றும் பேர் வழங்கும். அவன் தகப்பனார் நல்ல பணக்காரராயிருந்தார். சிறுவயதிலேயே அவன் தாயார் இறந்து போய்விட்டாள். தகப்பனார் மகனை மிகச் செல்வமாய் வளர்த்தார். பையன் 16-வது வரையில் நன்றாய்ப் படித்தான். பிறகு கெட்ட சகவாசத்தினால் துர் வழக்கங்கள் பயின்றான். தகப்பனார் அவனை முதலில் கண்டிக்கவில்லை. பிறகு கண்டித்தும் பயன்படவில்லை. 22 வயது ஆனதும் விவாகம் செய்து வைத்துப் பார்த்தார்கள். இதனால் திருந்துவான் என்று நினைத்தார். அதுவும் பயனில்லாமல் போயிற்று. குடித்து விட்டு வெட்கக் கேடான காரியங்கள் செய்வான். அந்த விசனத்தினாலேயே தகப்பனார் இறந்தார். தகப்பனார் இறந்த பின் சுப்பா நாயுடுவின் சகாக்கள் அவனை முழுதும் கெடுத்தார்கள். தலைக்குமேல் கடன் பட்டான். கொஞ்ச நாளில் சொத்தெல்லாம் பாழாயிற்று. சோற்றுக்கே திண்டாட்டமாயிற்று. கடன்காரர்களின் தொல்லையால் கோர்ட்டுக்கும் வக்கீல்களிடமும் போய், அலைந்ததில் விண்ணப்பம் எழுதப் பழக்கமாயிற்று. சொத்து முழுதும் போய் ஆசை தீர்ந்தபின் விண்ணப்பம் எழுதுவதே ஒரு தொழிலாக வைத்துக் கொண்டு, தினம் ஒரு ரூபாய் சம்பாதித்து 10 அணாவுக்குக் குடித்துவிட்டு மிஞ்சியதை சோற்றுக்கு மனைவியிடம் கொடுப்பான். ஒவ்வொரு நாள் அதுவுமில்லை. மனைவியை அடிப்பான். குடிவெறியில் ஒவ்வொரு நாள் அவளை வெளியில் தள்ளிக் கதவைத் தாள் போட்டுவிடுவான்.

குடியிருந்த வீடும் கடன்காரர்கள் சுவாதீனம் செய்து கொண்டார்கள். அப்போது பெரிய கலகம் செய்து கோர்ட்டு சேவகனைக் கத்தியால் வெட்டினான். போலீசும் வந்து பிடித்துப் போய் விசாரணையாகி ஆறு மாதம் சிறையில் போட்டார்கள். குடும்பம் பசியால் தவித்தது. புருஷன் சிறையிலிருக்கையில் அவன் மனைவி கடன்காரனிடம் வாடகைக்குச் சீட்டு எழுதிக் கொடுத்து, அதே வீட்டில் குழந்தையுடன் குடியிருந்து வந்தாள். பிறகு அதுவும் கூடாது என்று கடன்காரன் சொல்ல, தன் பந்துக்களைக் கெஞ்சி ஒரு பழக் கடைத் தாழ்வாரத்தில் படல் கட்டிக்கொண்டு குடியிருந்து வந்தாள். சிறையிலிருந்து வந்து திரும்பினதும் சுப்பா நாயுடு முன்பைவிட அதிகம் குடிக்கலானான். மற்றவர்களைவிட இவன் நன்றாய் விண்ணப்பம் எழுதுவான். குடிகாரனாயிருந்தாலும் எல்லோரும் இவனிடத்திலேயே வந்து எழுதச் சொல்லுவார்கள். தினம் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய்கூடச் சம்பாதிப்பான். ஆனால் அவ்வளவும் சாயந்திரம் சாராயக் கடைக்கே போகும். ஒவ்வொரு நாள் அதிக போதையாகித் தெருவிலும் சாக்கடையிலும் இரவெல்லாம் கிடப்பான். மறுநாள் விண்ணப்பம் எழுதக் கூட ஆகாது. அன்று சோற்றுக்கு இல்லாமல் வீட்டில் பெருங் கலகம் செய்வான்.

மனைவிகூட வேலை செய்ய வேண்டியதாயிற்று. முதன் முதலில் தெரிந்தவர்கள் சிலர் வீட்டுக்குப் போய் அறைக்கவும், இடிக்கவும் ஒப்புக்கொண்டு கால் படி, அரைப்படி அரிசிசம்பாதித்து காலம் தள்ளினாள். பிறகு எல்லார் வீட்டுக்கும் போனாள். கைக்குழந்தை ஒன்று. அதை ஜெயராமன் கையில் கொடுத்து விட்டு வேலைக்குப் போவாள். அச்சமயம் சுப்பா நாயுடு வீட்டுக்கு வந்தால் ஜெயராமன் கதி பரிதாபம். எங்கே உன் தாய் என்று உதைப்பான். குழந்தைக்கு அடிபடுமென்று ஜெயராமன் பதுங்கிப் பதுங்கி உடலெல்லாம் உதை வாங்கிக் கொள்ளுவான். 'ஓ'! என்று வலி பொறுக்க முடியாமல் அலறியழுவான்.

ஒவ்வொரு நாள் சுப்பா நாயுடுக்கு நல்ல புத்திவரும். பையனையும் குழந்தையையும் கட்டிக் கொண்டு அழுவான். இனி சாராயக்கடைப் பக்கம் போகவே மாட்டேன் என்று தீர்மானம் செய்து கொள்ளுவான். ஆனால், அடுத்த சாயந்திரமே கச்சேரியில் விண்ணப்பங்கள் எழுதி விட்டு வீடு திரும்பிவரும் வழியில், சாராயக் கடையண்டை வரும்போது எல்லாம் மறந்து போகும். தன்னையறியாமல் கடைக்குள் போவான்; மறுபடி பழைய கதைதான்.



## 3

கைக் குழந்தை கொஞ்சம் பெரிதானதும், எல்லாப் பையன்களும் பள்ளிக்கூடம் போவதைப் பார்த்துவந்த ஜெயராமனுக்கு, தானும் போய்ப் படிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. ''இனி, குழந்தை பெரிதாயிற்றம்மா. தானே விளையாடிக் கொள்ளும்; நான் பள்ளிக்கூடம் போகிறேனம்மா'' என்று தாயாரிடம் சொன்னான்.

''என் கண்ணே! நீ பள்ளிக்கூடம் எப்படிப் போவாய்? உனக்கு, மேலே போட்டுக் கொள்ளச் சட்டைகூட இல்லையே! துணியெல்லாம் கந்தலாயிற்றே. எல்லோரும் உன்னைக் கேலி பண்ணுவார்கள். நீ நெஞ்சு உடைந்து போவாய்'' என்றாள்.

''இல்லையம்மா. பக்கத்து வீட்டுக் கிட்டு ஒரு சொக்காய் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறான். கிழிசல்களையெல்லாம் தைத்துக் கொடு. கேலி செய்ய மாட்டார்கள். செய்தால் என்ன? நான் பயப்படமாட்டேன். பள்ளிக்கூடத்திற்கு அனுப்பு'' என்று பையன் கெஞ்சினான்.

''இல்லை அம்மா! சந்தைப் பேட்டையிலிருக்கும் மஞ்சள்

பள்ளிக்கூடத்தில் நாலு அணாத் தான் சம்பளம். அதில் சேருகிறேன்'' என்றான்.

வெகு பாடுபட்டு, இங்கும் அங்கும் கெஞ்சி, குல்லாய் ஒன்று சம்பாதித்து, கிழிஞ்சுபோன இடத்திலெல்லாம் அதை ஒட்டுப் போட்டுத் தைத்து, பையனைப் பள்ளிக்கூடத்திற்கு ஒரு நல்ல நாள் பார்த்து அனுப்பினாள்.

* * * *

''ஜெயராமனைக் கூட்டி வரச் சொன்னார் வாத்தியார்'' என்றான் சுந்தரம்.

''வேண்டாமப்பா. ஏழைகளுக்கு படிப்பு என்னத்திற்கு?'' என்றாள் ஜெயராமன் தாயார்.

''வாத்தியார் கூட்டிவரச் சொன்னார். நான் அழைத்துப் போகிறேன். அனுப்புங்கள்' என்றான் சுந்தரம்.

தாய் மகனைப் பார்த்தாள்.

''அம்மா! நான் போகமாட்டேன். எனக்குப் படிப்பு வேண்டாம்' என்றான் ஜெயராமன்.

''இல்லை, ஜெயராமா, பயப்படாதே, பையன்களெல்லாம் உன்னைக் கூட்டிவரச் சொன்னார்கள். யாரும் கேலி செய்ய மாட்டார்கள்'' என்றான் சுந்தரம்.

''மாட்டேன்! வேண்டாம்!'' என்றான் ஜெயராமன்.

* * * *

''அப்பா, நீ போ. அவன் வர மாட்டான். குழந்தையைப் பார்த்துக் கொள்ள வீட்டில் யாருமில்லை. நான் மிளகாய்ப் பொடி இடிக்க வெளியே போனால் குழந்தையை ஜெயராமனிடம் தான் கொடுத்துப் போக வேண்டும். ஏழைகளுக்குப் படிப்பு என்னத்திற்கு? நீ போ, அப்பனே. வாத்தியாருக்குச் சொல்' என்றாள்.

சுந்தரம் திரும்பிப் போய்விட்டான்.

சுப்பா நாயுடு அன்று வீட்டுக்கு வந்ததும், ''யார் உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினது? என்னை எல்லோரும் கேலி செய்யவா போனாய்?' என்று பெருங்கோபத்துடன் கூச்சலிட்டு, ஜெயராமனை ஒரே உதை உதைத்தான். வலி பொறுக்க முடியாமல் அவன் சுருண்டு கீழே விழுந்தான்.

''ஏன் குழந்தையை உதைக்கிறீர்கள்? நான்தான் அனுப்பினேன்'' என்று மனைவி குழந்தைக்குப் பக்கத்தில் வந்தாள்.

பளீர் என்று அவள் தாடையில் ஓர் அறை அறைந்தான். அவள் அப்படியே சுவர்மேல் சாய்ந்தாள் இன்னொரு அடி அடித்தான். கீழே விழுந்தாள். சுப்பா நாயுடுவுக்குக் கோபம் அதிகரித்தது. பக்கத்திலிருந்த உலக்கையை எடுத்தான்.

''எழுந்திரு!'' என்றான்.

''அய்யோ!'' என்று எழுந்தாள்.

''நான் குடிகாரன் என்று எல்லோரும் ஏசவா மகனைப் பள்ளிக்கூடம் அனுப்பினாய்?'' என்று வீடு அதிரக் கத்தி உலக்கையைத் தூக்கினான்.



''இல்லை நாயனா! அம்மா அனுப்பவில்லை. நான்தான் போனேன். அவள் வேண்டாம் என்றுதான் சொன்னாள்'' என்று ஜெயராமன் கதறிக்கொண்டு எழுந்து தகப்பன் கையைப் பிடித்துக் கொண்டான்.

''இன்று என்னவானாலும் ஆகட்டும். நான் யாருக்கும் பயப்படப் போவதில்லை. தீர்த்துவிடுவதுதான் சரி!'' என்று பையனை உதை உதைத்துத் தள்ளி, உலக்கையை வீசி மனைவியைப் பார்த்துப் போட்டான். அந்த அடி, சுவரில் பட்டுத் தப்பினாள். இல்லாவிடில், மண்டை பொடியாய்ப் போயிருக்கும்.

இதற்குள் கூச்சல் கேட்டு அண்டை வீட்டுப் பெண்கள் சிலர் ஓடிவந்தார்கள். சிலர் இது எப்போதும் நடப்பதுதான் என்று காதில் போட்டுக் கொள்ளாமலிருந்தார்கள். ஆனாலும் கூட்டம் சேர்ந்து விட்டது. சுப்பா நாயுடு உளறிக்கொண்டு போய் விட்டான்.

பையன் நினைவு தப்பிக் கிடந்தான்.

''அய்யோ, என் குழந்தாய், நான் உன்னைக் கொன்றேனே!'' என்று தாய் கதறினாள். எல்லோரும் எடுத்துத் தூக்கிப் படுக்க வைத்துத் தண்ணீர் கொடுத்தார்கள். உயிர் துடி துடியென்று துடித்துக்கொண்டிருந்தது.

''பிழைப்பானா தெரியவில்லையே!'' என்றாள் தாய்.

''பாவி! இப்படி அடிக்கலாமா? என்றார்கள்.

''அந்தப் பாழும் சாராயக் கடைகள் ஏன் வைத்தார்களோ!' என்றாள் ஒருத்தி.

ஒரு நாழிகையில் கைகால் குளிர்ந்துபோயிற்று. ''அய்யோ கெட்டேன்.'' என்று தாய் கூக்குரல் இட்டாள். ஜெயராமன் துயரக்கூட்டினின்று விடுதலையடைந்து, அன்பே உருவமான அன்னை மடியில் போய்ச் சேர்ந்தான். அவனுக்கு இந்தப் பள்ளிக்கூடங்கள் இனி என்னத்திற்காக?

**(சென்னை பாரதி பதிப்பகம் 'ராஜாஜி கதைகள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)**

# விவசாயிகளுக்குப் பெருநஷ்டத்தை விளேவிக்கும் எதிரி—



# எலி

## எலித்தொல்லேயை அறவே நீக்க ஒரே வழி

# ரோடா:ஃபாரின்

**(ஆன்டிகோவாகுலண்ட்)**




மிசோராமில் பஞ்சத்திற்கு அடிப் படையான காரணம் எலிகளின் நாசவேலேதான். எலிகள் விவ சாயிகளின் முதல் எதிரி என்றும் அவை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்றும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

கடும் விஷம் மூலம் உடன்கொல் லும் சக்திபெற்ற மருந்து கலந்த இரையை எலிகள் நாளடைவில் கண்டுகொண்டு ஒதுக்கிவிடுவ தால், அவை பயனற்றுப் போ கின்றன. இந்நிலேயில், பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) நிறுவனத்தினர் ஆராய்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டு, எலி களே அறவே ஒழிக்க வல்ல ரோடா ஃபாரினேத் தயாரித்திருக்கிருர்கள்.

ரோடாஃபாரின் உடன் கொல் லும் மருந்தல்ல. அதுவேலே செய்யும் முறையாவது, எலிகளின் ரத்த நாளங்களிலிருந்து ரத்தப் போக்கை ஏற்படுத்தி, அதே சமயம் ரத்தம் விரைவில் உறை யாவண்ணம் செய்து, மெதுவாக ஆனுல் நிச்சயமாக உயிரைப் போக்கிவிடுவதேயாகும். ரோடா ஃபாரின் கலந்த இரை அதிகச் செறிவு இல்லாததாலும், விஷம் கடுமையாக இல்லாததாலும் எலிகள் இவ்விரையைத் தவிர்க் காமல், உட்கொண்ட மூன்ரும் நாளிலிருந்து இறக்கத் தொடங்கு கின்றன. குறிப்பாக, அதிகச் சேதம் ஏற்படுத்தும் வரப்பு எலி கள் 24 மணி நேரத்திற்குள் ளேயே இறந்து விடுகின்றன. ஆனுல் ரோடாஃபாரின் கலந்த இரை தற்செயலாக மனிதர் களாலோ, வளர்ப்புப் பிராணி களாலோ, கால்நடைகளாலோ உட்கொள்ளப்பட்டாலும் தீங்கு விளேவிக்காது.

ரோடாஃபாரினின் முற்றிலும் பயன்தரும் வேலேத்திறன், பல கிராமங்களில் நிரூபிக்கப்பட்டு விட்டது. குறிப்பாக, லட்சத் தீவில் ரோடாஃபாரின் உதவி யுடன் எலிகளே முழுமையாக ஒழித்த பின் அங்கு தேங்காய் விளேச்சல் 150 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

ரோடாஃபாரின்*—எலிகளின் எதிரி. விவசாயிகளின் நண்பன்.

*உலகெங்கும் வார்ஃபாரின் எனற மறுபெயர் கொண்டது.

**pci பெஸ்ட் கண்ட்ரோல் (இந்தியா) பி. லிட்.,**

28, எர்ரபாலுச் செட்டித் தெரு, த. பெ. எண். 102, சென்னே 600 001. தொலேபேசி எண்: 24266, 24267.
177, ஜெயில் ரோடு, த. பெ. எண். 3774, கோயமுத்தூர் 641018. தொலேபேசி எண்: 25975.
53, அமெரிக்கன் கல்லூரிக் கட்டிடம், த. பெ. எண் 53, அழகர்கோயில் ரோடு, மதுரை 625 002. தொலேபேசி எண். 30440.

**pci பி.ஸி.ஐ. ஈ.டி.பி. ஆம்ப்யூல்**

*சேமித்து வைத்திருக்கும் தானியங்களே பூச்சிபூண்டுகளின் தொல்லேயிலிருந்து எளிதான முறையில் சிறப்பாகக் காக்க.*

எங்கும் கிடைக்கிறது.

FDS PCI 2750 TAM



# குழந்தைகளின் ராஜாஜி

**கே. வேதமூர்த்தி**

**1979**-ஆம் ஆண்டை குழந்தைகளின் சர்வதேச ஆண்டாகக் கொண்டாடவிருக்கிறார்கள்.

ராஜாஜி பிறந்ததின நூற்றாண்டையும் ஒரு ஆண்டுக்காலம் விழாவாகக் கொண்டாட இருப்பதாக ராஜாஜி பிறந்ததின நூற்றாண்டு விழாக் குழு அறிவித்திருக்கிறது. ராஜாஜி, நூற்றாண்டு விழாக்காலமும் ''சர்வதேச குழந்தைகள் ஆண்டும்' ஒரு சேர சேர்ந்து வந்திருப்பது ஒரு விதத்தில் பொருத்தமென்றே தோன்றுகிறது!

'சக்கரவர்த்தித் திருமகனை'யும் 'வியாசர் விருந்தை'யும் தமிழில் படைத்த ராஜாஜி, தான் இவ்விரண்டு நூல்களையுமே குழந்தைகளை மனத்திற்கொண்டே எழுதியதாகத் தெரிவித்திருக்கிறார்.

ராஜாஜி குழந்தைகளுக்கென்றே கிள்ளைத் தமிழில் பல சிறுகதைகள் எழுதியிருப்பதோடு மட்டுமில்லாமல் 'வானொலி'யில் அவரே வாரா வாரம் தமிழில் கதைகள் சொன்னதும் நம்மில் பலருக்கு பசுமையாக நினைவிலிருக்கும். 'வானொலி' அறிவிப்பாளர் ''இப்பொழுது ராஜாஜி அவர்களே கதை சொல்வார்கள்'' என்று இனிமையாகவும் பெருமையாகவும் அறிவித்த குரல் இன்னும் பல காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்! கருத்தாழமும் கவிநயமும் ஒருங்கே அமையப் பெற்ற அவரது 'வள்ளுவர் வாசகம்' இரகுபதி ராகவ', 'ராமகிருஷ்ண உபநிடதம்' போன்ற நூல்கள் எல்லாமுமே குழந்தைகளும்படித்துப் புரிந்து கொள்ளும்படியான பழகு தமிழில் எழுதப்பட்டிருப்பதால் குழந்தைகளுக்கு 'ராஜாஜித் தாத்தாவாக' அவர் என்றும் காட்சியளிப்பதில் விந்தையேதுமில்லை!

திரு ராஜ் மோகன் காந்தியுடனும் ராஜாஜயின் அருமைப் புதல்வர் திரு சி. ஆர். நரசிம்மன் அவர்களுடனும் ராஜாஜி வாழ்க்கை வரலாற்றுக் கமிட்டியில் பணிசெய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியபோதுதான் ராஜாஜிக்குக் குழந்தைகளிடம் இருந்த அன்பும் பரிவும் அவர் முதுமைக்காலத்தில்தான் வந்தனவோ என்கிற கருத்து தவறு: இல்லற வாழ்க்கைத் தொடங்கிய அந்நாளிலிருந்தே ராஜாஜி அவர்கள் குழந்தைகளிடம் அளவுகடந்த அன்பும் கனிவும் கொண்டவராய் இருந்து வந்திருக்கிறார் என்பதுதான் உண்மை என்று தெரியவந்தது. அதை அறிய வைத்தவர் மாண்புமிகு க. ராசாராம் அவர்களின் தந்தையார், அண்மையில் மறைந்த திரு. கஸ்தூரிபிள்ளை அவர்களேயாகும்!

ராஜாஜியின் அருமைப்புதல்வர் திரு சி. ஆர். நரசிம்மன் அவர்களடன் நானும் போவதுண்டு. 1974-ஆம் ஆண்டு ஒரு தரம் காந்தி ஆசிரமம் செல்வதற்கு முன் சேலத்தில் ஒருநாள் தங்கினோம். அன்றிரவு அன்றைய அமைச்சரவையில் உறுப்பினராக இருந்த மாண்புமிகு திரு க. ராசாராம் அவர்களைச் சந்திப்பதற்காக திரு சி. ஆர். நரசிம்மன் என்னையும் அழைத்துக் கொண்டு அமைச்சரின் இல்லத்திற்கு சென்றார். அகமும் முகமும் மலர்ந்து எங்களை வரவேற்ற அமைச்சருடன் திரு. சி. ஆர். நரசிம்மன் அவர்கள் உடனடியாக நாட்டு நடப்பைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்கள். நல்ல வேளையாக என்னை அதே அறையில் வேறோர் இடத்தில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த திரு. கஸ்தூரிப்பிள்ளையிடம் அறிமுகம் செய்துவிட்டே அவர்களிருவரும் அரசியல் நிலவரம் பற்றி உரையாடலானார்கள். பெரியவர் திரு. கஸ்தூரிப்பிள்ளை அவர்கள் ராஜாஜிக்கும், காந்திக்கும் பேரனான திரு ராஜ்மோகன் காந்தி எழுதப்புகுந்திருக்கும்



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை
# விஜய்



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

ராஜாஜி வாழ்க்கை வரலாற்றைப் பற்றி மிகவும் ஆர்வத்துடன் விசாரிக்கையிலேயே அவருடைய மனக்கண் முன் அவர் பார்த்திருந்த ராஜாஜி திரும்பி வந்துவிட்டார்' ''தங்களுக்கு ராஜாஜியை எப்போதிலிருந்து தெரியும்?'' என்ற என் கேள்வி அவர் மனத்திரையில் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை படமாக ஓட்டியயதுபோலும். திரு. கஸ்தூரிப் பிள்ளை தன்னுடைய பள்ளிப் பருவ நாளிலிருந்தே ராஜாஜியைப் பார்த்திருக்கிறார். அவருடன் பேசிப் பழகியுமிருந்திருக்கிறார். எப்படியென்றால், சேலத்து சீமானாக மிக்க வருவாயுள்ள வக்கீலாக ராஜாஜி வாழ்ந்து வந்த காலத்தில் ராஜாஜியின் இல்லத்திற்கருகிலிருந்த வீட்டில்தான் திரு. கஸ்தூரிப் பிள்ளையின் பெரியோர்களும் இருந்து அவர் பள்ளிக்குச் சென்றிருக்கிறார். அந்நாளிலேயே ராஜாஜி அரசியலார்வம் கொண்டவர் என்பது 1906-ஆம் ஆண்டு 'சூரத்' நகரில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு சேலத்திலிருந்து அவர் சென்றார் என்பது ஊரறிந்த ஒன்றாம். வீட்டில் இளம் மனைவி, சின்னஞ் சிறிசுகளாகக் குழந்தைகள் வேறு பல உறவினர்கள் இவர்களல்லாமல் வருவோர் போவோரும் மிகுதியாக இருந்த குடும்பம் வக்கீல் ராஜாஜியினுடையது என்பது பள்ளிச்சிறுவன் கஸ்தூரியின் முதல் நினைவு.

அரசியல் மட்டுமின்றி, தொழில் துறை சம்பந்தமாகவும் அக்காலத்தில் அதாவது இந்த நூற்றாண்டின் முதல் வருடங்களில் ராஜாஜி அவர்கள் அடிக்கடி சென்னை சென்று வருவாராம். அப்படி அவர் சென்னைக்கு சென்றிருக்கிறார் என்று தெரிந்ததுமே அவர்கள் குழந்தைகள் மட்டுமின்றி அக்கம் பக்கத்து வீடுகளிலுள்ள குழந்தைகளெல்லோருமே திரு கஸ்தூரி உள்பட ராஜாஜி எப்போது சென்னையிலிருந்து வீடு திரும்புவார் என்று அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்களாம்! ஏனென்றால் ராஜாஜி எப்போது சென்னை சென்றாலும் திரும்பி வரும்போது புதிது புதிதாக, தினுசு தினுசான விளையாட்டுச் சாமான்களும், இனிப்புக்களும் நிறைய வாங்கி வந்து தன் குழந்தைகளோடு நின்றுவிடாமல் அக்கம் பக்கத்திலுள்ளோர் குழந்தைகள் எல்லோருக்குமே பரிசாக அளிப்பாராம். இப்போது இன்னுமொன்றை திரு கஸ்தூரி அவர்கள் நினைவு கூர்ந்தார்கள்; விளையாட்டுச் சாமான்கள், இனிப்புகளுடன் கூடவே குழந்தைகள் விரும்பிப் பார்த்துப் படிக்க ஆவலூட்டும் வண்ணப்படங்கள் நிறைந்த எளிய முறையில் எழுதப்பட்ட புத்தகங்கள் பலவற்றையும் என்ன விலையாயிருந்தாலும் கவலைப்படாமல் வாங்கி வந்து எல்லோருக்கும் கொடுப்பாராம்! அவர் செலக்ட் பண்ணும் Modern Readers மிக அருமையாக இருக்கும். 'இப்படி விளையாட்டோடு சுவைமிக்க இனிப்புக்களும் அறிவாற்றலை வளர்க்க நூல்களும் வாங்கி வருவதோடு விளையாட்டுச் சாமான்களிலும் அக்காலத்திற்கு Modern ஆக இருப்பதாக வாங்கி வருவாராம்!

சுமார் 70 ஆண்டுகளுக்கு மேல் குழந்தைப் பருவத்தினரிடம் குறையான அன்பை ராஜாஜி காட்டி வந்திருக்கிறார் என்பதை நினைத்தபோது, ராஜாஜி பிறந்த தின நூற்றாண்டை ''International year of the child'' என்று ராஜாஜியைப் பற்றித் தெரிந்திராத நாடுகளிலெல்லாம் கூட கொண்டாடப்போவது மிகவும் பொருத்தமே என்று தோன்றுகிறதல்லவா!

## வழி காட்டும் தமிழக அரசு



''இந்தியா முழுவதும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டு மது அரக்கன் அடியோடு ஒழிக்கப்பட்டால் ஒழிய இந்தியாவில் இருந்து வறுமை அகலாது. ஏழைகளாக இருப்போர் வாழ்விலும் முன்னேற்றம் ஏற்படாது. எனவே மதுவிலக்குத் திட்டம் அவசர அத்தியாவசியமானதாகும்.


'மதுவிலக்குத் திட்டத்தில் தமிழ்நாடு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறது. கடந்த 1947ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்து வருகிறது.

''ஆனால், கடந்த 1974ஆம் ஆண்டில் மட்டும் அப்போதைய அரசு மதுவிலக்கை நீக்கியது. ஆனால் பொது மக்கள் குறிப்பாக தாய்மார்களின் தீவிர எதிர்ப்பின் காரணமாக மீண்டும் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது.

''மதுவிலக்குத் திட்டத்தில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்குச் சிறந்தமுன்னோடியாக விளங்குகிறது.''

— பிரதமர் மொரார்ஜி தேசாய்

கோவா மாநிலத்தில் உள்ள பானாஜியில் 15-11-78 அன்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்



பொங்கல் திருநாளில் தித்திக்கும் பரிசுகள்

# தமிழ்நாடு பரிசுச்சீட்டு

வழங்கும் மாபெரும்

## பொங்கல்

சிறப்புக் குலுக்கல்

**குலுக்கல் நாள் 20-1-1979**

இரண்டு சிறப்பு முதல் பரிசுகள்

# ரூ 5 லட்சம் வீதம்

மற்றும் ரூ. 1 லட்சம் வீதம் மூன்று சிறப்பு இரண்டாவது பரிசுகள்!

மேலும் ரூ. **50,000** வீதம் ஒவ்வொரு வரிசைக்கும் இரண்டு முதல் பரிசுகள்!

இன்னும் எத்தனையோ கவர்ச்சி மிகு பரிசுகள்!
மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 41/- லட்சம்
மொத்தப் பரிசுகள் : 13075
பரிசுச் சீட்டின் விலை : ரூ. 1/- மட்டுமே.

வாங்கிடுவீர்

## தமிழ்நாடு பரிசுச் சீட்டு



வெளியீடு:
இயக்குநர்
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம், சென்னை-600 002

EP/DIPR/38163



# மூதறிஞர் ராஜாஜியின் பொன்மொழிகள்

—தொகுப்பு: எஸ். வி. எல்.

எல்லா ஜாதியினரிடையும், எல்லா சமயத்தாரிடையும் எவ்விதப் பாகுபாடு மின்றி கலப்புத் திருமணங்கள் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன். நம்முடைய ஜாதி, சமய பேதங்களினால் பிரச்சினைகளைத் தீர்க்க இதைத் தவிர வேறு வழியில்லை. ''ஜாதி ஒழிக'' என்று வெறும் கூப்பாடு போடலாம்; ஆனால் எல்லா ஜாதியாரிடையும் கலப்புத் திருமணத்தை ஊக்குவித்தாலன்றி இப்பிரச்சினை தீராது.

* * * * *

பாரத நாட்டை ஒரு காடாக்குவதோ அல்லது ஒரு நந்தவனமாக்குவதோ நம் சக்தியில் இருக்கிறது. ஒரு நந்தவனமாக்குவதென்றால் நம்மிடை தியாக உணர்ச்சி இருக்க வேண்டும்; கட்டுப்பாடு இருக்க வேண்டும். நாம் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொண்டேயிருந்தால் ஒரு பயங்கர வனாந்தரத்தைச் சிருஷ்டிப் போமேயன்றி நந்தவனத்தை அல்ல.

* * * * * *

வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்களையெல்லாம் ஒரு கைப்பையில் அடைத்துக் கொள்வது போல் திணித்துக் கொள்வதல்ல கல்வி. ரயிலில் யாத்திரை செய்தீர்களானால், உங்கள் கைப்பையில் ஒரு மாதத்திற்கு வேண்டிய பொருட்களை அடைத்துக் கொண்டு புறப்படுவது என்று தீர்மானித்தீர்களானால், ஒன்று, பை கொள்ளாமல் பிதுங்கிப் போகும், அல்லது எடுத்துச் செல்லும் பொருள்கள் வழியிலேயே அழுகிப் போகலாம். ஆகவே பிரயாணத்தில் ஆங்காங்கே தங்கும் ஊர்களின் கடைத்தெருக்களில் கிடைக்கும் பொருட்களை வாங்கிப் புசிப்பது மேலே தவிர, ஒரு மாதத்திற்குக் காணும்படியாகச் சமைத்து, பையில் போட்டுக்கொண்டு-வந்துள்ள பண்டத்தைத் தின்பதல்ல. அதைப்போலத் தான் வாழ்க்கையில் நீங்களாகவே அவ்வப்போது பொது விஷயங்களைக் கற்று வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டும். சரியாகச் சிந்திக்கவும், நல்லபடியாக நடந்து கொள்ளவும் எச்சரிக்கையாக இருக்கவும் வாழ்க்கையில் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

* * * * * *

பிறர் அபிப்பிராயத்துக்குப் பயந்து கொண்டே வேலை செய்தோமானால் நாம் வாழ்க்கையில் எத்துறையிலும் முன்னேற முடியாது. நாம் திறந்த மனத்தினராய் இருக்கவேண்டும். பிறர் என்ன சொல்கிறார்கள் என்பதனைக் கேட்க வேண்டும். அவர்கள் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். அத்துடன் நிற்க வேண்டுமே தவிர பயந்துவிடக்கூடாது. பிறர் ஒப்பமாட்டார்கள், என்ற பயத்தின் காரணமாக ஒரு செயலைச் செய்வதோ செய்யாமல் இருப்பதோ கூடாது. மற்றவர்களின் சொல்லை மரியாதையோடு கேட்பாயாக! வேண்டுமானால் உன் மனத்தை மாற்றிக்கொள். ஆனால் மனத்தை மாற்றிக் கொள்ளாமல் பயத்தினால் உந்தப்பட்டு ஒரு காரியத்தைச் செய்யாதே. வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக்கூடிய விஷயம்

எங்கள் சேமிப்புத் திட்டங்கள் அனைத்தும்

தங்கள் வாழ்வின் முக்கியமான கட்டங்களில்

கைகொடுத்து உதவிடும் !

மேலும், மேலும் உங்கள் சேமிப்பு வளரத்

துணையாகும் !

TNSC BANK

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,

(ஒரு ஷெட்யூல்டு வங்கி)


379, என். எஸ். ஸி. போஸ் ரோடு, சென்னை-600 001.

(தொலைபேசி எண். 20367)

*மற்றும் சென்னையில் உள்ள அதன் கிளைகள்.*

சேயின் நலனே தாயின் பணி.

உங்கள் நலனே எங்கள் பணி.



வேறு என்ன இருக்க முடியும்? நம் மனத்துக்குச் சரி என்று பட்டதைச் செய்துகொண்டே வருவோமானால் எல்லாமே சரியாக இருக்கும். இக்கருத்து ஏற்கெனவே ஆயிரம் முறை சொல்லப்பட்டதுதான். அந்த லட்சியத்தை அடையாதவரை இந்த உண்மையை திரும்பத் திரும்பச் சொல்வது நல்லதுதான்.

* * * * * *

கோபித்துக்கொள்ள வேண்டுமானால் அந்தக் கோபத்தை உங்கள் மேலேயே காண்பித்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்களுக்குச் சொல்லிக் கொள்ளுங்கள், ''இனி நான் ஒழுங்காய் இருப்பேனாக'', மற்றவர்களுக்கு ''ஒழுங்காய் இரு'' என்று கட்டளையிடாதீர்கள். நீங்கள் உங்களுக்கே சொல்லிக் கொள்ளுங்கள். 'இனி நான் உண்மையையே பேசுவேனாக'' மற்றவர்களுக்கு, ''பொய் சொல்லாதீர்கள்? என்று சொல்லாமல் இருப்பீர்களாக. நீங்கள் ஒழுங்காக இருந்தால் மற்றவர்கள் உங்களைப் பின்பற்றுவார்கள்.

* * * * * *

ஒரு செடி நன்கு வளர நல்ல மண்ணும், நல்ல சூரிய வெளிச்சமும், எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் நல்ல ஜனநாயகப் பயிர் செழிக்கக் கீழே அதிகாரமும், மேலிருந்து அறிவுசார்ந்த ஊக்கமும்.

* * * * * *

பிறருடைய துன்பத்தைப் பார்த்து நம்மையறியாமலே நாம் துன்புறுகிறோம். பிறர் மகிழ்ச்சியைப் பார்த்து நாமும் அவர்களோடு சேர்ந்து மகிழ்கிறோம். இந்த கட்புலனுக்கெட்டாத சக்திதான் மனித சமுதாயத்தைப் பிணைத்து வைத்திருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்களையும் இணைத்து ஒழுங்காக இயக்கிச் செல்வது ஆகர்ஷண சக்தி என்பார்கள். அந்தச் சக்தியைப் போன்றதுதான் மனித சமுதாயத்தின் உள்ளங்களை இணைக்கும் சக்தியும்.

* * * * * *

ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். நமது நாட்டுத் தாய்மார்களின் கல்வியறிவைப் பொறுத்துத்தான் இருக்கிறது நமது எதிர்காலம்.

* * * * * *

அன்பினைக் கேட்காதே. கேட்டுப் பெறக்கூடியதல்ல...அன்பு. நீ அன்பு செலுத்து. தானாகவே நீ பிறரின் அன்புக்குப் பாத்திரனாகிவிடுவாய்.

* * * * * *

நமது முன்னோர்கள் மிகப் பெரியவர்கள்தான். ஆனால் உண்மைக்கும், அவர்கள் பெருமைக்கும் தற்சமயத்தில் தொடர்பில்லை. அவர்கள் ஒரு குறித்த காலத்தில் ஒரு குறித்த கருத்தைக் கொண்டிருந்தார்களென்றால் அதே கருத்தை என்றும் நாம் மூடப்பிடிவாதத்துடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில்லை. நம் முன்னோர்களை நாம் போற்றுவோமாக! ஆனால் நமது சிந்தனையைச் சரியான வழியில் செலுத்திச் சிந்திப்போமாக. அவர்கள் கருத்துக்களை மடத்தனமாக மேற்கோள் காட்டாமல் இருப்போமாக!

* * * * * *

அரசாங்க நிர்வாகப் பொறுப்பிலிருப்பவர்கள் கொள்கை வெறியர்களாக இருக்கக்கூடாது. பிரத்தியட்ச நிலைமைகளை உணர முயல வேண்டும். எது சரி, எது தவறு என்பதனை நம் நாட்டு மக்களின் நன்மையின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்து இயங்க வேண்டும். கொள்கை வெறியர்களாக இருப்பது சுலபம். நாட்டு நிர்வாகத்தை நடத்த மிக உயர்தரமான திறமை வேண்டும்.

* * * * * *

பத்திரிகைகளைப் படித்தால் உலகத்தில் நடக்கும் சமாச்சாரங்கள் தெரியும்.

பத்திரிகைகளிலாவது புத்தகத்திலாவது சொன்னதெல்லாம் உண்மை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. விவேகத்தை உபயோகித்து எது பொய், எது உண்மை என்று ஆராய்ந்தே முடிவுக்கு வரவேண்டும்.

# தலைவர்களுடன் ராஜாஜி


மகாத்மா காந்தியுடன்...


சர்தார் வல்லபபாய் படேலுடன்...


பண்டித நேருவுடன்...



டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனுடன்...


வினோபா பாவேயுடன்...



லால்பகதூர் சாஸ்திரியுடன்...


கென்னடியுடன்...



மவுண்ட் பேட்டன் தம்பதியருடன்...


கஸ்தூரிபா மற்றும் பலருடன்...



ஜின்னாவுடன்...




டிரான்ஸ்மிஷன் (மின்விசை)
கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்




டிராக்டர் இணைப்பு (Trailers)
வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும்
ஏற்ற பலவித மேசை, நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு
தோல் பொருட்கள்


# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது


**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014

# ராஜாஜிக்கு அறிஞர்கள் புகழ்மாலை

—தொகுப்பு: எஸ். வி. எஸ்.



"இந்தக் காலத்தில் சமூக சீர்திருத்தம் பற்றிப் பேசுவது எவருக்கும் எளிது. அந்தக் காலத்தில் அதைத் துணிந்து செயல் படுத்திய முதல் பார்ப்பனர் ராஜாஜியே ஆவார். ராஜாஜி இருந்திருக்கவில்லையானால் காந்தியாரே சமபந்தி போஜனத்திற்கும், சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்கும் இசைவு தந்திருக்கமாட்டார்."

—பெரியார் ஈ.வே.ரா.

ராஜாஜி மிக உறுதியான கருத்துக்களும் நம்பிக்கைகளும் கொண்டவர். எது நேரினும் அவற்றைப் பிடிவாதமாகப் பற்றிக் கொண்டிருப்பவர். அவர் பல்வேறு பிரச்சினைகளுக்கு அணுகுமுறையில் காந்தியடிகளின் அடிப்படை வழிமுறையை ஒப்புக் கொண்டாரே தவிர, என்றும் எந்தக் கருத்தினையும் தாம் சொந்தமாகச் சிந்திக்காமல் ஒப்புக் கொண்டதில்லை.

மகாத்மா காந்தியிடம் எங்களுக்கிருந்த பக்தியின் விளைவாக மகாத்மா காந்தியின் முன்னால் சிந்தனா சக்தி மழுங்கி அவர் கூறுவதைப் பகுத்தாராய முடியாமல் போய்விடும். ராஜாஜிக்கோ மகாத்மா காந்தியடிகளிடம் அளவுகடந்த பற்றும், நம்பிக்கையும் இருந்தாலும்-அவர் தம் சிந்தனா சக்தியைத் தம் வசம் விட்டுப்போக அனுமதித்ததில்லை. எது நிகழ்ந்தபோதிலும், அவர் தாம் ஆராய்ந்து கண்ட முடிவில்தான் நிற்பார். அப்படி யார் வார்த்தையையாகிலும் ஏற்றுக் கொண்டாரென்றால் அதைப்பற்றி அவர் தாமே தீர ஆராய்ந்த பிறகே மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்.

ஆகவே, ராஜாஜி சில நேரங்களில் எங்களிடமிருந்து மாறுபட்டாலும், அல்லது பல நேரங்களில் எங்களோடு ஒத்துப்போனாலும், எப்போதும் எங்கள் முன்னுள்ள எந்தப் பிரச்சினைக்கும் அவர் தமது கூர்த்த மதியினால் ஆராய்ந்து கூறும் கருத்துக்கள் மெய்சிலிர்க்க வைப்பதாக இருக்கும்.....மொத்தத்தில் ராஜாஜி, அடிப்படையில் பாரத நாட்டின் மிக உயர்ந்த மனத்தின் பிரதிநிதியாவார்.

—ஜவாஹர்லால் நேரு,


அடுத்த இதழிலும் ராஜாஜி குறித்த செய்திகள் இடம்பெறும்

ராஜாஜி தமது நீண்ட பணியினால் மக்கள் மதிக்கும் நிலைக்கு உயர்ந்துவிட்டார். தமது நாட்டு மக்கள் மட்டுமல்ல, உலக நாடுகளின் மக்கள் அவரைப் பெரிதும் போற்றுகின்றனர். அவரைப் பெற்றெடுத்த தாயகம் பெருமிதம் கொண்டால் அது நியாயமே!

—ஸர் முகம்மது ஸப்ருல்லா,
பாகிஸ்தான்.

ராஜாஜியைப் போன்ற கிடைத்தற்கரிய உயர்ந்த உள்ளம் படைத்தவரை மதிக்க அவர் சொல்லும் கருத்துக்கள் எல்லாவற்றுடனும் ஒத்துப் போக வேண்டும் என்பதில்லை. பிறருக்குத்தான் ராஜாஜி முரண்பாடுடையவராகத் தோன்றுகிறாரே தவிர, பர்க்கைப் போல், அவர் உள்ளம் முரண்படாமல் ஒரே சீராக இயங்கி வருகிறது. அவர் மட்டும் இந்தியா சுதந்தரம் அடைந்த ஆரம்ப ஆண்டுகளில் நாட்டையாள அனுமதிக்கப்பட்டிருந்தால், காந்தீயக் கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவந்திருப்பார்!

—டபிள்யூ. ஆர். க்ராக்கர்,
முன்னாள் ஆஸ்திரேலிய நாட்டின் தூதர்.



நான் ராஜாஜியை மிகப் பெரிய மனிதர் என்பேன். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே மிக நெருக்கடியான கட்டங்கள் ஏற்பட்ட நேரங்களில்கூட அவர் தமது நடுநிலைமையையும் நேர்மையையும் இழந்துவிடவில்லை. தமது மக்களுக்கு விழுங்க முடியாத கசப்பானதாக இருக்கும் என்று தெரிந்தும் தமது சீரியநல்ல யோசனைகளை வழங்கியிருக்கிறார். அந்த யோசனைகளை ஏற்று நடந்திருந்தால், இந்தத் துணைக்கண்டத்தில் அமைதி ஏற்பட்டிருக்கும். இந்தியாவின் கவுரவம் உலக அரங்கில் பெரிதும் உயர்ந்திருக்கும்.

—பீல்டு மார்ஷல் முகம்மத் அயூப்கான்,
முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதி

# அய்ந்தாவது உலகத்தமிழ் மாநாடு

அய்ந்தாவது உலகத் தமிழ் மாநாடு 1980-ஆம் ஆண்டு ஜனவரியில் மதுரையில் நடைபெறும்.

இம்மாநாடு செனீகல் என்ற நாட்டில் ஆப்பிரிக்காவில் நடைபெறுவதாக இருந்தது. அந்நாட்டினர் விழாக் கொண்டாடுவதை, திரும்பப் பெற்றுக் கொண்டதையடுத்து 5-வது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968-ல் நடைபெற்றது.

தற்பொழுது, சங்கம் வைத்து, தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலாம், மதுரைத் திருநகரில், 5-வது உலகத் தமிழ்மாநாட்டை நடத்த அண்ணாவின் வழி வந்த புரட்சித் தலைவர் தலைமையிலான தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

விழா சிறப்பான முறையில் கொண்டாடப்படும். மதுரை காமராஜ் பல்கலைக் கழக ஆதரவுடன் நிகழ்ச்சிகளில் பல நாட்டு அறிஞர்கள் கலந்து கொள்வார்கள்.

உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாகக் கொண்டாட முதல்வர் தலைமையில் விழாக் குழு அமைக்கப்பட இருக்கிறது.

—இவ்வாறு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.



# ஸோக்ரதர் போன்ற ஒருவர்

—திரு.வி.க

"இந்நூலை ஆங்கிலத்தினின்றும் தமிழில் பெயர்த்தெழுதிய ஆசிரியர், திருமிகு சேலம், சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார். இப்பெரியார், மக்கள், ஆன்மாவை மறந்து, சத்தியம் தவறி, அறியாமையால் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொண்டு, பாழுக்கு உழைத்து வரும் வேளையில் அன்னார்க்கு அறியாமையை உணர்த்துமாறு ஒத்துழையாமை தோன்றி இயங்கும் நேரத்தில், தாம் அவ்வியக்கத்தில் சேர்ந்து சத்தியம் காத்தற் பொருட்டுச் சிறைக்கோட்டம் நண்ணிய காலத்தில், அறியாமை உணர்ந்து, மெய்யறிவு பெற்ற ஒரு சத்தியாக்கிரகியின் மரண தண்டனை வரலாற்றை எழுதியது போற்றத்தக்கதே.

ஸோக்ரதர் வரலாற்றை ஸோக்ரதர் போன்ற ஒருவர் எழுதுவதே சிறப்பு. ஏனையோர் சொல்லில், சொல்லணியில் அறிவைச் செலுத்தி எழுதுவர். நமது ஆச்சாரியார் தமது உடல் சிறைப்பட்டுத் தமது உயிர் சுதந்தர இன்பத்தில் தோய்ந்து கிடந்தபோது இந்நூலை மொழி பெயர்த்திருக்கிறார். இந்நூலை வாசிக்கும்போது கிரீஸ் தேசமும், நியாய மன்றமும், ஸோக்ரதர் பிரசங்கமும், சிறைச்சாலையும், அவர் போதனையும், சகித்தற்கரிய அவரது மரணக் காட்சியும் புலனாகி மனத்தைக் கவர்ந்து செய்கையறச் செய்கின்றன. இது நூலாசிரியன் மனநிலையைப் புலப்படுத்துகிறது. கசிந்து கசிந்துருகிப் பாடினோர் பாடலை ஓதுவோரும் கசிந்து கசிந்து உருகுதல் இயல்பு. இதை எழுதிய போது ஆசிரியர் இராஜகோபாலர் தம்மை மறந்து ஸோக்ரதராயிருந்தார் என்பது இந்நூலை வாசிக்கும் சத்தியாக்கிரகிகளுக்கு இனிது புலனாகும். இந்நூலை ஸோக்ரதர் போன்ற ஒருவர் எழுத நேர்ந்ததைக் குறித்து தமிழ்நாடு கழிபேருவகையுறும் என்பதில் ஐயமில்லை."

—ராஜாஜியின் 'ஸோக்ரதர்' என்ற நூலுக்கு தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்கள் எழுதிய முகவுரையிலிருந்து......

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!




"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

